இலக்கியம் ஈந்த தமிழ்

★

கா. அப்துல் கபூர், எம். ஏ.,
கல்லூரி முதல்வர், பேராசிரியர்,
ஹாஜி கருத்த ராவுத்தர் கெளதியா கல்லூரி,
உத்தமபாளையம், (மதுரை மாவட்டம்)

★

சாந்தி நூலகம்

கண்டனூர் : : 2/122, பிராட்வே
இராமநாதபுர மாவட்டம் சென்னை-1.

முதற்பதிப்பு : ஆகஸ்டு – 1957

விலை ரூபாய் இரண்டு

நாதன் அன் கோ., 77, மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி-8

பதிப்புரை

"மனித முயற்சியின் உயர்ச்சியானது பாலைவனத்தைப் பசுஞ்சோலை யாக்கியுள்ளது; காடுகளை நாடாக்கியுள்ளது; மலைகுடைந்து வழிகண்டு, நிலங்குடைந்து நிதிகண்டுள்ளது; விண்ணை முட்டும் இல்லங்களையும், கண்ணைக் கவரும் சாலைகளையும் சமைத்துள்ளது. உணவிலே புதுமை! ஊர்தியிலே புதுமை! உடையிலே புதுமை! நடையிலே புதுமை! அணியிலே புதுமை! அனைத்திலும் புதுமை!" — இவ்வாறு கூறும் இந்நூலாசிரியர் பேராசிரியர் கா. அப்துல் கபூர் எம். ஏ., அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். மாணவருலகம் மிக நன்கறியும். புன்னகை பூத்த முகமும், காண்போரைக் கனிவிக்கும் தோற்றமும், இன்சொல் கூறும் பண்பும் அவரது தனிச் சிறப்புகள்; பகைவரையும் பிணித்துவிடும் நல்லியல்புகள். பேராசிரியர் அவர்கள் சிறந்த கட்டுரை வன்மையுடன், பாவன்மையும் நாவன்மையும் வாய்க்கப்பெற்றவர்கள். தமிழகத்தில் மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளிலும் கன்னித் தமிழ்ப் பணியாற்றி வருபவர். இந்நூலையளித்த அவர்களுக்கு எங்கள் நன்றி! சொற்செறிவும் பொருட்செறிவும் நிறைந்த வாக்கியங்கள் வாயிலாக எளிய இனிய அருவியோட்டத்தைப் போன்ற அழகிய நடையில் அவர்கள் வாசகர்களுக்கு வற்ருத இன்பத்தை வாரி வழங்குகிருர்கள்.

"புதுமை வளர இலக்கியம் வளரும். இலக்கியம் வளரத் தமிழ் மொழி வளரும். தமிழ் மொழி வளரத் தமிழகம் வளரும். தமிழகம் வளரத் தாரணி வளரும்" — இந்நூலின் இறுதியில் அமைந்த இப்பகுதி அவர்களின் உள்ளத்தையும் ஆர்வத்தையும் உரிய முறையில் காட்டுகின்றது. தமிழன்பர்கள் இதற்குத் தகுந்த ஆதரவு தந்து எங்கள் தமிழ்ப் பணிக்கு ஊக்கமூட்ட வேண்டுகிருேம். நூலினை விரைவில் வெளியிடவேண்டுமென்னும் ஆர்வத்தால் நுழைந்துவிட்ட குறைகளை ஆசிரியரும் வாசகர்களும் பொறுத்தருள வேண்டுகிருேம். அடுத்த பதிப்பில் அவை நிறைவுறும்.

— சாந்தி நூலகத்தார்

முன்னுரை

வாழப் பிறந்த வளமார் மொழிகளுள் ஒன்ருகிய தமிழ் மொழி உலகுக்கீந்த உயர்தனிச் செல்வங்கள் பல. நனி சிறந்த நாகரிகமும், மிக உயர்ந்த பண்பாடும், வனப்பொழுகும் வரலாறும், எழில் பொழியும் இலக்கியமும் அவற்றுள் சில. அச் சிலவற்றுள்ளும், இன்றளவும் குன்ருமல் எஞ்சி நிற்பது இலக்கியச் செல்வம் ஒன்றே எனலாம். இலக்கியச் செல்வத்தின் துணைகொண்டே ஏனைய செல்வங்களின் இயல்பினை நாம் ஒருவாறு உணர்கின்ரேம்.

தொன்மை வாய்ந்த தமிழ் மண்ணில் வாழ்ந்துயர்ந்த நம் முன்னேர்களின் நல்லுள்ளங்களில் முகிழ்த்தெழுந்த எண்ணங்களெல்லாம் இலக்கியச் சோலையின் இணையிலா மலர்களாகப் பூத்துப் பொலிவடைகின்றன. அம்மலர்களின் மணத்தினை நுகர்ந்த பிற்காலப் புலவர்கள் குயில்களைப்போன்று குரலெழுப்பி எழில் பெருக்கினர். மலர் மணமும் இசை இன்பமும் இணைந்து நின்று, கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தளிக்கின்றன. அவ்விருந்தினை அருந்தின், தேம்புகின்ற வாழ்வுக்கொரு தெம்பினைப்பெற முடியுமென்னும் எண்ணத்தின் அடிப்படையில் தோன்றுவது, 'இலக்கியம் ஈந்த தமிழ்!'

இந்நூலுள் அடங்கியுள்ள கட்டுரைகளிற் பல வானில் வந்தவை. அவை, சில மாறுதல்களுடன் வெளிவருகின்றன. உடன்பாடீந்த வானெலி நிலையத்தாருக்கென் நன்றி! தூங்கிக் கிடந்த என்னைத்தட்டி யெழுப்பி இம்முயற்சியிலீடுபடுத்திக் கவர்ச்சியாக நூலினை வெளியிட்ட சாந்தி நூலகத்தாருக்கென் நெஞ்சம் நிறைந்த நன்றி! அன்பு கூர்ந்து மதிப்புரை வழங்கிய பேராசிரியர் மா. இராசமாணிக்கனர் அவர்களுக்கென் உளங்கனியும் நன்றி!

உத்தமபாளையம்
15—8—'57

கா. அப்துல் கபூர்.

மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

டாக்டர் மா. இராசமாணிக்கனர் எம். ஏ., எல். டி.,

எம். ஓ. எல்., பி. எச். டி. அவர்கள்

மகிழ்ந்தளித்த

மதிப்புரை.

"இலக்கியம் ஈந்த தமிழ்" என்னும் பெயர்கொண்டு மிளிரும் இந்நூல், தமிழ் வளர்த்த பண்பாடு, இலக்கியம் காட்டும் எழிலரசிகள், கவிதையில் உவமை, சீட்டுக் கவி, நாட்டுப் பாடல் களில் வரலாறு முதலிய பதினெரு கட்டுரைகளைக் கொண் டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் தக்க இலக்கிய மேற்கோ ளுடன் எழுதப்பட்டுள்ளது. தமிழ்நடை படிக்கப் படிக்க இனிமை பயப்பதாக உள்ளது. மிகப் பெரிய வாக்கியங்கள் ஒரு சில இருக்கின்றன. ஆயினும் அவை படிக்க இன்பந் தரும் முறையில் எளிய நடையில் அமைந்துள்ளன. பல நூல் களில் காணப்பெருத எளிய - இனிய செந்தமிழ் நடையை இந் நூலிற்கண்டு அகமகிழ்கின்றேன். இந்நூல் தமிழார்வம் உள்ள பொதுமக்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்க்கும் இலக்கிய அறிவையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டவல்லது. இந் நூலாசிரியர்க்கு இயற்கையாக அமைந்துள்ள எளிய இனிய செந்தமிழ் நடையில் மேலும் பல நூல்கள் வெளிவரல்வேண்டு மென்பது எனது பெருவிருப்பம். ஆசிரியரது இந்நன் முயற்சியை யான் உளமாரப் பாராட்டுகின்றேன்.

மதுரை,
15—7—'57

மா. இராசமாணிக்கன்

பொருளடக்கம்

1. தமிழ் வளர்த்த பண்பாடு

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு என்பன போன்ற சொற்கள் இன்றைய உலகின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுதியாக ஒலித்துவரக் காண்கிறோம். பல்லாண்டு காலம் அடிமைத் தளையிலே சிக்கி மிடிமை வாழ்வு நடாத்திய நாடுகள் விழிப்படைந்து விடுதலை யடைந்ததும், களிப்படைந்து முன்னேற விழை கின்றன.

பண்டையோர் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டும் கண்டை நிகர் இலக்கியங்களும், மக்கள் அழகுணர்ச்சியின் நுண்ணிய உயிர்ப்பெனத் திகழும் அருங்கலைகளும், அகத்தையும் புறத்தையும் ஒருங்கே உயர்த்துவதற்குதவுகின்ற நாகரிகமும், இவை மூன்றாலும் உருவாக்கப்படுகின்ற பண்பாடும் ஒரு நாட்டு முன்னேற்றத்தின் ஒப்பில்லாத் தூண் களெனச் சொல்லலாம். ஆகவே முன்னேற்றத்தை நோக்கி விரைந்து செல்ல விழைகின்ற மக்கள், இலக்கியத்தைப் போற்றுகின்றார்கள்; கலையை வளர்க்கின்றார்கள்; நாகரிகத்தைக் குறித்துப் பேசு கின்றார்கள்; பண்பாட்டின் மேம்பாட்டை உணர் கிறார்கள். இந்நிலையிலேதான் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பே இன்சுவை இலக்கியங்களையும் கவின் பெறு கலைகளையுங்கொண்டு நாகரிக வாழ்வு நடாத்திய நற்றமிழ் நாடு, பண்டைப் பெருமைகளை எண்ணி எண்ணி மகிழ்கின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அழியாமற் போற்றிவந்த பண்பாட்டின் உயர்வினை உன்னியுன்னி உவகை பூக்கின்றது.

'பண்பாடு என்னும் சொல்லே அதன் பொருளைத் தெளிவாக விளக்குகின்றது. வறண்ட நிலத்திலே வளமாக நீர் பாய்ச்சி, ஏர் பூட்டியுழுது,பண்பட்ட நிலத்திலே விதையினை விதைத்து, எருவிட்டு வளர்த்துக் களைபிடுங்கிக் காத்து, பொன்னெனக் குலுங்கும் செந்நெல்லைக் கண்டு சிந்தை குளிர்கின்றான் உழவன், வண்டமிழ்ப் பண்பைத் தண்டமிழ்க் குறளால் பாடி வான்புகழ் கொண்ட வள்ளுவனும், பண்பாடு வளர்க்கும் செஞ்சொல்லோவியர்களான புலவர் பெருமக்களை உழவுக் கண்கொண்டு நோக்கினான்.

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

எனப்பாடினான். படைவீரர்கள் வில்லையே ஏராகக் கொண்டு பகைப் புலங்களை உழுகின்றார்கள். சொல்லாய்ந்த கூத்தர்களாகிய புலவர்களோ, சொல்லையே ஏராகப் பிடித்து மக்கள்தம் நெஞ்சக் கழனியை உழுது பண்படுத்தி, நற்கருத்தாம் வித்துக்களை விதைத்து, நல்வாழ்வாம் பயிரைக்கண்டு மகிழ்கின்றார்கள். இவ்வாறு வாழ்வுப் பயிரின் வித்தெனத்தகும் கருத்துக் கருவூலங்களைக் கன்னித் தமிழிலே வடித்தெடுத்த புலவர்கள், தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பொருத்தமான இடங்களிலே புலப்படவைத்துள்ளனர்.

ஒரு நாட்டின் உயர்வு, அந்நாட்டு மக்களைப் பொருத்ததே எனப் புகன்றார் பைந்தமிழ் மூதாட்டி ஔவை பாட்டி. நாடாயிருப்பினும் காடாயிருப்பினும், பள்ளமாக இருப்பினும் மேடாக இருப்பினும் நிலம் பெருமைக்கு அடிப்படையன்று. விண்ணை முட்டும்

மலைகளும், கண்ணைக் கவரும் இயற்கை யெழிலும், இன்பச் சோலைகளும் இனிய சாலைகளும், வற்ருத ஆறுகளும் வளமான வயல்களும் இருப்பதனுல் நாட்டிற்கு உயர்வு வராது. வறண்ட பாலைவன மாயினும், ஆங்கு வாழ்கின்ற மக்கள் நல்லவர்களாகி விட்டால், அந்நிலம் பெருமைக் குறியதாகிறது. இது கருதியே,

“ நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே,”

என வாழ்த்தினர் ஔவை. இதனையே இன்னெரு முறையில்,

“ உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு”

என்ருர் வள்ளுவர்.

நாடு நாடாகத் திகழ வேண்டுமாயின் மக்களை வருத்தும் பசிப்பிணி இருத்தல் கூடாது. பசிப்பிணி யுடன் உடற்பிணியும், உட்பகையும் வெளிப்பகையும் இல்லாத நாடே நாடென நவின்ருர் நாவலர் பெருந்தகை.

இத்தகைய நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எத்தகைய நாகரீகத்தைப் பின்பற்றி வாழவேண்டு மென்பதையும் வள்ளுவத் தோன்றல் தெள்ளுதமிழ் களஞ்சியத்திலே தெளிவூட்டத் தவற வில்லை.

"பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்பது அப்பெரு நாவலர் பேருரை. நம்மொடு பழகிய ஒருவர், நமது உணவில் நஞ்சு கலந்து கொல்லத் துணிகின்ருர். அந்த நேரத்தில் அதைக்கண்டுணர்ந்து நாம் கூறிவிட்டால், அவர் உள்ளம் எவ்வளவு வேதனைப்படு மென்பதை யுணர்ந்து, அந்நஞ்சு கலந்த உணவைக்கூட நாம் உண்டு அமைய வேண்டும். அதுவே யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புபவர் செயல். இத்தகைய உள்ள உயர்வுதான் தமிழ் வளர்த்த நாகரிகம். இந்நாகரிகம் உருவாக்கிய பண்பாடு தான் திருக் குறளின் உயிர்நாடி போல, 'பண்புடைமை' என்னும் தலைப்பினைத் தாங்கி மாருத முறையில், நூருவது அதிகாரமாகவும் அமைந்தது. 'உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே' என்னுமாப்போல் பண்புடை யோரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ள தாகி இயங்குகின்றதென்ற கருத்தையும் இங்கு தான் வள்ளுவர் வெளியிடுகின்ருர். அறிவின் சிறப்பையும் ஆற்றலையும் குறித்து வானளாவப் புகழ்ந்த வள்ளுவர்- "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற முடிவுக்கு வந்த வள்ளுவர் - அறிஞர் பெருமகன் ஒருவனைப் பார்க்கின்ருர். அவனே அரம் போன்ற திறமுடையான்: தன் அறிவுத் திறத்தால் அவனியின் அறிஞர் பெருமக் களையெல்லாம் வென்று வெற்றிக்கொடி நாட்டியவன். எல்லாம் அறிந்தான்; ஆனல் மனிதப் பண்பு அவனிடத்தில் மருந்துக்குக்கூட கிடையாது. ஆகவே அவன் வள்ளுவர் கண்களுக்கு ஓங்கி வளர்ந்ததோர் கம்பமெனக் காட்சி தருகின்ருன்.

“ அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் ”

இதுபோன்று, அறிவிருந்தும் பண்பிழந்த மக்களை வள்ளுவனார் காய்கின்ற இடங்கள் மிகப்பல. பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாதவனை நோக்கி, “அறிவினான் ஆகுவ துண்டோ ?” என்கிறார். சான்றோர், உறுப்புகளால் உயர்வு பெற்றிருக்கின்ற ஒருவனையோ, ஒருத்தியையோ மனிதப் புனிதனெனக் கருதி மதி மயங்கார். பரந்த மார்பும் விரிந்த நெற்றியும், அறிவொளி வீசும் கண்களும், அழகொளி மிளிரும் முகமும், குன்றனைய தோளும், கண்டனைய மொழியும் வாய்க்கப் பெற்றான் ஒருவன். அறல்போல் கூந்தலும், பிறைபோல் திருநுதலும், கொலைவில் புருவமும், குவளைக் கண்ணும், எட்பூ நாசியும், எழிலார் காதும், பாலைச் சிரிப்பும், பவழமேனியும் வாய்க்கப் பெற்றாள் ஒருத்தி. இவர்கள் இருவரும் மனிதனென்னும் தகுதியைப்பெற வேண்டுமாயின் எந்த அளவுக்குப் பண்புடையவர்களென்பதையே நோக்குதல் வேண்டும்.

“ உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு ”

வள்ளுவரின் இவ்வாய்மொழிக் கொப்ப, உறுப்புக் குறைவுபட்டும் இன்றளவும் இலக்கியத்தில் புகழ் மணம் பரப்பிப் பொலிவுடன் திகழும் புலவர் பெருமக்களைப் பார்க்கிறோம். அவர்கள் பெற்றிருந்த பண்பாட்டின் காரணமாக, அங்கம் குறைந்தும் தங்கமெனத் திகழ்கின்றார்கள். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

அந்தகக் கவி வீரராகவ முதலியார், இரட்டைப் புலவர்கள் மாம்பழக்கவி சிங்கநாவலர் போன்ருேர் இதற்குப் போதிய சான்ருவர்.

இவ்வாறு பண்டைத் தமிழர் கண்ட மனிதப் பண்பையே தமிழ்ப் பண்பெனப் பகர்கின்ருேம். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணிலே ஊறிக் கிடக்கின்ற உயரிய பண்பாக அது காட்சி தந்து கனிவிக்கின்றது. சங்கத்துச் சான்ருேர் தந்த சொல்லோவியங்களின் உயிர் நாடியென அது ஒளிவிடுகிறது. கணியன் பூங்குன்றனுர் பாடிய பாட்டின் தொடக்கம் இப்பண்பாட்டின் அடிப்படையை அழகுற அமைத்துக் காட்டுகிறது.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்!" இதுவே தமிழ்ப் பண்பாட்டின் தலையாய நிலை. பண்டைநாட் புலவர்களும், இடைக்காலப் பிற்காலப் புலவர்களும், இவ்வுயரிய கொள்கையையே பல்வேறு உருவங்களில் தங்கள் கவிதைகளிலும் காவியங்களிலும், தனிப்பாடல்களிலும், பெருநூல்களிலும் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனப் புகன்ருர் பெருநாவலர் பெருந்தகை. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ருர் திருமந்திரம் தந்த திருமூலர். சோழ நாட்டிலே பிறந்து, பாண்டி நாட்டிலே கணவனைப் பறிகொடுத்து, சேர நாட்டிலே கோயில் கொண்ட கண்ணகியின் வரலாற்றைக் கன்னித் தமிழிலே பாடினுர் இளங்கோ வடிகள். அயோத்தியிலே அன்புத் தம்பியர் மூவரைக் கொண்டு, கங்கைக் கரையிலே வெங்கரியின் ஏறனைய வேடன் குகனுடன் தோழமை பூண்டு, குரங்கினத் தலைவனும் சுக்ரீவனை

அன்போடணைத்து, அரக்கர் குலத்தின் வீடணனையும் உடன் சேர்த்து, உடன்பிறந்தோர் எழுவரெனக் கருதிய இராமனின் காதையைப் பாடினான் கம்பன் "பிறப்பில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை" என்னும் இன்றையப் புரட்சிக் கவிஞர்களின் எழுச்சிக் குரலும் இப்பண்பாட்டின் அரணாகவே அமைந்து விடுகின்றது. மக்களினத்தின் ஒருமையையும் பெருமையையும் ஐக்கிய நாட்டவையினர் ஆராய்ந்து கூறுவதற்கும் எத்தனையோ ஆண்டுகட்கு முன்னால் அவை தமிழர்களின் குறிக்கோளாக இலங்கின என்பதை நினைக்கவே நெஞ்சு இனிக்கின்றது.

இப் பண்பாட்டிலே ஊறிய தமிழன், அலைகளைப் பிளந்தும், மலைகளைக் கடந்தும் அயல் நாடுகளிலே அடியெடுத்து வைத்தான். ஈழத்தையும், கடாரத்தையும், மலையாவின் சோலைகளையும், ஜாவாவின் சாலைகளையும், ஆப்பிரிக்காவின் காடுகளையும் தனது சொந்த நாடுகளாகவே கருதினான். அங்கு வாழ்ந்தோரை யெல்லாம் உடன் பிறந்தோராகக் கருதி உறவு பூண்டான். அழகு நகர்களை அமைத்தான்; உழைத்து உழைத்து மண்ணான நிலத்தைப் பொன்னான நிலைக்கு மாற்றினான். உள் நாட்டிலும் உயர்ந்த நிலையிலே வணிகம் வளம் பெற்றது.

"நீரில் வந்த நிமிர்பரி புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்

கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

இவ்வாறு உலகப் பொருட்களெல்லாம் தமிழகத்துக் கடை வீதிகளிலே குன்று போலக் குவிந்து கிடந்தன. வணிகத்தின் நிமித்தம் வந்த வடவரும், சீனரும், கிரேக்கரும், உரோமரும், அராபியரும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வைக்கண்டு உவந்து சென்றனர்.

இப்பண்பாடு சமயத் துறையிலே ஒப்புயர்வற்ற ஓர் ஒருமை நோக்கைப் பயந்தது. உள்ளொளி பெருக்குவதில் சிந்தையைச் செலுத்திய தமிழகம். பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்களின் பிறப்பிடம். மனித குலத்தின் உயர்வுக்காகப் பாடுபட்ட சமய நெறிகள், தமிழகத்திலே பரவிய வரலாறு, விந்தைக்குரியதாகவே அமைந்துள்ளது. அமைதியான நெறியைக் கைக்கொண்ட அவ்வரலாற்றினை, அனைத்துலக மக்களுக்கும் ஒரு வழிகாட்டியெனக் கொள்ளலாம். இன்பத் தமிழகத்திலே வாழ்ந்த அன்புத் தமிழர்கள், மொழியாலும் பண்பாலும் அழியாத உறவு பூண்டு வாழ்ந்தனர். ஒரு தாய் வயிற்றிலே பிறந்த செம்மல் செங்குட்டுவனும் இளவல் இளங்கோவடிகளும், முறையே சைவராகவும் சமணராகவும் வாழ்ந்தனரென அறிகிறோம். சிலம்புச் செல்வம் தந்த அவ்விளங்கோவுடன், மணிமேகலைக் காப்பியம் தந்த பௌத்தராகிய சாத்தனார். ஆராத நட்பினால் ஆர்க்கப்பட்டிருந்தார்.

பொற்சைவ வைணவமும்
புத்தபிரான் பொன்னுரையும்
நற்சமண கிருத்துவமும்
நபிகள்பிரான் நல்லுரையும்
பற்பலவா யிருந்திடினும்
பைந்தமிழின் பண்பேற்று
கற்போரைப் பிடித்திழுத்துக்
கனிதமிழின் சுவையூட்டி
நாயன்மார் நாவமுதும்
நல்லாழ்வார் பாசுரமும்
மேயபுகழ் மேகலையும்
மேம்படுசிந் தாமணியும்
மாமுனிதேம் பாவணியும்
மாண்பேறு சீருவும்
காமுறவே எல்லோரும்
கண்ணூரக் கண்டோதும்
காவியமாய் இந்நாட்டில்
கதிர்வீசக் காண்கின்றோம்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பண்பாடு விளைத்த பயன் இதுதான். அப்பண்பாட்டை வளர்த்த பரம்பரையிலே வந்த கன்னித் தமிழ்க் காவலர்கள் கடமையுணர்ந்து வாழ்தல் வேண்டும். வாழ்க செந்தமிழ்!

2. கவிஞன் நோக்கில் வையகப் பரிவு.

செல்வத்துட் செல்வம், செவிச் செல்வம்; அச் செல்வத்தினுயிர் கவிச் செல்வம். புவிச் செல்வம் பெற்ற பெருவேந்தர்கள் கவிச் செல்வர்களின் கருணையினாலேயே இன்றும் உலகில் வாழ்கிறார்கள். 'செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளில் சீரிய, கூரிய தீஞ்சொல் வவ்விய' கவிஞர்களே ஒரு நாட்டின் நிலையான புகழுக்குக் காரணமாவார்கள். கவிதைக் கன்னியின் அருட்பார்வைக்கு ஒருவன் ஆளாகி விட்டால்' என்றும் பொன்றாப் புகழுடன் மக்கள் மனங்களிலே மங்காத இடம் பெற்று விடுவான். 'ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையதுகொண்டு மெய்யது பொத்திக் காலதுகொண்டு மேலது தழீஇப் பேழையுள்ளிருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளன்' என்றும் நல்லறிஞர் நாவுகளில் நிலைத்து விடுகிறான்; உலகத்தார் நெஞ்சுகளிலெல்லாம் உயிர் வாழ்கிறான். கண்ணையிழந்தவர்களும், காலையிழந்தவர்களும், நோயால் உழந்தவர்களும் இலக்கிய வானின் இணையறு மீன்களாக இலங்குகிறார்கள். தெருத் தெருவா யலைந்து தெவிட்டாத கவிதைத் தேனை வாரியிறைத்துப் பிச்சையெடுத்து வாழ்ந்த ஹோமரின் இலியட், இன்று உலகப் பெருங் காவியமாகப் போற்றப்படுகின்றது. ஆங்கிலப் புலவர் கோல்ட்ஸ்மித் கடன் தொல்லையால் ஏழு நாட்கள் சிறையிலே சிக்கிக் கிடந்தார். "எருசலத்தின் வீழ்ச்சி" யென்னும் எழிலார் நூலளித்த இத்தாலியப் பெருங் கவிஞர் டேஸ்ஸோ, மெழுகுவத்தி வாங்கக்

காசில்லாது, தனது பூனையின் கண்ணொளியிற் கவிதை எழுதினராம். மிடிமைச் சுழியிலே சிக்கித் தவித்த இவர்களனைவரும், இன்று சிறப்புடன் நின்றிலங்கக் காரணம், அவர்கள் வாழ்வினையும், வாழ்விற் கண்ட பொருட்களையும் நோக்கிய நோக்கேயாகும்.

கவிஞனின் நோக்கு ஏனையோர் நோக்குகளினின்றும் பெரிதும் வேறுபட்டது. நல்லின்பம் பொழிவதற்கு நகைத்து வரும் தண்சுடரும், வல்லிருளைக் கவ்வுதற்கு வந்துதிக்கும் வெஞ்சுடரும், இனிய மலரும் கனியுமுதவும் இன்தருவும் செடி கொடியும், மணம் விரவி உடல்தழுவி மனங்கவரும் மாருதமும், விலைகுறையாப் பொருளளிக்கும் நிலை குலையா மாமலையும், மலைமகளின் தொங்கலைப்போல் வழிந்தோடும் அருவிகளும், அலைக்கரத்தால் நிலம் வருடும் ஆழ்கடலும், வான்வெளியும், பச்சைப் படாம் போர்த்தது போன்ற பசும்புற்றரையும் பலருக்கும் மனமகிழ்வை யூட்டலாம். ஆனல் அவற்றின் அழகைக் கவிஞன் நோக்குகின்ற முறையே வேறு. காலைக் கதிரவனைக் காணுகின்ற கவிஞன், 'புல்லை நகை யுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதி' யிலே சொக்கி விடுகிருன். மூங்கிலிலை மேலே தூங்கும் பனிநீரை இமைகொட்டாமல் நோக்கி வியந்து நிற்கிருன். வானவில்லைக் கண்டதும் அவனுள்ளம் துள்ளுகிறது. குயிலின் குரலைக் கேட்டதும் அவனிதயம் இளகி ஓடுகிறது. உலகத்தார் வியந்து போற்றும் தாஜ்மகாலைக் கண்டால் 'காலத்தின் கன்னத்திலே அது ஒரு துளிக் கண்ணீர்' என இரங்குகின்ருன்.

ஒரே மலர், ஒரே நேரத்தில், பார்க்கின்ற பலரின் நோக்கினை யொட்டிப் பல நினைவுகளை எழுப்பக் காண்கிறோம். வணிகனொருவன் ஊதியநோக்குடன் அதனைப்பார்க்கிறான். தாவர நூல் வல்லான் அதனை இத ழிதழாகப் பிரித்தெடுத்து ஆராய்கிறான். காதலனுக்கு அம்மலர், கனிமொழியாளின் கருங்கூந்தலை நினைவு படுத்துகிறது. பக்தனோ, 'பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி, அப்பனிமலரெடுக்க மனமும் நண்ணேன்' என இதழ்களினுள் இறையைக் காண்கிறான். ஆனால் இம்மலர் விலங்கின் கைப்பட்டால் 'குரங்கின் கைப் பூமாலை' என்பது போலச்சிதையுண்டு சீரழிகிறது. கவிஞனும் இதே மலரைக் காண்கிறான். அவனது நோக்கு எத்தனையோ காட்சிகளைக் காண்கிறது. ஆங்கிலக்கவிஞன் வேர்ட்ஸ் வொர்த் பொன்னிற மலர்கள் தென்றலிலாடும் இன்பக்காட்சியை இமை கொட்டாமல் பார்த்து விட்டு, அக்காட்சி ஓய்வு நேரங் களில் உள்ளத் தெழுப்பும் வற்றாத உவகையை வளமார் கவிதைத் தேனாய் வடித்துத் தருகின்றான். மலையாளப் பெருங் கவிஞன் குமாரனாசான் வீழ்ந்த மலரொன்றிற்காகக் கண் கசிந்து பாடிய கவிதை, மலை யாள இலக்கியத்தில் நெஞ்சையள்ளும் செஞ்சொல் லோவியமாக நின்றொளிர்கிறது. மலர்க்கொடியால் ஈன்றெடுக்கப்பட்டுத் தளிர்த் தொட்டிலிலே தென்றற் செவிலி தாலாட்ட வளர்ந்து, அரசியாகத் திகழ்ந்த அம்மலர், வாடி வீழ்ந்து புழுதி புரளக்கிடப்பது கவிஞன்உள்ளத்தையே கலக்கி விடுகிறது.

உர்தூப்பெருங்கவிஞர் அல்லாமா இக்பால் சோலை மலர்கள் தென்றலிலே ஆடுவதைக்கண்டு உள்ளம் உலையக் கூறுகிறார்: 'தென்றலில் ஓரிதழ் அசைந்

தாலும் அது என் இதயத்தே எதிரொலித்துக் கண்ணீர்த் துளியாய் வெளிவருகிறது. மலர்களைக் கசக்கிப் பிழிந்த உதிரம் என்னும் காரணத்துக்காக ஒரு மராட்டியப் புலவன் பன்னீரைத் தீண்டாது வாழ்கிறான். தமிழ்க் கவிஞர்களின் வாழ்வனைத்தும் மலர் மணமே நிறைந்திருக்கக் காண்கிறோம். குறிஞ்சி முல்லை போன்ற அகத்திணைகளும், வெட்சி, வஞ்சி போன்ற புறத் திணைகளும், பனம்பூ, வேப்பம்பூபோன்ற மூவேந்தர் சின்னங்களும், அசோகு தாமரை போன்ற அநங்கன் கணைகளும், குவளைக் கண், குமுத வாய் போன்ற உவமைகளும் இவ்வுண்மையை விளக்குவன. இற்றை நாள் தமிழ்க் கவிஞன் ஒரு தாமரை மலரைப் பார்க்கின்றான், பாடுகின்றான்: 'ஓரிதழ் குழந்தைக் கன்னம்; ஓரிதழ் விழியை யொக்கும்; ஓரிதழ் தன் மணாளன் உருவினைக் கண்டு கண்டு பூரிக்கும் உதடு; மற்றும் ஓரிதழ் பொல்லார் நெஞ்சம்; வாரித் தரச்சிவந்த உள்ளங் கையாம் மற்றொன்று.' பல்வேறு கோணங்களிலிருந்து நோக்குகின்றவர்க்கு ஒரு மலர் எத்தகைய எண்ணங்களை எழுப்புகின்ற தென்பதையும், கவிஞன் நோக்கு ஏனையோர் நோக்குகளினின்றும் எவ்வாறு வேறுபட்டதென்பதையும் கண்டோம். எந்நாட்டுக் கவிஞனாயினும், எக்காலத்துக் கவிஞனாயினும் அவனது பார்வையிலே ஒரு பரிவைக் காண்கிறோம். வையகத்து மக்களுக்காக, உயிருருக, உளமுருக, மெய்யுருக, வாயுருகப் பாடுகின்ற இயல்பு, கவிஞன் நோக்கின் கவினுர் பெருமையாக அமைந்து விட்டது. இதுவே வையகப் பரிவு.

வையக மெல்லாம் பசியும் பிணியுமற்று, வசியும் வளனும் சுரந்து, எல்லா எழிலும் சிறந்தோங்க வேண்டு மென்பதில், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த கவிஞர்கள் உலேயாத ஆர்வம் பூண்டிருந் தனர். இடம், காலம் என்னும் கட்டுப்பாடுகளேக் கடந்தும், மனித குலம் என்னும் எல்லேயைத் தாண்டி யும், கவிஞர்களின் இவ்வார்வம் தங்கு தடையின்றிப் பள்ளத்துட் பாயும் வெள்ளம் போற் சென்று பரந்து இன்பப் பூங்காக்களே எழுப்பிற்று. சிறப்பாகச் செந்தமிழ் நாட்டிலே இப்பண்பு சங்க காலம் முதற் கொண்டு பொங்கி வழிகிறது. நேர்மையை மறந்து, நீதியைப் புறக்கணித்து, வேந்தர்கள் ஒருவருக் கொருவர் முட்டி மோதவிருக்கும் தருணங்களில், வருந்துகின்ற மக்களுக்காகப் பரிந்து பேசுகின்ற பைந்தமிழ்ப் பாவாணர்கள் பற்பலர். சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரை முற்றுகை யிட்டிருக்கின்ருன். கருவூர் வேந்தனே கடிமரம் தடியும் ஓசையைக் காதாற் கேட்டும் வாளா விருக்கிருன். 'இவ்வேந்தனேடு போரிடுதல் நாணுதற்குரியது' என்று கிள்ளி வளவனுக்கு முன்னல், கொஞ்சமும் அஞ்சாமல் கூறுகிருர் ஆலத்தூர்கிழார். மாரி ஈகை மறப்போர் மலேய னென்பதாகக் கடையெழு வள்ளல்களின் வரிசையிலே கவின் பெற்றிலங்கும் மலேயமான் திருமுடிக்காரியின் பிஞ்சிள மைந்தர்களேக் கிள்ளிவளவன் பகைமை காரணமாக யானேக்காலில் இடறிக்கொல்ல விருக் கிருன். இச்செய்தியைச் செவி மடுத்த கோவூர் கிழார் சிறுத்தை போலச் சீறிச்சென்று, மன்னனின் மரபினே யும் வள்ளலின் வண்மையையும் விளக்கிக்கூறி, சிறுவர்

களைக் காக்கின்றார். இது போன்றே, இளந்தத்தனார் என்னும் புலவரை ஒற்றனென்று நினைத்துக் குற்றம் சாட்டிக் கொல்லத் துணிந்த காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளிக்குப் பிறர்க்குத்தீதறியா பரிசில் வாழ்கை யின் பண்பினை விளக்கிக் காட்டி விடுதலை வழங்குகிறார். பெருங்கல் நாடன் பேகன் என்னும் வள்ளல். கற்பும் பொற்பும் செறிந்த தனது இல்லறத்துணைவியாம் கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்த ஞான்று, கபிலரும் பரணரும் அரிசில் கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் தாம் பரிசில் பெறுவதைவிடக் கண்ணகியின் கண்ணீரை மாற்றுவதையே கடனெனக்கொண்டு,பேகனைத் திருத்திய பெருமையைப் பெறுகின்றனர். இவ்வாறு, தான் மட்டும் வாழாது, உலகத்தையும் வாழ்விக்க வேண்டும் என்ற கருத்துடன் வாழ்ந்த உயர் பெருங் கவிஞர்கள், வள்ளல்களிடமிருந்து பெரும் பரிசில்களைப் பெற்றவிடத்து, அதைத் தமக்கே பயன் படுத்திக் கொள்ளாது, எல்லோருக்கும் வாரி வழங்குவது பொருத்தமானதே யாகும்,

தமிழ்ப் பெருங்காப்பியங்களின் தொடக்கத்தில் நாம் கண்ணுறும் நாட்டு வளமும், நகர் வளமும், கவிஞர் தம் வையகப் பரிவின் வளமுறு சின்னங்கள் எனக் கூறலாம். கம்பன் காட்டுகின்ற கோசலமும், திருத் தக்க தேவர் காட்டுகின்ற ஏமாங்கதமும், வில்லியார் விளக்குகின்ற குருபாஞ்சாலமும், வீரமா முனிவர் விளக்குகின்ற யூதேய நாடும், உமறுப் புலவர் உரைக் கின்ற அரபு நாடும், அவ்வந் நாட்டு வளங்களைக் காட்டுகின்றனவெனக் கொள்ளுதல் பொருந்தாது. அவை யனைத்தும் கவிஞர் பெருமக்களின் கற்பனை

யிலே முகிழ்த்த குறிக்கோளுலகெனக் கொள்ளுவதே பொருந்துவதாகும். வண்மையும், திண்மையும், உண்மையும், வெண்மையும் இல்லாத நாட்டையும், எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலால் இல்லாரும் உடையாரும் இல்லாத நகரத்தையும், கவிச் சுவையுடன் கவிஞன் விளக்கிக்கூறும்போது, வையகப் பரிவுடன் அவன் கண்ட கனவுலகமே செஞ்சொல்லோவியமாக வெளிவருகின்றதென மதிப்பிடுதல் வேண்டும்.

மதுரையம்பதியில் இறை முறை பிழைத்த பாண்டியன் நெடுஞ்செழியனால், ஏசாச் சிறப்பின் மாசாத்துவான் புதல்வன் கொலையுண்ண விருக்கும் கொடிய நிகழ்ச்சியையும், அதன் விளைவாகக் கற்பின் கொழுந்து கண்ணகியடையவிருக்கும் துன்பத்தையும் கூறுவதற்கு முன்பே, இளங்கோ வடிகளின் அருளுள்ளம் அலை மோதுகின்றது. 'கோவலன் கொலையுண்டான்! என்னும் செய்தியைச் செவிமடுக்கும் ஆற்றலைப் படிப்பவர்களும் பெறவேண்டும். அதற்குப் பொருந்திய முறையில் கோவலனும் கண்ணகியும் மதுரைமாநகரை அணுகுகின்ற போதே, கவிஞனின் பரிவு கனிந்தொழுகத் தொடங்கி விடுகிறது. பாம்பறியும் பாம்பின் கால் என்பதைப்போல,பெண்கள் தானே பெண்களின் துன்பங்களை யுணர முடியும். புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி, வையை யென்னும் பொய்யாக்குலக் கொடியும் ஒரு பெண் கொடிதானே! ஆகவே அவள் கண்ணகிக்கு நேரவிருக்கும் துயரத்தை முற்கூட்டியே அறிந்தவளைப்போல, கவலை காரணமாகத் தோன்றிய கண்ணீராகிய தண்ணீரை யெல்லாம் மறைத்துக் கொள்வதற்காக, நறிய மலராடையால் மெய்யினைப்

போர்த்திச் செல்கின்ருள். அது மட்டுமா? இயற்கையனைத்துமே இருவருக்காகவும் வருந்துகின்றன. கோட்டையின்மீது கட்டப்பட்டிருக்கின்ற கொடிகள் காற்றிலே அசைகின்ற காட்சி, கோவலனை நோக்கி, 'இங்கே வராதே போ!' என்று கை காட்டுவதைப் போல் கவிஞர் கண்ணுக்குத் தோன்றுகின்றது. பின்னர், ஆயர் முதுமகள் மாதரி வீட்டில், கோவலனுக்கு அமுதூட்டு முன்பு, கண்ணகி நிலத்திலே நீர் தெளிக்கின்ற காட்சி, மண்ணக மடந்தையை மயக்கொழிப்பனள்போல் அமைந்ததாம்.

இன்று அறிவியற் கலையின் வளர்ச்சியினல், நானிலத்தின் நாடுகளெல்லாம் தொலைவினை வென்று நெருங்கி வாழ்கின்ற நிலையினைப் பெற்றிருக்கின்றன. உள் நாட்டு நிகழ்ச்சிகளும், வெளி நாட்டு நிகழ்ச்சிகளும் கவிஞர்களின் உள்ளங்களை விரைவாகக் கவ்விப் பிடிக்கக் காண்கிருேம். அறியாமை யிருளிலே சிக்கி அடிமைத் தளையினல் சிதைந்து தவித்த, தமது நாட்டையும், பிற நாடுகளையும் குறித்துப் பைந்தமிழ்ச் சாரதியாம் பாரதியார் பாடிய கவிதைகள் பலப்பல. இன்னுயிர் தந்து, நமையீன்று வளர்த்து அருள் தந்த நாடு—அன்னையர் தோன்றி, மழலைகள் கூறி அறிந்த நாடு—அவர் கன்னியராகி, நிலவினிலாடிக் களித்த நாடு—பொன்னுடல் இன்புற நீர் விளையாடி இல் போந்த நாடு—உரிமையற்று உழல்வதை உணர்ச்சி ததும்ப விளக்கிக் காட்டினர் பாரதி.

"வீர சுதந்திரம் வேண்டி நின்ருர் பின்னர்
வேருென்று கொள்வாரோ? என்றும்
ஆரமுதுண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?"

என்பதாகச் சுதந்திரத்தின் பெருமையை யுணர்த்தித் தூங்கிக்கிடந்த உள்ளங்களைத் துள்ளியெழச் செய்தார். பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களிலே இந்தியப் பெண்கள், கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துவதையும்,நெஞ்சங் கொதித்துக்கொதித்து மெய் சுருங்குவதையும் காதைச் சுடும் கவிதைகளாகப் பாடினார். இத்தாலி நாட்டு மாஜினி 'வாலிப இத்தாலி' என்னும் சங்கத்திலே யுரைத்த ஒருரையைக் கேட்டதும், பாரதியின் பரிவு நாட்டெல்லையையும் தாண்டிச் சென்றது. 'இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்' எனும் முறையில் ருஷ்ய நாட்டையாண்ட ஜாரின் வீழ்ச்சியைக் கேட்டதும் மகிழ்ச்சியால் துள்ளினார்.

சமுதாயக் கட்டுப்பாடுகளால் அடக்கி யொடுக்கப்படுகின்ற மக்களின் நிலைக்காக வருந்தி, அவர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற நற்கருத்துக்கள், பாரதியின் கவிதைகளிலே பரந்து கிடக்கின்றன. சிப்பாயைக் கண்டஞ்சியும், துப்பாக்கியைக் கண்டு வீட்டிலொளித்தும், அப்பால் செல்வோனின் ஆடையைக் கண்டு பயந்தும், எப்போதும் கைகட்டிப் பூனைகள் போல், ஏங்கி நடக்கும் பாரத மக்களின் நிலையைக் கண்டு,

'நெஞ்சு பொறுக்குதில்லையே! — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்'

என்பதாக உருகி நின்றார். இப்பரிவு மக்கள் குலத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. வாயில்லாப் பறவைகளும் விலங்குகளும், உயிரில்லாக் கல்லும் புல்லும் கவிஞன் கருணைக்கு ஆளாகின்றன.

'காக்கை குருவி எங்கள் சாதி—உயர்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்'

என்னும் பாரதி பாடலும்,

'ஈயும் எனக்குத் தோழன்,
ஊரும் எறும்பும் எனக்கு நேசன்;
நாயும் எனக்குத் தோழன்-குள்ள
நரியும் எனக்கு நண்பன்'.

என்னும் கவிமணியின் கவிதையும், நமது கருத்துக்கு விருந்தளிப்பன. இவ்வாறு மனித சமூகத்தின் எல்லையைத் தாண்டி, எல்லாப் பொருட்களுடனும் உறவு கொண்டாடுதல் கவிஞனுக்கே உரிய தனிப் பெருமை. சின்னஞ் சிறு குருவியும், கன்னங் கரிய காக்கையும் கண்ணெதிரே வீற்றிருந்து பேசும் பேச்சைக் கவிஞனே புரிந்து கொள்கிறான். கவர்ச்சியற்ற கருமை நிறம் வாய்ந்த காக்கையிடத்துக் கவிஞன் காணுகின்ற காட்சி எத்துணை உயரியது! கரிய செம்மலாம் கண்ணனின் தோற்றத்தை யன்றோ காக்கைச் சிறகு காட்டி நிற்கிறது! மரங்களெல்லாம் அவன் பச்சை நிறத்தை யன்றோ கொண்டு நிற்கின்றன! தொட்டால் சுட்டெரிக்கின்ற நெருப்புகூட இறைவனைத் தீண்டுகின்ற இன்பத்தை யன்றோ அளிக்கிறது!

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன்
கரியநிறம் தோன்றுதையே-நந்தலாலா
பார்க்கு மிடங்க ளெல்லாம் நந்தலாலா-நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே-நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா-நின்னைத்
தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா"

கவிமணியவர்களின் பாடல்களில் இவ் வையகப் பரிவு, வற்ருத ஊற்ருய்ச் சுரந்தூறுவதைக் காணலாம். அவர், கல்லின் கதைகளெல்லாம் இரு காது குளிரக் கேட்பார்; புல்லின் பேச்சுமறிவார்; அதைப் புராணமாக விரிப்பார். வண்டியும், வண்டி மாடும், வண்டி பூட்டு கின்ற கயிறும், வண்டல் கிண்டி உழுவோனும் அவ ருக்கு அற்புதப் பொருட்கள். பெண்ணினத்தின் உயர் வுக்காகக் கனிவுடன் பரிந்து பேசும் முறை, கவிமணி யின் கவிதைகளுக்கே ஒரு தனிச் சிறப்பளிக்கிறது. அல்லும் பகலும் உழைத்து, உள்ளத் தன்புததும்ப எழுந்து, கல்லும் கனியக் கசிந்துருகி, ஊக்க முடைந் தழும் ஏழைகளுக்காக உள்ளம் உருகித் துடித்து, நோயாளியைக் காக்க அண்டையிலேயே அகலா திருந்து, அன்பினுக்காகவே வாழ்ந்து, அன்பில் ஆவியைப் போக்கத் துணிகின்ற பெண்களை, உலகத் துக் கற்பகத் தருக்களெனப் பாராட்டி,

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடவேண்டு' மென்கிருர்.

என்னே வையகப் பரிவு! காணுகின்ற காட்சிகளை யெல்லாம், இவ்வாறு பரிவுடனே நோக்குகின்ற இயல்பு, எல்லா நாட்டுக் கவிஞர்களிடத்திலும் அமைந் துள்ளதெனினும், அதைக் கூறுகின்ற முறையிலே தமிழ்க் கவிஞர்களிடத்து ஒரு தனிச் சிறப்பைப் பார்க்க லாம். தமிழ்க் கவிஞர்கள் தாங்கள் கண்டறிந்த உண் மைகளைத் தமிழகத்திற்கு மட்டும் சொல்லாது அனைத்துலகுக்கும் வாரி வழங்குகின்ற ஒரு சீரிய இயல்பு, சிறந்த பெருநூல்களின் முதற் செய்யுட்களி லெல்லாம் அணிபெற அமைந்துள்ளது.

3. இலக்கியம் காட்டும் எழிலரசிகள்

“ காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்;
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்டவிட மெலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்.
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டம்
தனிலந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.”

கவிஞன் இவ்வாருகத் தான் காணுகின்ற பொருட் களிலெல்லாம் அழகைச் சுவைத்து இன்புறுகின்ருன். தான்பெற்ற இன்பத்தைக் கவிதைத் தேனிலே வடித் தெடுத்து வையகமெல்லாம் வாரி யிறைக்கிருன். இவ் வாருகக் காணுகின்ற பொருட்களினுள் நுழைந்து, அழகை நுகர்வதும், நுகர்ந்த அழகை அழியாமற் காப்பதுந்தான் கலையின் உயிர் நிலையாகக் கருதப் பட்டு வருகின்றது. எல்லா நாடுகளிலும், எல்லா மொழிகளிலும், எல்லாக் கா்லங்களிலும் வாழ்ந்த சொல் லேருழவர்கள் இப்பணியைத்தான் தத்தம் இயல்புக் கேற்றவாறு இனிதே செய்து போயினர்.

கவிஞர்களின் நோக்கும், வாக்கும் மிக நுட்பமா னவை; சாதாரண மக்களின் நோக்கினின்றும் வாக்கி னின்றும் பெரிதும் மாறுபட்டவை. கவிஞர்கள் அழகிய மலரைப் பார்த்து அகமகிழ்வதோடு மட்டுமன்றி, கல்லை யும் கவிபாடச் செய்வார்கள்; புல்லையும் புகழ் வீசச் செய்வார்கள். அவர்கள் இழிந்த பொருட்களைக்கூட இன்ப ஊற்ருக மாற்றும் ஆற்றல் பெற்றவர்கள். ஆங்

கிலக் கவிஞன் வேர்ட்சுவொர்த் (Words Worth) வான வில்லைக் காணும்போது வற்ருத இன்பங் கொண்டான். இளங் கவிஞன் கீட்ஸ், நைட்டிங் கேல் என்ற பறவை யின் குரலைக் கேட்டுப் பரவசமடைந்தான். வானத் தின் மேகங்கள் புரட்சிக் கவிஞன் ஷெல்லி என்ற செஞ் சொல்லோவியனுக்கு அழியாத புகழை அளித்தன. 'வீழ்ந்த பூ' மலையாளக் கவிஞன் குமாரனுசானை மகா கவியாக மாற்றியது. வசந்த காலத்தின் வருகை உர்தூப் பெருங் கவிஞர் அல்லாமா இக்பாலின் உள்ளத்தைத் துள்ளச் செய்தது. கன்னங்கரிய காக்கை, மக்கட் கவிஞன் பாரதியின் உள்ளத்திற்கு கண்ணனைக் காட் டியது. தொட்டால் சுட்டெரிக்கும் நெருப்பு, அவனுக்கு நந்தலாலாவைத் தீண்டுகின்ற பேரின்பத்தைப் பெய்தது. வண்டியும், வண்டிமாடும், வண்டி பூட்டுகின்ற கயிறும் வண்டல் கிண்டி உழுவோனும், பறக்கும் குருவியும், கறக்கும் பசுவும் கவிமணியவர்களின் உள் ளத்தைக் கனிவித்தன.

இயற்கையின் இன்பக் காட்சியிலே புலவர்கள் காண்கின்ற மகிழ்ச்சி மட்டற்றது. இயற்கையின் அழ கிலே ஈடுபடாத கவிஞர்களே இல்லையெனலாம். சங்க காலத்திலே வாழ்ந்த கவிஞர்கள், அவ்வியற்கையோடு இரண்டறக் கலந்து இன்ப வாழ்வு நடத்தினர். அவர் தம் செய்யுட்களனைத்தும் இயற்கை யழகின் இணை யற்ற ஓவியங்களெனலாம். எட்டுத் தொகையும் பத் துப் பாட்டும், கற்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் அழகிய காட்சிகளைப் பெற்றுத் திகழக் காண்கிருேம். மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத் தனுர் ஒரு சோலையைப் பார்க்கின்ருர். மதுரைமா நகரில் பாண்டியன் அவைக்களத்திலிருந்து பழகிய அவருக்

குச் சோலையும் மன்னனின் அவைக்களமாக மாறி விடுகிறது. காய்கதிர்ச் செல்வனின் கடுஞ்சுடர் நுழை யாமல் தண்ணிழல் வீசும் ஒரு நறுஞ் சோலை. சோலைக் குள்ளே தும்பிகள் குழலூதுகின்றன. வண்டுகள் யாழ் மீட்டுகின்றன. நிலத்திலே மயிலாள் களிநடம் புரிகின்ருள். அந் நாட்டியத்திற்கு முழவு ஒலியைத் தருகின்றது, கம்பங் கோழிகளின் கனத்த குரல். பாட்டு வேண்டுமல்லவா? அதோ குயிலாள் மரக்கிளையி லிருந்து குரல் கொடுக்கிருள்! இந்தச் சிறப்பெல்லாம் யாருக்காக? கண்ணுடிபோலத் தெளிந்த குளம், பக் கத்திலே உள்ளது. அதனுள், பச்சைப் பசேலென் னும் இலைகளினூடே, ஒரு பெருந்தாமரை மலர் ஏனைய செந்தாமரை மலர்களின் நடுவண், ஒரு சிறந்த மல ரணையாகப் பூத்துள்ளது. அவ்வணையின் மீது ஓர் அரசனைப் போன்று பெருமிதத்துடன் அமர்ந்திருக் கிறது, ஓர் அன்னம். காட்டிலே நடைபெறும் இந் நாட்டியத்தைக் காண்போரும், பொருத்தமாக அமைந்து விடுகின்றனர். அங்குமிங்கும் மந்திகள் குந்தியிருந்து கூர்ந்து நோக்குகின்றன.

இதுபோன்றே, சோழனின் அவைக்களத்திலே பழகிய கம்பனின் கண்கள், மருதநிலத்தே இத்தகைய அரங்கொன்றைக் கண்டு மகிழ்கின்றன. தாமரை மலர் கள் விளக்கேந்தியது போலவும், குளத்தின் அலைகள் மாறி மாறி விழும் திரைகளைப் போலவும், மேகங்களின் குமுறல் முழவினைப் போலவும், வண்டு களின் ஒலி மகர யாழினைப் போலவும் அமைந்திருக் கச் சோலைகளில் மயில்களாடுகின்ற நடனத்தைக் குவளை மலர்கள் வியந்து நோக்குகின்றனவாம். இன்றும் அதே மருதத்தையும், அதே சோலையையுந்

தான் கவிஞன் காண்கின்ருன். ஆனால், இன்று அவன் கண்கள், அதில் களியாட்டத்தைக் காண முடியவில்லை; மாருக, அச்சோலையை ஆக்குவதற்கு அரும்பாடுபட்ட கரங்களின் கடுமுயற்சியைக் கற்பனை செய்கின்றன.

" சித்திரச் சோலைகளே ! உமைநன்கு திருத்த
இப்பாரினிலே
எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தனர்
உந்தம் வேரினிலே "

என்பதாக உள்ளம் நெகிழ உரைக்கின்ருன்.

சூழ்நிலைக் கேற்ப, இயற்கையின் எழிலைக் கண்டு இதயங் குளிர்ந்த புலவர்கள், மங்கையர் எழிலையும் மனமாரப் போற்றியுள்ளனர். சங்க காலம் முதற் கொண்டு இந்நாள் வரையிலே, பல்வேறு காலங் களிலே வாழ்ந்த பைந்தமிழ்ப் பாவாணர்கள், இவ் வழகினை எவ்வாறு கண்டுள்ளனரென்பதை ஆராய்தல் காலத்தின் இயல்பையும், கற்பனையின் வேறுபாடு களையும் விளக்கமுறக் காட்டும். அழகரசிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்ற அழகுப் போட்டியைக் குறித்து நாம் நன் கறிவோம். அப்போட்டியினைக் காணும் வாய்ப்பினை எல்லோரும் எளிதிற் பெற முடியாது. ஆனால் இலக் கியங் காட்டும் அழகரசிகளை எல்லோரும் எப்போதும் கண்டு களிக்கலாம். அவ்வாறு நற்றமிழ்ப் புலவோர் நடத்திக் காட்டுகின்ற ஒரு போட்டியைப் பார்த்து வருவோம்.

முதன் முதலாகத் தெள்ளுதமிழ் வள்ளுவப் பெருந்தகை ஓரழகியை அரங்கிற்கு அறிமுகம் செய்து வைக்கிருர். தலைவியினழகைத் தலைவன் வாய்மொழி

யாகக் கூறுவதே பொருத்தமுடையதெனக் கருது கின்றார். மாலை நன்னேரம், மகிழ்வு பூக்கும் ஒரு சோலையிலே, தங்கப் பதுமை போன்ற மங்கையொருத்தியைக் காண்கின்றான், ஓர் ஆணழகன். அவளழகு அவனை வியப்பிலே ஆழ்த்துகிறது. 'தேவமகள் இவள் யார்?' என்று பாடத் தொடங்குகின்றான். அவளை அடிமுதல் முடிவரைக் கூர்ந்து நோக்குகின்றான். அவள் பாதம் நிலத்திலே தோய்ந்திருக்கக் காண்கிறான். கண்களும் குறிப்புணர்த்தி இமைக்கின்றன. ஆகவே, அவள் விண்ணுலக மடந்தை யன்றெனத் தெளிந்தான். சோலையிலே காணப்படுவது காரணமாக அவளோர் ஆராய்ந்தெடுக்கப்பட்ட மயில் விசேடமோவென அடுத்தபடியாக நினைக்கின்றான். அவள் காதிலே தொங்குகின்ற குண்டலங்கள் அவ்வெண்ணத்தையும் மாற்றி விடுகின்றன. இறுதியில், அவள் மண்ணுலக மடந்தையே யென்னும் முடிவுக்கு வருகின்றான். எனினும், ஓர் ஐயம் அவன் மனத்தைக் குழப்புகின்றது. இதோ பாட்டு!

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு."

மூவகை எண்ணங்களால் குழப்பமடைந்த தலைவனின் மன நிலையை ஈரடிகளில் வடித்தெடுத்துக் காட்டுகின்ற வள்ளுவன் வாழ்க!

பத்துப் பாட்டுகளுள் ஒன்றாகிய பொருநராற்றுப் படை இரண்டாவ தழகியைக் காட்டுகின்றது. ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், அழகியின் ஒவ்வோருறுப்பையும் இயற்கைப் பொருட்களுக்கு உவமித்துக் காட்டுகின்றார். கருமணல் போன்ற கூந்தல்; மூன்றாம்

பிறையினையொத்த நெற்றி; கொலைத் தொழில் புரியும் வில்லினையொத்த புருவம்; இலவின் இதழ்களை நினை வூட்டும் இனிய மொழியமுதைப் பொழியும் வாய்; அத னுள் வரிசையாக அமைந்த முத்தையொத்த பற்கள்; கத்தரிக்கோலின் கைப்பிடியை யொத்த குண்டலங்க ளைக் கொண்டாடும் காது; வெட்கம் தாக்குவதால் சற்றே சரிந்த அழகிய கழுத்து; மூங்கிலையொத்து மென்மை யாகப் பருத்த தோட்கள்; மெல்லிய மயிர் வரிசைகளை யுடைய முழங்கை; உயர்ந்த மலையுச்சியிலே மலர்கின்ற காந்தட்பூவை யொத்த கைவிரல்கள்; அவ்விரல்களில் கிளி வாயைப்போல் வளைந்த நகங்கள்—இவ்வாறு தொடர்ந்து முடி முதல் அடி வரைச் செல்கின்றது அச் செஞ்சொல் லோவியம்.

மூன்ருவது ஒரு துறவியார் காட்டுகின்ற அழகி யினைக் காண்போம்.

'கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்!'

என்றெல்லாம் ஆங்காங்கு பல அழகிகளைக் குறித்து அணி நயந்தோன்றப் பாடிய சீரிய செந்தமிழ்ச் செல்வர் இளங்கோவடிகள், சிலம்புச் செல்வத்தினுள் இல்லற விளக்காம் கண்ணகியின் நல்லியல்புகளைக் கோவலன் வாயிலாகக் கூறுவதைக் கேட்கவேண்டும்.

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமுதே யென்கோ!"

என்றெல்லாம் துணைவியின் நலந்துய்த்த வணிக குலத் தோன்றல் வாய்விட்டுப் பாராட்டுவது சொல்லழகும் பொருளழகும் பெற்றுக் கற்போர் கருத்துக்கு விருந் தளிக்கின்றது.

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து
உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்னும் குறளிலக்கணத்துக்கு இலக்கியமாய்ப் பொன் னும், முத்தும், விரையும், கரும்பும், தேனும் அமைந்தது கருதி மகிழத் தக்கது. கலைச் சுவைஞன் கோவலன் இல்லறத் துணைவியின் இயல்பினை நாகரிகமாக நவில் வது எவ்வளவு பொருத்தம்!

அடிகளாரின் அருந்தமிழ்க் காப்பியங் கேட்ட சீத் தலைச் சாத்தனுர், தமது காப்பியத்துள் மாதவி யீன்ற மலர்க் கொடியாம் 'மாபெரும் பத்தினி, மகள் மணிமே கலையின்' அழகினைத் தொடக்கத்திலேயே நயம்படக் காட்டுகின்ருர். சித்திரப் பாவை போலமர்ந்து மலர் தொடுத்துக்கொண்டிருந்த மணிமேகலை,பெற்ருேருற்ற பெருந்துயர் கேட்டு,சிந்தை நெகிழ்ந்து,கண்ணீர் சிந்து கின்ருள். மதிபோன்ற முகத்திலே யமைந்த நீலோற் பல மலர் போன்ற கண்களின் கடை மணியிலிருந்து கண்ணீர் சுரந்து பெருகுகின்றது. இக் காட்சியை மன் மதன் கண்டுவிட்டால் தனது தொழிலுக்குரிய மூல தனத்தை இழந்ததாகக் கருதி, மங்காத தொழிலுக்கு வந்த பங்கத்தால், கன்னல் வில்லையும் ஐமலர்க் கணை களையும் அப்படியே வீசி யெறிந்துவிட்டு நடுங்குவா னும். அதுமட்டுமா? மணிமேகலையை ஆடவர் கண்டு விட்டால் அகலாமல் சுற்றிச் சுற்றி வட்டமிடுவார்

களாம். அவ்வாறு மணிமேகலேயால் யாரேனும் கவரப்படாமல் இருப்பார்களாயின் அவர்களின் ஆண் மையைத்தான் ஐயுற வேண்டுமாம்.

''மணிமே கலேதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன ளுயின்
படையிட்டு நடுங்குங் காமன் ; பாவையை
ஆடவர் கண்டால் அகறலு முண்டோ ?
பேடிய ரன்ரே பெற்றியின் நின்றிடின்.''

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவராம் சேக்கிழாரையும், இத்தகைய அழ குணர்ச்சி விட்டுவிடவில்லே. 'ஆத்திச் சூடி இளம்பிறை யணிந்து, மோனத்திருக்கும் முழுவெண் மேனியானின்' கோலத் திருப்பணியிலே குலவிய சுந்தர மூர்த்தி நாயனுர், பரவை நாச்சியாரைப் பார்க்கின்ற நேரம் ; பரவையாரின் திருவுருவிலே ஈடுபட்ட பக்தரின் நெஞ் சப் பாங்கிற்கொப்பப் பேச்சும் அமைந்து விடுகிறது.

''கற்பகத்தின் பூங்கொம்போ;
காமன்றன் பெருவாழ்வோ;
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ; புயல்சுமந்து
விற்குவளே பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ ;
அற்புதமோ ; சிவனருளோ;
யாதோவென் றதிசயித்தார்.''

கற்பகம், காமன், புண்ணியம், எனுஞ் சொற்களேப் பயன்படுத்திப் பாராட்டிய சுந்தரர், கூந்தல், புருவம், கண், வாய், முகம் முதலியவற்றை விளக்கிக் கூற,

'புயல் சுமந்து, வில், குவளை, பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ' வென்றூர். இறுதியிலே 'சிவ னருளோ !' என வியந்தது, சிவநேயச் செல்வரின் சிந்தையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

சைவப் பெருங்காப்பிய அழகியைக் கண்ட நாம், வைணவச் செல்வியின் வனப்பை நோக்குவதும் முறைதானே! மிதிலைச் செல்வியின் மிகு பேரெழிலைப் பல பாத்திரங்கள் வாய்மொழியாகப் பல தன்மைகளில் கம்பன் வரைந்துள்ளான். மஞ்சொக்கும் அளகவோ தியையும், மழையொக்கும் வடித்த கூந்தலையும், பஞ் சொக்கும் அடிகளையும், பவளம்போல் விரல்களையும், கஞ்சம்போல் முகத்தையும், கடல்போலும் விழிகளையும், அஞ்சொற்களையும்,செஞ்சொற்களால்விளக்கியுள்ளான். கங்கையிரு கரையுடைய வெங்கரியினேறனைய குகன், ஓர் இராம பக்தன். அவன் சீதையைக் குறிக்கும் போது, 'அல்லையாண்டு அமைந்த மேனி அழகனும் அவளும்' என்பதாக 'அவள்' என்னும் ஒரே சொல் லைப் பயன்படுத்துவதும் உய்த்துணரத் தக்கது. ஆனல் தனது கூற்ருகக் கம்பன் கூறும்போது, கவிஞர்களைக் குறித்துத் தான் கூறிய தொடர்களையெல்லாம் மனத் துள் நினைத்தே பேசுகின்ருன். செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளில் 'சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்' என்பது அவன் அமைத்த தொடர் தானே! ஆகவே அவனது கற்பனை வேலை செய்கிறது. சீதையின் ஓவியத்தைப் பொருத்தமாகத் தீட்டும் வல்லமை வாய்க்கப் பெற்றவன், மன்மதன் ஒருவனே தான். அவன், ஆர்வம் பிடர் பிடித்து உந்த, சீதையின் உருவத்தைத் தீட்டுவதற்காகத் திரைக்கு முன்னல் சென்றமர்கின்ருன். அமுதக் குழம்பு அருகே வைக்கப்

பட்டுள்ளது. அதனுள் தூரிகையைத் தோய்த்து ஒருறுப்பைத் தீட்டினன். பின்னர் சீதையின் உண்மை யுருவையும் தீட்டிய ஓவியத்தையும் ஒப்பிட்டு நோக்கினன். அவனுக்கே அது பிடிக்கவில்லை. எப்படித் தீட்டி முடிப்பதென்னும் திகைப்பிலே எழுந்து சென்று விடுகின்றான்.

"ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயம்
அமைக்குந்தன்மை
யாதெனத் திகைக்குமல்லால், மதனற்கும் எழுத
வொண்ணு சீதை"

என்பதாக மன்மதனின் திகைப்பிலும் தோல்வியிலும் கம்பனின் கற்பனை வெற்றி பெறுகின்றது.

கம்பனின் கவிச் சுவையிலே ஆடித் திளைத்த அருமைப் புலவர் உமறிடத்தும் இவ்வுணர்வு ஓங்கி நின்றது. ஆனால் அவ்வழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு சீறாவின் ஒரே பகுதிதான் அவருக்கு வாய்ப்பளித்தது. தசைக் கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலத்தில் அடக்கி வைத்த ஆற்றல்களையெல்லாம் கடன் மடை திறந்தாற்போல் வெளிப்படுத்தி அமைதி காண்கின்றார். குழல், புருவம், விழி, இதழ், மொழி போன்ற ஒவ்வொன்றையும் விளக்குவதற்குப் பற்பல உவமைகளைக் கையாளுந் திறம் வியந்து போற்றுதற்குரியது. இதோ ஒரு பகுதி:

"பாலென வெளிராக் கனியென வழியாப்
பசுமடற் றேனெனச் சிதரு
வேலவார் குழலார் செழுங்கரத் தேந்தும்
இளங்கிளி மொழியெனக் குழரு

வேலை வாழமுதம் பிறந்தென வுலகம்
விளங்கிடப் பொன்மழை பொழியச்
சாலவு மிறந்த தருவினந் தழைப்பத்
தாவரும் இனியமென் மொழியாள். ''

அடுத்தபடியாகப் புகழேந்தி புகழும் தமயந்தியைக் காண்போம். நளனுக்கேற்ற நங்கையர் திலகம், தமயந்தியினிடத்து, நாட்டுக்கேற்ற நற்பண்புகளை யெல்லாம் அமைத்துப் பெண்மை யாட்சியின் பெற்றியைக் காட்டி வெற்றி கொள்கிறார் புகழேந்தி.

'' நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும்
நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. ''

என்பது கவிஞர் வாக்கு.

சேரநாட்டுச் செம்மல், வஞ்சியாத வஞ்சியர்கோன், புருடோத்தவன்மன், முன்பின் கண்டறியாத காரிகையைக் கனவிலே கண்டு மயங்குவதைத் திறம்படக் காட்டுகின்றார், மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை :

'' விண்ணணங்கனைய கன்னியர் பலரென்
கண்முன் நின்றங் கிரக்கினும் கலங்காச்
சித்தம் மத்துறு தயிரிற் றிரிந்து
பித்துறச் செய்தவிப் பேதை யார்கொலோ !''

மலை குலைந்தாலும் நிலை குலையாத மன்னனின் உள்ளம், கடையும் தயிர்போலத் திரிந்து பித்தேறித் துன்புறத் தூண்டுகின்றது, அழகின் ஆற்றல். அதுமட்டு

மன்றி, மனோன்மணியைப் பார்த்த கண்ணினால் தேவ மாதரைப் பார்ப்பினுங்கூட, அவர்கள் ஆடவராகக் காட்சி தருகின்றனராம்.

பைந்தமிழ்த் தேர்ப் பாகன் பாரதிக்கு வருவோம். தத்துவ ஞானப் பொருள் தோன்றும் குயில் பாட்டிலே, குயில் ஒரு மங்கையாக மாறுகின்றது.

"சாமி ! இவளழகை
எற்றே தமிழிலிசைத்திடுவேன்?"

எனத் தொடங்குகின்றார் புதுமைக் கவிஞர்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோ
லினிதாவ தெங்குங் காணோம்'

எனப் பாடிய பாவலருக்கு அம் மொழி கூட இவ்விடத்தில் கைகொடுக்க வில்லையாம் ! எனினும் தளராமல், அறிஞர்களுக்கு ஒருவாறு கூற முயலு கின்றார். 'அவள், முத்தமிழையும் பிழிந்தெடுத்த சாறு' எனக் கூறுகின்றார். கவிதை யென்பது கனியை யொத்ததுதானே ! பருவத்திலே கனிகின்ற கனியைப் போலக் கவிதையும் தருணத்தில்தானே தோன்றும் ! அக்கவிதைக் கனியைப் பிழிந்து சாருக்கி, இசைச் சாறும், நாடகச் சாறும் உடன் சேர்த்து அவற்றுடன் அமுதத்தையும் கலந்து காய்ச்சப்படுகிறது. வெயிலின் வெப்பமோ, நெருப்பின் சூடோ இப்பொருளைப் பொருத்தமாகக் காயவைக்க உதவா. ஆகவே ஆய்ந்து நோக்கிக் காதல் வெயிலிலே காய்ச்சிக் கட்டி யாக்கப் படுகின்றது. அக்கட்டியினால் தான் படைப்புக் கடவுள் இவ்வழகியின் உடலை ஆக்கியுள்ளானாம்.

'கவிதைக் கனிபிழிந்த சாற்றினிலே
பண்கூத் தெனு மிவற்றின்,
சாரமெல்லாம் ஏற்றி, இன்னமுதைத்தான் கலந்து
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினுல்
மாதவளின் மேனிவகுத்தான் பிரம்மன்'

இது புதுமைக் கவிஞருக்கேற்ற புதுக் கருத்துத்தானே!

இவ்வாருகப் பல்வேறு காலங்களிலே வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள், நடத்திக் காட்டுகின்ற அழகரசிப் போட்டி, இன்றுகூட இலக்கியத்திலே இடம் பெற்றுப் படிப்போர் மனங்களேக் கவர்ந்து நிற்கிறது. என்றும் நிலேபெற்றிருக்கும் உள்ளழகின் உயர்வைக் காட்டுவதற்காகவே கவிஞர்கள் இத்தகைய புறவழகின் பொலிவுகளே யெல்லாம் திறம்படக் காட்டியுள்ளனர். 'கல்வி யழகே யழகு' என்றும் 'அகத்தின் அழகே அழகு' என்றும் தங்களாராய்ச்சியின் முடிவைப் பலவிடங்களிலும் கூறலாயினர். இலக்கியங் காட்டுகின்ற அழகுப் போட்டியைச் சுவைத்த நாம், அழியாத புகழை வழங்குகின்ற உள்ளழகுப் போட்டியிலே உடனடியாக ஈடுபட வேண்டியது இன்றியமையாததல்லவா ?

---

4. கவிதையில் உவமை

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்று பாடிச் சென்றான் பாடிய வாய்த் தேனூறும் பாரதி. கலைச் செல்வங்களைப் பெருக்கும் முயற்சியிலே நாகரிகமடைந்த நாடுகளெல்லாம் முனைந்து நிற்கும் காட்சியை இன்று காண்கிறோம். வாடிக் கிடக்கும் வாழ்க்கைப் பயிருக்கு வனப்பூட்ட வந்த செழுமழையே கலையாகும். அக்கலை இன்று பற்பல வடிவுகளைப் பெற்றுள்ளது. அவ்வடிவுகள் பலவற்றுள் முதன்மையானது கவிதை. ஏனெனில், கலையின் குறிக்கோள் தன்மைகள் முழுதும் கவிதையிலே கவின்பெற அமைகின்றன. அழகை அழியாமற் காப்பது கவிதை; கவிதையை அழியாமற் காப்பது உவமை. ‘ஒரு புடையொத்து பல புடையொவ்வாத’ இரு பொருட்களிடையே தோன்றும் ஒப்புமையை உவமையானது வெளிக்காட்டுகின்றது. கவிஞன் கருதிய பொருளை விளக்கிக் காட்டுவதற்கு இவ்வுவமை சிறந்ததொரு கருவியாகத் துணை புரிகிறது. சாதாரண மக்களிடையே கூட, ஒப்பிட்டுக் காட்டும் திறம் இயல்பாக அமைந்திருப்பதைக் காணலாம். குறிப்பாக, குழந்தைகளிடத்து இவ்வியல்பு மிகுதியாக அமைந்திருக்கும். செயலாலும் பயனாலும் பண்பாலும் ஒரு புடையொத்த பொருட்களென இலக்கண நூல்கள் இவ்வொப்புமையைப் பிரித்துக் கூறுகின்றன. பகைவர்கள் நடுவண் அஞ்சாது பாய்ந்து வெஞ்சமர் புரியும் வீரனைக் காணும்போது புலியை நினைக்கிறோம். கைம்மாறு கருதாமல் வாரி வாரி வழங்கும் வள்ளலைக் காணும்போது வான்

மழையை நினைக்கிறோம். செக்கச்செவேலென்ற தோற்றத்துடன் சொக்கவைக்கும் அழகியைப் பார்க்கும் போது பவழத்தை நினைக்கிறோம். இதனையே கவிஞன், "புலியன்ன மறவன்," "மாரிபோல் வண்கை", "பவழத்தன்ன மேனி" என்பதாகக் கூறுகிறான், செயலாலும், பயனாலும், பண்பாலும் முறையே இவ் வுவமைகள் உருவாகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இணையற்ற முறையில் வளர்ந்து வரும் இன்பத் தமிழ் இலக்கியத்தில், உவமைகளுக்குத் தகுதி வாய்ந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளது. பண்டைப் புலவர்க ளியற்றிய தண்டமிழ்ச் செய்யுட்களை உய்த்துணர்ந்த மக்கள் உவமைச் சிறப்பை உளங்கனிந்து பாராட்டினார் கள். அப்பாராட்டின் அறிகுறியாக, அப்புலவர்களின் இயற்பெயரை மறந்து அவர்கள் கையாண்ட உவமை களையே பெயர்களாகச் சூட்டிவிட்டார்கள். நறுமணம் கமழும் குறுந்தொகையிலே,

"மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலப்பில் போல புல்லென் றலப்பென் தோழி!"

என்று பாடிய புலவர், அணிலாடுமுன்றிலா ரென வழங்கப்படுகிறார். சொற்றிறம் செறிந்த நற் றிணைப் பாடல்களில்,

"தேய்புரி பழங்கயிறுபோல
வீவதுகொல்லென் வருந்திய உடம்பே"

என்று பாடிய புலவர் தேய்புரி பழங்கயிற்றினாரானார். இவர்களைப்போலவே செம்புலப் பெயனீரார், கல்பொரு சிறு நுரையார், ஊட்டியார், விட்ட குதிரையார், மீனெறி

தூண்டிலார் போன்ற எத்தனையோ புலவர்கள் பழந் தமிழ் மக்களின் உவமைச் சுவைக்குச் சான்றுபகர்வர்.

நமது இலக்கியங்களிலே காணக்கிடக்கும் பல வகை உவமைகளிலே முதலாவதாக நமது கருத்தைக் கவர்வது, இயற்கைப் பொருட்களைக் கையாண்ட இடங்களாகும். நிலங்களை ஐந்தாகப் பகுத்து, அந்நிலங் களுக்குரிய விலங்குகளையும், பறவைகளையும், மரங்களை யும் பின்னணியாக அமைத்து, இயற்கை யெழில் பூத்துக் குலுங்கும் இனிய காட்சிகளிலே ஊறித் திளைத்த மக்கள், சுவை சொட்டும் உவமைகளை அமைக்க முடிந்ததில் வியப்பொன்றுமில்லை. காலையிளம் பருதி யும், மாலையில் மேற்றிசையில் இளகுகின்ற மாணிக்கச் சுடரும், கடற்பரப்பும், ஒளிப்புனலும், மலர்ப் பொழி லும் அவர் தம் அழியாத பாக்களிலே அமைந்துள்ளன. மனதிற்குகந்த மங்கையரின் உறுப்புகளை விளக்குவதற் குச் சங்கப் புலவர்கள் பெரும்பாலும் இயற்கைப் பொருட்களையே பயன்படுத்தி யிருக்கின்றனர். கரு மேகத்தையும் கருமணலையும் கூந்தலுக்கு ஒப்பிட்டனர். முழு மதியையும் தாமரையையும் முகத்திற்கு ஒப்பிட் டனர். பிறையை நெற்றிக்கும், வில்லைப் புருவத்திற் கும், குவளை மலரைக் கண்ணுக்கும், எட்பூவை மூக்குக் கும், இலவிதழை இதழ்களுக்கும், முல்லையைப் பல்லுக் கும், வலம்புரிச் சங்கைக் கழுத்துக்கும், மூங்கிலைத் தோளுக்கும், காந்தள் மலரை விரலுக்கும், கிளியின் வாயை நகத்திற்கும், ஆலிலையை வயிற்றிற்கும், நீர்ச் சுழியை உந்திக்கும், மின்னலை இடைக்கும், யானையின் துதிக்கையைத் துடைக்கும், இளைத்த நாயின் நாவினை அடிக்கும் ஒப்பிட்டு மகிழ்ந்தனர்.

அரிய கருத்துகளை விளக்குவதற்கும் புலவர்கள் இயற்கையிலிருந்தே உவமைகளை ஆக்கித்தரு கின்றனர். 'அணுவைத் துளைத்தேழுகடலைப் புகட்டிக் குறுகத் தறித்த' குறட்பாக்கள் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அன்பில்லாத உயிரை அறக்கடவுள் காயுமென்பதை விளக்க, என்பில்லாத புழுவை வெயில் காயும் காட்சியை வள்ளுவர் காட்டுகின்றார். நீரளவே யாகும் நீராம்பலைப்போல, மக்கள் மனத்தளவு உயர்வர் என்கிறார். மயிரிழப்பின் வாழாத கவரிமாவைப்போலப் பெரியார் மானமழிய வாழாரென்கிறார். மதிக்கண் மறுவைப்போல, குடிப்பிறந்தான் குற்றமும் விளங்கித் தோன்றுமென்கிறார். தொட்ட அளவிற்கு ஊறும் மணற் கேணி போல, அறிவும் கற்ற அளவுக்கு வளருமென்கிறார். அடிநீங்கா நிழல் போலத் தீயவர் செய்த தீமையும் தொடருமென்கிறார். ஆமையைக் காட்டி ஐம்பொறிகளை அடக்கக் கூறுகிறார். மோப்பக் குழையும் அனிச்சத்தை யொத்தவர் விருந்தினர் என்கிறார். இவ்வாறு இயற்கையிலிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடத்தைச் சுட்டிக் காட்டு கின்றார், வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை. இயற்கை கற்பிக்கும் பாடத்துடனேயே தமது ஒழுக்கக் களஞ்சியமாகிய நீதி நெறி விளக்கத்தைத் தொடங்கு கின்றார், குமர குருபர அடிகள்.

"நீரிற் குமிழி யிளமை, நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை........"

என்பது அவர் தம் கடவுள் வாழ்த்தின் முற்பகுதி. அப்பரடிகள் இறை யுணர்வினால்

பெறுகின்ற இன்பத்தை, ஐம்புலன்களுக்கும் ஒரே நேரத்தில் சுவை பயக்கும் ஐந்து இயற்கைக் காட்சிகளுக்கு ஒப்பிட்டுக் கூறுகின்ருர்.

“ மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே ”

என்பதுஅவர் பாடிப் பரவசமடைந்த வாய்மொழியாகும்.

அகப் பொருள் ஒழுக்கங்களை விளக்குவதற்கும் புலவர்கள் இயற்கையிலிருந்து உவமைகளைக் கையாண்டுள்ளனர். தலைவனின் வருகை நோக்கி வாடிய தலைவியின் நிலையையும், தலைவனின் வருகைக்குப் பின்னர் அவளடைந்த பொலிவையும் தோழி வாயிலாக விளக்கும் குறிஞ்சிக் கலி,

“ நீரற்ற புலமே போல், புல்லென்ருள் வைகறைக்
கார்பெற்ற புலமேபோல் கவின்பெறும் ”

எனக் கூறுவது காண்க. மதம் பிடித்த யானையைக கண்டு அஞ்சி நடுங்கும் ஆரணங்கின் நிலையை “சூருறு மஞ்ஞையின் நடுங்க ” எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் கபிலர்.

இவ்வாறு, இயற்கைப் பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் உவமைகளாகக் கையாண்ட புலவர்கள், இயற்கைப் பொருட்களை விளக்கு வதற்கும் அவ்வியற்கையிலிருந்தே உவமைகளெடுத்தனர். கம்பர் காலைக் கதிரவனை நோக்குகின்ருர்.

“ கண்ணுதல் வானவன் கனகச்சடை விரிந்தாலன்ன
விரிந்த கதிர்களெல்லாம் ”

எனப் பாடுகின்ருர். இருட்குலத்தை விழுங்கித் தண்ணொளி பரப்பி எழுகின்ற மதியத்தைப் பார்க்கின்ருர், திருத்தக்க தேவர். பளிங்குக் குடத்திலே பாலேந்திக் கருமையான சேற்றிலே ஊற்றுவதற்கு அக்காட்சியை ஒப்பிடுகின்ருர். சீவகனின் குங்கும மார்பிலே முத்துமாலை இலங்கும் காட்சி, அவருக்குச் செவ்வானிடையே தவழும் பிறை மதியை நினைவூட்டு கின்றது. கலங்கிவரும் காவிரியாறு கடலொடு கலக்கும் காட்சியைக் கூறவந்தார் பட்டினப் பாலை ஆசிரியர். தாயின் மார்போடணைந்து பாலருந்தும் குழவிக்கு அதனை ஒப்பிட்டார். மழை பெய்து மலையிலிருந்து அருவியாக எழுந்த நீர், பேராருகி இறுதியில் கடலுடன் கலக்கின்ற மூன்று பகுதிகளையும் உமறுப் புலவர் விலை மகளுக்கும், விளங்கிழை மகளுக்கும், வணிகனுக்கும் ஒப்பிட்டுக் காட்டுந் திறம் மிகுந்த சுவை பயப்பதாகும்.

இவ்விதமாக, இயற்கைப் பொருட்களனைத்தும், எறும்பு முதல் யானை வரையிலும் - தலையினிழிந்த மயிர் முதல் விண்ணில் விளங்கும் கதிரவன் வரையிலும் – புலவர்தம் நாவிலே பொருந்திப் பொலிவடைந்து நிற்கின்றன. உலகம் பயனற்றதாகக் கருதும் பொருட்களும் புலவர்களின் உவமைக்காகப் பயன்பட்டுச் சிறப்படைகின்றன. சில ஆடுகளின் கழுத்தில் இரு புறங்களிலும் தொங்கிக் கிடக்கும் அதர்களைப் பார்க்கிருேம். அவற்ருல் அவ்விலங்குக்கோ மக்களுக்கோ எவ்விதப் பயனுமில்லை; ஆனுல் திருமூலருக்கு அரியதோர் உவமையாக அமைந்து விடுகிறது. ஆசிரியனின் அருள் கிடைத்தாலன்றிக் கற்ற கல்வி பயன்படா தென்பதை விளக்கத் திருமூலர்,

" கூட்டும் குரு நந்தி கூட்டினல்லாது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந்தற்றே "

என்பதாகத் தமது திருமந்திரத்துள் கூறுகின்றார். பழத்திற்குப் புறத்தே தொங்கிக்கொண்டிருக்கும் முந்திரிக் கொட்டை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கண்களிற்பட்டு கருத்தினிலேறி இலக்கியத்தில் இடம் பெற்று விடுகிறது. அடக்கமில்லாமல் துள்ளிக் குதிக்கும் பேதையர்களுக்கு அவர் அதனை ஒப்பிட்டார். சதாவதானி சேகுத்தம்பிப் பாவலரவர்கள் மனிதனின் பயனற்ற தன்மையை விளக்குதற்கு, மென்று துப்பப்பட்டுத் தீண்டுவாரற்றுக் கிடக்கும் தாம்பூலக் கோதினைக் கூறுவராயினர்.

" கொக்கிவிட்ட சங்கிலிபோல் கூண்டெழுந்து
நும்மடியார்
சொக்கிவிட்ட நல்லருட்கே தோய்ந்து
நின்றாரையோ நான்
உக்கிவிட்ட நெஞ்சினனாய் உள்ளுடைந்து
மெய் மயங்கிக்
கக்கிவிட்ட தம்பலொத்தேன் கல்வத்து நாயகமே!"

என்பது அவர்தம் கல்வத்து நாயக இன்னிசைப் பாமாலையின் ஒரு நறுமலர்.

அடுத்தபடியாக நமது கருத்தைக் கவர்வன, வரலாறு பற்றிய உவமைகளும் புராணம்பற்றிய உவமைகளுமேயாம். நாட்டு மக்களின் நாவுகளிலே நடமாடிய வரலாற்று நிகழ்ச்சிகளையும், அவர்களின் இதயங்களில் இடம்பெற்ற கதைப் பாத்திரங்களையும் உவமைகளாகக் கையாள்வது பொருள் விளக்கத்திற்குப் பெரிதும் துணைவதாகும். பண்டைத் தமிழ் மக்கள்

இராம காதையை அறிந்திருந்ததற்கு ஆதாரம், சங்க இலக்கியங்களிலே யுள்ளன. உமையம்மையாருடன் சிவ பெருமான் அமர்ந்திருந்த கயிலே மலேயைத் தூக்கி எடுப்பதற்குக் கையை கீழ் புகுத்திய இராவணன் அம் மலேயை எடுக்க முடியாது வருந்துகிருன். இந்நிகழ்ச்சி ஒரு உவமையாகப் பயன்பட்டுக் குறிஞ்சிநிலக் காட்சி யொன்றிற்கு எழிலூட்டுகிறது. வேங்கைமரத்தைப் புலியெனக் கருதிய மதயானே, வெகுளிகொண்டு தன் கொம்பினுல் அதன் அடியைக் குத்தியது. ஆனுல் கொம்பைத் திரும்பி வாங்க இயலவில்லே. மாமலே எதிரொலி செய்யப் பிளிறி வருந்துகின்றது. இக் காட்சியை மீக்கூறிய உவமை நன்கு விளக்கக் காண் கிருேம். இதோ அப்பாடற் பகுதி :

“இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலே இருந்தன ஞக
ஐயிரு தலேயின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ் புகுத் தம்மலே
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானே
நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்.”

கற்ருேர் ஏத்தும் கலித்தொகையில் மற்ருேர் காட் சியைக் காண்போம். ஓரிடத்தே எதிரெதிரோங்கிய இரு பெரு மலேகள் ; அவற்றிடையே ஒரு மாணிக்கப் பாறை. அப்பாறையின் கண் ஒரு வேங்கை மரம். அவ்வேங்கையின் அழகிய கிளேகள்மீது இரு புறங்களி லும், இரு மலேகளிலிருந்தும் அருவிகள் வீழ்கின்றன.

இக்கவிஞர் காட்சியை விளக்க, யானைகள் பூநீர் சொரிய அல்லி மலர்மீது அமர்ந்திருக்கும் திருமகளை உவமையாக்குவது நயஞ்செறிந் திலங்குகிறது. பாரதக்கதையும்பழங்காலத்தே பயின்று வந்தமை மருத கலியின் ஓர் உவமை முகத்தான் புலனாகின்றது. புலி யின் நெஞ்சைப் பிளந்து பகை தீர்த்த ஒரு யானைக்கு உவமையாக, நூற்றுவர் தலைவனும் துரியோதனனின் குறங்கைப் பிளந்து உயிர் போக்கிய வீமன் குறிக்கப் படுகிறான். இத்தகைய புராண நிகழ்ச்சிகளன்றி, உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளும் உவமைகளாகப் பயின்று வந்துள்ளன.

"நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்
பாடிச் சென்ற பரிசிலர் போல"

"திண்டேர்ப் பொறையன் தொண்டியன்ன"

"ஆதிமந்தி பேதுற்றனைய" — இவை போன்ற எத்தனையோ உவமைகளைச் சங்க இலக்கியங்களிற் காண்கின்றோம். நக்கீரர், பரணர், மாமூலனார், மருத னிள நாகனார், குடவாயிற் கீரத்தனார், வெள்ளி வீதி யார் போன்ற புலவர் மணிகள், இவ்வகை உவமைகள் அமைந்த இனிய செய்யுட்கள் பல இயற்றியுள்ளனர்.

பெருங் காப்பியங் களியற்றிய பெரும் புலவர்கள், தங்கள் காப்பியத் தலைவர்களையும், அக்காப்பியங்க ளியற்ற ஆதரவளித்த வள்ளல்களையும் பொருத்தமான இடங்களில் உவமைகளாகப் புகுத்துவது அவர்களின் நன்றி நிறைந்த நல்லுள்ளங்களை வெளிக் காட்டு கிறது. அவ்வுள்ளங்களின் உயர்வால், கம்பருக்கு ஊக்க மூட்டிய சடையப்பரும், வில்லிக்குத்துணை நின்ற வரபதி யாட்கொண்டானும், உமறின் காப்பியத்தை

அரங்கேற்றக் கேட்ட அபுல் காசிமும் அழியாப் புகழை அடைந்து விடுகின்றனர். இலங்கையை இணைப்ப தற்கு அணை கட்ட மாக்குரங்குகள் மாமலைகளைத் தூக்கி வந்து எறிகின்றன. நளன் என்பான் அவற்றைத் தான் கற்ற சிற்ப வித்தைக் கொப்பத் தாங்குகிறான். எவ்வாறெனின், "சடையன் வெண்ணெயில் தஞ்ச மென்றோர்களைத் தாங்கும் தன்மைபோல்" என்பது கம்பன் வாக்கு. வில்லிப்புத்தூராழ்வாரோ வெனின்,

"கோவல் சூழ் பெண்ணை நாடன், கொங்கர்கோன் பாகை வேந்தன்,
பாவலர் மானங்காத்தான் பங்கயச் செங்கையன்ன,"

போர்க்களத்திலே நின்ற கன்னனின் கையும் கனகமாரி பொழிந்த காட்சியைக் கூறுகின்றார். வறண்ட பாலைவன மாகிய அறபுநாடு, உமறுப் புலவரின் கவிதைக் கோல் பட்டுத் தமிழ்நாடாகவே மாறிவிடுகிறது. ஆங்கு வெள்ளை மேகங்கள் பசுங்கடலில் வீழ்ந்து நீருண்டு கருங்கடல்போல் வானிலே செறிந்திருக்கின்றன. அதற்கு உவமையாகத் தமது காப்பியத் தலைவர் மாநிலத்தின் மணி விளக்கு நபிகள் நாயகமவர்களின் புகழே பொருந்துவதாகுமென நினைக்கிறார், புலவர் பெருந்தகை.

"தருங்கொடை நயினார் சீர்த்தி
சகமெலாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பில் அண்ட
முகடுற நிறைந்தவேபோல்"

என்பது, உமறுப் புலவர் உள்ளத்தெழுந்த உவமை. வான்மழை பெய்து நாடு வளம் கொழிக்

கிறது. நாட்டுச் செழிப்பினிடையே தமது செந்தமிழ்க் காப்பியத்தைச் செவிமடுத்த அபுல்காசிம் மரைக்காயர் அவர்களின் வீட்டுச் செழிப்பையுங் காட்டி அவருக்கு அழியாப் புகழ் வழங்குகிருர் கவிஞர்பெருமான்.

" செந்நெலிற் பெருக்கின் கனை குரற் சகடந்
திசை தொறும் மலிந்தன செருக்கும்
கன்னலங் கழனி புகுத்தறுத் தடைத்த
களமர்கள் ஒலிகுரற் செருக்கும்
துன்னுபூங் கமுகு சிதறுசெம் பழுக்காய்
சுமப்பவர் கம்பலைச்செருக்கும்
மன்னவன் வகுதைத்துரை யபுல்கசிம்
வளமனைச் செருக்குமொத் திருக்கும்." (சீரு)

பெரும் புலவர்கள் நூலைத் தொடங்கும்போது அவர்களின் அடக்கத்திலே பிறக்கும் உவமைகள், அவர்களுக்கு அணியாகத் திகழ்கின்றன. பரந்து விரிந்து கிடக்கும் பாற்கடலைப் பருகுவதற்கு முற்படுகின்ற பூனையின் நிலையில் தாம் இருப்பதாகக் கூறுகிருர், ஆசையினுல் இராமகாதையை அறையப் புகுந்த கம்பர். அவர், வால்மீகி வடமொழியில் வரைந்து காட்டிய அயோத்தி நாட்டு வளத்தைத் தமிழிலே கூறப் புகுந்து, 'மூங்கையான் பேசலுற்ருன் என்ன யான் மொழியலுற்றேன்' எனத் தொடங்குகிருர். சீருவின் தொடக்கத்தில் அவையடக்கம் கூற விரும்பிய உமறுப் புலவர்,

" இடி யிடித்திடு மாரவாரத் தினுக்கெதிரோர்
நொடி நொடிப்பது போலுமொத் திருந்த
தென்னூலே "

என்ருர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்பதற் கொப்ப அப்பணிவையே அணியெனக் கொண்ட புலவர் மணிகளின் எண்ணம் வாழ்க!

தமிழ் இலக்கியக் கடலுள் மூழ்கியெடுத்த முத்துக் களை,இவ்வாறு பல வகைகளாகப் பிரித்துப் பார்த்தோம். இத்தகைய உவமைகளை ஒருவர் ஒரு முறை பயன் படுத்திவிட்டால், பின்வருவோர் அதனைக் கையாளும் போது ஒருவித சலிப்பேற்படுவது இயல்பு. அச்சலிப் பைப் போக்குதற்காகப் பின்வருவோர் பல புது முறை களை மேற்கொள்ளக் காண்கிருேம். அதன் விளைவாகப் பல அணிகளும் பெருகுவதற்குத் தலைப்பட்டன. ஒவ்வோரணிக்கும் பல உட்பிரிவுகள் தோன்றின. இன்றே அணியிலக்கணங்கூறும் நூல்களே பலவாகப் பெருகிவிட்டன. மானியலென்றும், மீன்விழி யென்றும், தேன்மொழி யென்றும், பிறை நுதலென்றும் கூறும் பழைய கருத்தையே,

"மானென அவளைச் சொன்னல்
மருளுதல் அவளுக்கில்லை
மீன்விழி உடையளென்ருல்
மீனிலே கருமையில்லை;
தேன்மொழிக் குவமை சொன்னல்
தெவிட்டுதல் தேனுக்குண்டு,
கூன்பிறை நெற்றியென்ருல்
குறைமுகம் இருண்டு போகும்."

என்பதாகப் புது முறையில் கூறும்போது 'புதுச்சுவை பிறக்கக் காண்கிருேம். இவ்வாறன்றிப் பழைய கருத் துக்களையே பின்பற்ருமல் புது உவமைகளைப் புகுத்த

முயல்வது இலக்கிய வளத்திற்கு வழி செய்வதாகும். அவ்விதம் புது மரபைப் புகுத்தியோருள் ஒரு சிலரைக் காண்போம்.

இற்றைநாள் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டோருள் ஒருவராய பாரதி, உவமை உலகிலும் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார்.

"அமுதூற்றினை யொத்த இதழ்களும்
நிலவூறித் ததும்பும் விழிகளும்"

என்னும் தொடர் கருத்திலும் விறுவிறுப்பான தொரு புதுமையினை விளக்கிறது. பாரதியை அவர் தம் தந்தையார் ஆங்கிலப் பயிற்சிபெற நெல்லை மா நகருக்கு அனுப்புகின்றார். அன்றைய கல்வித் திட்டத்தை வெறுத்த பாரதிக்கு, அது சற்றும் பிடிக்கவில்லை. ஒரு புது உவமையின் வழியாகத் தன் வெறுப்பைக் காட்டினார். "ஊன்விலை வாணிபம் நல்லதென்றொரு, பார்ப்பனப் பிள்ளையை நாடுவிப்பதுபோல"த் தன்னைக் கலை பயில அனுப்பியதாகக் கூறுகிறார். பாஞ்சாலியைப் பந்தயப் பொருளாக அமைத்துச் சூதாடிய தருமனின் செயலுக்கு அவர் கூறும் உவமைகள் மிகப் பொருத்தமும் புதுமையும் வாய்ந்தன. ஆள் விற்றுப் பொன் வாங்கிச் செய்த பூணை ஓர் ஆந்தைக்குப் பூட்டுவதும், நீள்விட்டப் பொன் மாளிகையில் பேயினை நேர்ந்து குடியேற்றுவதும், செருப்புத் தோலுக்காகச் செல்வக் குழந்தையைக் கொல்லுவதும் அரிய உவமைகளன்றோ!

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மனோன்மணியத்தில் நாஞ்சில் நாட்டின் வளத்தைக் காட்ட வருகின்றார். மென்மையான இறகுகளினால் உடம்பைத் தடவினால்

யாருக்கும் மயிர்க் கூச்செறியும். சிறுமியரோ சற்று அதிகமாகவே சிலிர்த்துச் சிரித்துவிடுவர். நாஞ்சில் நாட்டு நிலம் ஒரு சிறுமியை ஒத்தது. உழவர்களாகிய சிறுவர்கள், கலப்பை முனையாகிய தூவியால் நாஞ்சிற் சிறுமியின் மாந்தளிர் மேனியைத் தொட்டு விளையாடு கிறார்கள். சிறுமியோ தொடுவதற்கு முன்னரே பயிராகிய மயிர் சிலிர்த்து பலவளங்களாகிய நகை யைச் சிந்துகிறாள். இதோ அப்பகுதி :

“தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்
சிறுமிய ரென்னவச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல் குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர் மயிர் சிலிர்த்துப் பல்வளம் நல்குவள்”

இக்கால புலவர்களுள் புதுவைக் கவிஞர் பாரதி தாசன் இத்துறையில் ஒரு புதுமைக் கவிஞராக விளங்குகிறார். ‘ஓர் அழகி; சிப்பம் பிரித்தெடுத்த சீனத்துப் பொம்மை போன்றாள்; தென்னம் பாளை பிளந்து சிந்திடும் சிரிப்புக்காரி; மயிலிறகின் அடியைப் போல் ப்ல்லி லெல்லாம் ஒளியுடையாள்; வெண் முத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும் கண்ணுடையாள்; பழச் சுளையின் வாயுடையாள்; கண்ணாடிக் கன்னத்தாள். இவ்வழகிக் கேற்ற ஓர் ஆணழகன். மீதுயர்ந்த இரு தோள்கள் ; ஒளியை வாரி வீசுகின்ற குன்றங்கள் ; மறவன் தூக்கி ஊது கின்ற வளைகொம்பின் புருவத்தின் மேல் உயர் நெற்றி அஞ்சாமை முழங்கும் கூடம் ; மோதுகின்ற இளங் களிறு போல் நடந்து முன்வாயிற் புன்னகையை விளைவிப்பான்; கிளிக் கழுத்தின் பொன் வரிபோல் அரும்பும் மீசை ; கீழ்க் கடலின் மாலைவெயில் கலந்த

நீல ஒளித்திரை போல் தலை மயிர்; சிங்கத்தின் தோற்றம். இவ்வழகனும் அழகியும் வெள்ளத்திேைடொரு வெள்ளமுமாய் நல்ல வீணையும் நாதமுமாகின்றனர். பின்னர் பிரிவின்போது துயர் பெருகுகிறது. கள்ளீயும் பாளைபோல் கண்ணீர்விட்டு கடல் நீரில் சுருப் போல படுக்கையிலே கிடக்கிருள் அழகி. காதலனுக்கு ஒரு கடிதம் தீட்டுகிருள். அக்கடிதத்தைப் பெற்ற காதலன் தணலிலே நின்றிருப்போர் தண்ணீரில் தாவுதல்போல் எழுத்தினை விழிகள் தாவ இதயத்தால் வாசிக்கின்ருன்.' இவ்வியத்தகு காதல் ஓவியத்தையும், அதற்கு உயிரூட்டும் புத்தம் புதிய உவமைகளையும் எப்படி மறக்கமுடியும் ?

கவிஞர் பாரதிதாசன் தமிழ் மொழியின் இனிமையை உவமையாகக் கூறும் இடங்கள் உள்ளங்களில் இன்பத்தேன் பொழிவனவாகும்.

"தண்டமிழின் இனிமையைப்போல் இனியசொல்லான்"
"தணல்நிறமாம் மாம்பழத்தில் தமிழ் நிகர்
சுவையைக் கண்டான்"
"குழந்தைகளுடனிருந்து கொஞ்சியே உண்ணுகின்ருர்
பழந்தமிழ்ப் பொருளை அள்ளி படித்தவர்
விழுங்குதல் போல்"
"தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்"
"தமிழெங்கள் கவிதைக்கு வயிரத்தின் தோள்"
"தமிழ் கருமான்செய் படைவீடு; நானங்கோர் மறவன்"
"கன்னற் பொருள்தரும் தமிழே! நீ ஓர் பூக்காடு ;
நானேேர் தும்பி"

இதுதான் உவமையிற் புதுமை! கவிதையில் உவமை சிறக்க, உவமையிற் புதுமை புகவேண்டும்.

5. " யாதும் ஊரே "

தண்டமிழ்ச் சோலைக்கு வனப்பும், வளப்பமும் வழங்க இதோ புத்தாண்டு மலர்கிறது. செந்தமிழ் நாட்டார் சிந்தை மகிழ, புத்துயிரும், புதுவாழ்வும் புகுவதாகுக! இந்த நாட்டிலே வாழ்ந்த நமது முன்னோர்கள், நமக்கு விட்டுச் சென்ற செல்வங்களுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும். சிந்தைக்கினிய செந்தமிழ் மொழியும், அம்மொழியின் தேனினுமினிய தெவிட்டாத இலக்கியங்களும், அவ்விலக்கியங்கள் காட்டும் கவினுர் கலைகளும், அக்கலைகள் பேசும் பண்பாடும் அப் பண்பாடு வளர்த்த நாகரிகமும் இணையிலாத செல்வங்கள். முன்னோர்களுக்கேற்ற பின்னோர்களாக வாழ்வதற்கு — புலிகள் வாழ்ந்த குகைகளிலே எலிகள் வாழவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்கு — அவர்கள் கண்ட வாழ்விலும் கொண்ட கொள்கைகளிலும் சிறிது சிந்தனையைச் சலுத்துவது, இது போன்ற தருணங்களுக்குப் பொருந்தியதுதான்.

மனிதன் பெற்றுள்ள பேறுகளுள் தலை சிறந்தது சிந்தனை. இன்றைய உலகில் செயற்கரிய செயல்களைச் செய்து, அவன் சிறந்து விளங்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளதும் இச் சிந்தனையேயாம். அறிவியற் கலையின் வளர்ச்சி, அனைத்துலகத்தையும் அவனுக்கு அடிமையாக்கிக் கொடுத்துள்ளது. ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள செய்திகளை மனிதன் உடனுக்குடன் அறிகின்றான் ; காண்கின்றான்; உணர்கின்றான். கொடு விலங்குகள் வாழும் காடுகளை வானளாவும் மாளிகைகளைக் கொண்ட நகர்களாக மாற்றி விட்டான். பல்லொடு பல் மோதிப் பறை கொட்டும் பனித் துருவங்

களை வென்று விட்டான். உலகக் கொடுமுடியாம் எவரெஸ்டின் உச்சியிலே கூட மிதித்து விட்டான். ஒரு நாட்பொழுதில் உலக மனைத்தையும் வலம்வரும் வல்லமையையும் பெற்றுவிட்டான். ஏனைய கோள்களை எட்டிப் பிடிப்பதற்குரிய முயற்சியைத் திட்டமிட்டு ஆற்றுகின்றான். இவ்வாறு இடத்தையும், காலத்தையும் வென்று வாழ்கின்ற மனிதன், இன்று உலகப் பொதுமையைக் குறித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ளான்.

மனிதனுக்கு மனிதன், வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு, போட்டியும் பொறாமையும் வேற்றுமைகள் பல விளைவித்துள்ளன. மனிதனின் தோற்றமே பல்வேறு வேற்றுமைகளை இயல்பாகக் கொண்டதுதான். கோடிக் கணக்கான மனிதர்களில், ஒருவர் முகம் இன்னொருவர் முகத்தை ஒத்திருப்பதில்லை. ஒருவர் குரல் இன்னொருவர் குரலை ஒத்திருப்ப தில்லை. எனினும், வீட்டு வாழ்வும் நாட்டு வாழ்வும் அமைதியுற்றோங்க, வேற்றுமைகளிலே ஒற்றுமையைக் காணவேண்டும். 'உலக மக்கள் அனைவரும் ஒன்று, நாட்டுக்கு நாடு உயர்வு தாழ்வு கிடையாது;' என்னுமெண்ணம் உயர்ந் தோங்கவேண்டும். இக்கருத்துக்கு அரண் செய்யவே ஐக்கிய நாட்டவையும், மக்களினத்தின் ஒருமையையும் பெருமையையும் உணர்ந்து, அரும் பணியாற்றி வருகின்றது. இவ்வுண்மை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந் நாட்டிலே வாழ்ந்து போந்த நமது முன்னோர்களின் உள்ளங்களிலே ஊறிக் கிடந்த ஒன்றாகும். இவ் வுண்மையைத் — தமிழ்ப் பண்பாட்டின் உயிர் நிலையைப்—பண்டைத் தமிழ்க் கொண்டல், கணியன் பூங்குன்றனார் கனிதமிழ்ச் சொற்களால் கணித்துள்ளார்.

“ யாதும் ஊரே யாவரும் கேளிர் ” என்று தொடங்குவது அவர் பாட்டு, ‘ யான், எனது’ என்னும் உணர்வு மனிதனின் உடன் பிறப்பு. அகில மெல்லாம் கட்டி ஆளினும் அவனது ஆசைக்கு ஓர் அளவில்லை. ‘ இதைச் செய்தவன் நான்’, ‘ அதைச் சொன்னவன் நான், இந்தச் சாலையைச் சமைத்தவன் நான்’ ‘அந்தச் சோலையை அமைத்தவன் நான் ’, ‘ இக் கோயிலெடுத் தவன் நான்’, ‘ அக்குளம் வெட்டியவன் நான் ’— இப்படிப் பெருமை பாராட்டுவது மனிதன் இயல்பு. உலக மொழிகளனைத்திலும் மக்கள் மிகுதியாகப் பயன் படுத்தும் சொல்லைக் குறித்து ஆராயத் தொடங்கிய அறிஞர் ஒருவர், ‘ யான், எனது ’ எனும் இவ்விரு சொற்களுக்கும் முதலிடம் தருகின்றார். அறிஞர் பெரு மக்களும் மெய்ஞ்ஞான மேதைகளும் தத்துவ ஞான வித் தகர்களும் இத்தகைய உணர்வு அகல்வதையே, மனித வாழ்வின் மாபெரும் பேறெனக்கருதினர். தன்னந் தனியனாய் வாழும் ஒருவனுக்கு, இல்லற வாழ்வின் உயர்வைக்காட்டி ‘அறன் எனப்படுவதே இல்வாழ்க்கை’ எனக் கூறத் தொடங்கினர் திருவள்ளுவர். தன்ன லத்தின் உறைவிடமாயிருந்தோன், இல்லறமென்னும் நல்லறத்திலே நுழைந்த பின், ‘ தற்காத்துத் தற் கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்து ’ வாழும் துணைவியினிடத்தே, அன்பு சுரக்க வாழ்கின்றான். அடுத்தபடியாக, அவ்வன்பு அறிவறிந்த மக்களிடத்தே பரவுகின்றது. அன்பின் உயர்வை அறிந்தவன் ‘அன் பின் வழியது உயர் நிலை ’ என்னும் உண்மையினை உணர்கின்றான். இவ்வுண்மையை வெளிக் காட்டும் வகையிலே, ‘ செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த் திருந்து வானோர்க்கு நல்விருந்தா ’ கின்றான். இவ்

வாறு நாடோறும் விரிவடைகின்ற அன்பு, ஒப்புர வாகவும் ஈகையாகவும் மலர்கின்றது. இறுதியாக, மன்னுயிர் ஓம்பி அருளாட்சி பெறும் துறவற நிலையிலே,

“யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்”

எனத் தகும் தன்மையதாய்க் கனிகின்றது. மனிதனாகப் பிறந்து இல்லறத்தை மேற்கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த போது, ‘வானுறை யும் தெய்வத்துள் வைக்கப்படும்’, எனக் கருதப் பட்டவன், செருக்கறுத்த இம்முதிர்ந்த நிலையிலே ‘வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்’ என எண்ணப் படுதல் சிந்தனைக்குரிய செஞ்சொல்லாகும். இதைத் தான், ‘தான் செத்திருந்து உலக முழுவதும் அரசா ளும் தத்துவம்’ என்பதாக மெய்யறிவு வாய்க்கப் பெற்ற ஞான மேதைகள் குறித்துப் போந்தனர்.

இவ்வாறு பல்வேறு நிலையிலும் பாராட்டுதற் குரிய பண்பாட்டுச் சிகரத்தைத்தான் பழந்தமிழ் புலவர், தமது பாவடியின் முதலடியில், “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் படம் பிடித்துக் காட்டினர். இன்று புதுமைக் கொள்கையெனப் புகழப்படும் இப்பொதுமைக் கொள்கை, மிகப் பழங் காலத்தில் இந்நாட்டிலே எழுந்த பழமைக் குரல் தானே என எண்ணும்போது பழமையின் பெருமை நம்மை மகிழ்விக்கின்றது. வேறுபாடுகளால் மக்கள் மயங்கி மாறுபடும் காலங்களிலெல்லாம் அக் குரலை நமது அறிஞர் பெருமக்கள் நினைந்தும் நினைவூட்டியும் வந்துள்ளனர்.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்பது வள்ளுவர் வாக்கு. " ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் " என்பது பிற்காலத் தெழுந்த பேருரை. பெருங்காப்பியங்கள் ஆக்கிய புலவர் பெருமக்களும் இப்பொதுமையைத் தங்கள் நூல்களில் நடு நாயகமாக அமைத்தனர். ஊரூராக, நாடு நாடாகச் சென்று அமுத சுரபியின் அகன்சுரை அளித்த அமுதத்தைப் பாரக மடங்கிலும் பசிப்பிணி அறுப்பதற் குப்பயன் படுத்திய, கோவலன் குலக்கொழுந்து மணி மேகலையின் துறவினைப் பாடினுர், மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுர். சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்து, பாண்டி நாட்டிலே துணைவனை இழந்து, சேர நாட்டிலே கோயில் கொண்ட மாநிலம் போற்றும் மாபெரும் பத்தினி கண்ணகியின் வரலாற்றைக் கூற வந்தார், வளமார் புலமை இளங்கோவடிகள். வட நாட்டயோத்தியிலே தம்பியர் மூவருடன் தோன்றி, தென்னுடடைந்து, வேடுவனுகிய குகனையும், குரக் கினத்தரசாகிய சுக்ரீவனையும், அ ர க் க ர் குலத்தின் வீடணனையும், உடன் பிறந்தோராக அணைத்தெடுத்த ராமனின் காதையை என்றுமுள 'தென்றமிழிலே' இயம்பியிசை கொண்டான் கம்பன். அந்தணர், குயவர் பாணர் போன்ற பல்வேறு குடிகளிலே தோன்றி " கூடுமன் பினில் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலினராக " விளங்கிய நாயன்மார் அறுபத்து மூவரின் வரலாற்றைப் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடினுர் கவி வலவர் சேக்கிழார். " மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்ப் " பிறந்த

பெருமானுர் முகம்மது நபியவர்களின் வாழ்க்கையைப் பாடினுர் புலவர் பெருமான் உமறு. இவ்வாறு உலகப் பொதுமையும் மனித ஒருமையும் நம்மிலக்கியங்களில் இழைந்து செல்வதோடு மட்டுமன்றி, இக்கருத்துத் தமிழ் நூல்களனைத்தின் தொடக்கத்திலும், திலகம் போல் திகழ்வது வியப்பூட்டுவதொன்ருகும். தமிழ்ப் பெரும் புலவர்கள் உலகப் பொதுமையை எண்ணிய பின்னரே, தத்தம் நூல்களைத் தொடங்கினரென எண்ணுவது தவருகாது.

"வடவேங்கடம் தென் குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனத் தொடங்குவது தொல்காப் பியப் பாயிரம் "ஆதிபகவன் முதற்றே உலகு" என் பது வள்ளுவம். "உலகமுவப்ப" என்ற தொடக்கம், பத்துப் பாட்டின் முதற் பாட்டாம் திருமுருகாற்றுப் படைக்கு அணி செய்கிறது. "கொங்கலர் தார்ச்சென்னி குளிர் வெண்குடை போன்றிவ் வங்கண் உலகளித் தலான்" என்பது சிலம்புச் செல்வம். "உலகந் திரியா ஓங்குயர் விழுச்சீர்" என்பது மணிமேகலை. "மூவா முதலா உலகமொரு மூன்று மேத்த" என்பது சிந்தாமணி. "உலகம் யாவையும் தாமுளவாக் கலும்" என்பது கம்பராமாயணம். "உலகெலாமு ணர்ந் தோதற்கரியவன்" என்பது பெரியபுராணம். இவ்வாறு பெருநூல்களைத் தொடங்குமுன் பெரும் பாலான தமிழ்ப் புலவர்கள் உலகப் பொதுமையிலே ஈடுபடுகின்ற தன்மை தனிச் சுவை பயப்பதொன் ருகும்.

இவ்வுணர்ச்சியால் உந்தப்பட்ட தமிழ் மக்கள், இன்பப் பூங்காவாகிய தங்கள் நாட்டை விட்டு அயல்

நாடுகளுக்குச் செல்ல அஞ்ச வில்லை. அலைகளைப் பிளந்தும், மலைகளைக் கடந்தும் பிற நாடுகளுக்குப் பீடுடன் சென்றனர். உரோம, கிரேக்க, அராபிய, சீன நாடுகளுடன் மிகப் பழங்காலத்திலேயே வணிகத் தொடர்பு பூண்டனர். ஈழம், கடாரம், மலாயா, சாவகம், ஆப்பிரிக்கா போன்ற காடுகளாகக் காட்சி யளித்த நாடுகளை யெல்லாம், வளங் கொழிக்கும் பொன்னுர் நிலமாக மாற்றினர். இன்று அந்நாடுகள் வையகம் போற்ற வாழ்கின்றன. “ யாதும் ஊரே ” எனும் குறிக்கோள் விளைத்த சிறப்பினை எண்ணி மகிழ்வோம். இன்பத் தமிழ் நாடும், இனிய தமிழ் மொழியும் வாழ்க ! வையகமெல்லாம் வாழ்க !

6. ஆசு கவி

"காவலர் வெருண்டு போற்றும் கவித்தமிழ்ப் புலவர்;" "சொற்படி நடத்தும் வலிதுன்னு புலவோர்" இவ்வாறெல்லாம் புலவர் பெருமக்களின் தகுதியறிந்து பாராட்டுகின்ற தமிழ்த் தொடர் மணிகள் ஒன்றிரண் டல்ல. செல்வத்துட் செல்வமன்ரே புலமைச் செல்வம்! இத்தகைய புலவர்களைக், 'கவி, கமகன், வாதியே, வாக்கி' யென இலக்கண நூலார் நான்கு வகையாகப் பிரித்தனர். தன்னுடைய நிறை மதியாலோ கல்விப் பெருமையாலோ ஒருவன் சொன்ன நூல் விகற்பத்தைத் தான் பயிலாதிருந்தும் பொருள் விரிக்க வல்லவனைக் கமகன் என்றனர். அறம், பொருள், இன்பம், வீடு என்பன தம்மில் விரவாமல் கேட்போர் வேட்ப இனியன கூறும் ஆற்றலுடையானை வாக்கி யென்றனர். முதல் பிரிவினராகிய கவியை மேலும் நான்கு பிரிவாக்கினர்.

"கவிகள் தாம், ஆசு மதுரமே சித்திரம் வித்தாரமெனப்
பேசுவர் நால்வர்க்கும் பேர்"

என்பது பாட்டியல்.

இந்நால்வகைக் கவிகளுள் முதல் வகையே ஆசு கவி. இரண்டாவது வகை, மதுர கவி. அதாவது ஓசையும் பொருளும் இனிதாய் முழுதும் செஞ்சொல்லாய் அணியும் தொடையும் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படிப் பாடுவது. மூன்ருவது வகை சித்திரகவி. அதாவது, மாலைமாற்று, முரசபந்தம், சுழிகுளம் போன்ற பல விகற்பத்தால் செய்யப்பட்டு, ஓசை கெடாமல் தொன்னூல் மரபு தவருமல் பன்னுவது.

நான்காவது வித்தாரம் அல்லது அகலக் கவி. அதாவது பல செய்யுட்கள் கூடி வந்த தொடர் நிலைச் செய்யுளும், அடி பலவாய் நடக்கும் தனிப்பாச் செய்யுளுமாகும்.

இந்நான்கு வகைக் கவிகளுள் ஆசு கவியின் இலக்கணத்தைச் சிறிது விரிவாகக் காண்போம்.

> " பேரெழுத்திற் சொல்லிற் பொருளிற் பெருங்கவியிற்
> சீரலங் காரத்திற் றெரிந்தொருவன்-நேர்கொடுத்த
> உள்ளுரைக்கப் போதுரைப் பதனையா சென்றூர்
> எள்ளாத நூலோர் எடுத்து "

என்பது வச்சணந்தி மாலை குறிப்பிடும் இலக்கணம். குறிப்பிட்ட ஒரு எழுத்தையோ, சொல்லையோ பொருளையோ, யாப்பையோ, அணியையோ கொடுத்து அதன்படி யொருவன் பாடச் சொல்லும்போது, அவனெதிரே பாடப் படுவது ஆசு கவியாக அமையும். இக்கருத்தையே இலக்கண விளக்கமுடையாரும்,

> " எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிவையின்
> விழுத்தக ஒருவன் விளம்பிய உள்ளுறைக்
> கப்பொழு துரைப்ப தாசு கவியே " என்றூர்.

தமிழ் இலக்கியப் பெருங்கடலுள், ஆசு என்னும் சொல், பல பொருட்களில் பயின்றுவரக் காண்கிறோம். " ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ " என்பது ஔவையாரின் அருந்தமிழ். இங்கு, பற்றுக்கோடு என்பது பொருள். "அரிய கற்று ஆசற்றூர் கண்ணும்" என்பது வள்ளுவர் தம் தெள்ளுதமிழ். இங்கு 'குற்றம்' என்பது பொருள். " தேசிகமென்றிவை ஆசினுணர்ந்து " என்பது இளங்கோவடிகளின் இன்மொழி.

இங்கு ‘நுட்பம்’ என்பது பொருள். “அமலனை ஆசற வுணர்ந்த அமலர்” என்பது வாகீசர் வாக்கு. இங்கு ‘ஐயம்’ என்பது பொருள். இவ்வாறே அற்பம், துன்பம், இலக்கு, பற்ருசு, கவசம், ஆணவ மலம், வாளின் கைப்பிடி, நூலிழைக்குங் கருவி போன்ற பல பொருட்களைக் குறிக்க இவ்வீரெழுத் தொருசொல் ப்யன் படுகிறது. இவை தவிர, நேரிசை வெண்பாவின் முதற் குறளில் இறுதிச் சீருக்கும் தனிச் சொற்குமிடையில் காட்டப்படும் அசையினை ஆசென்று வழங்குகிறது காரிகை. ஆசு என்னும் தமிழ்ச் சொல்லுக்கு இப்பொருட்களெல்லா மிருப்பினும், ஆசு கவியென்னும் போது, இப்பொருட்களுள் ஒன்றேனும் அதில் அமையவில்லை. வடமொழியில் ‘ஆசு’ என்பதற்கு ‘விரைவு’ என்பது பொருள். இச்சொல்லிலிருந்தே ‘ஆசுகவி’ தோன்றிற்றென்பர்.

‘அக்கணமாசு விஞசுகன் மைந்தன்’ எனும் பாரதத் தொடரில் இப்பொருள் அமைந்திருப்பதைக் காணலாம். இப்பொருள் பற்றியே, விரைவாகச் செல்வது காரணமாக அம்பை ஆசுகமென்றும், வாயுவை ஆசுகன் என்றும், பறவையை ஆசுகி யென்றும் வழங்கலாயினர். இவை போன்றே, கொடுத்த பொருளை, அடுத்த பொழுதிற் பாடும் புலவனையும், அவன் பாடுகின்ற பாட்டினையும் ‘ஆசு கவி’ யென்றழைத்தனர். இதனையே ஆங்கிலத்தில் Extempore verse என்பதாகக் குறித்தனர்.

தமிழ் மொழியில் மட்டுமன்றி வடமொழி போன்ற பிற மொழிகளிலும் ஆசு கவிபாடும் இயல்பு மிகுதியாக உள்ளது. இந்தி, உர்தூ போன்ற மொழிகளில் அமைக்கப்படுகின்ற “முஷாயிராக்கள்” எனப்படும்

கவியரங்குகள், ஆசுகவி யாற்றலைப் பெருக்குவதற்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. வளமார்ந்த மொழிகளில் வழுவற்ற புலமையும், வல்லோனின் அருளும் வாய்க்கப் பெற்ற சொல்லேருழவர்களுக்கு, மாசில்லாத ஆசுகவிகள் பாடுவது எளிதேயாகும். வடமொழிப் புலவர்களுள், ஆசுகவிபாடுவதில் அருந்திறன் கைவரப் பெற்று விளங்கியோன் காளிதாசன். வடமொழியில் உயிர்மெய் வரிசையில் ககரவினத்தில் அமைந்துள்ள நான்கு எழுத்துக்களும் ஈற்றிலே யமைய, ஒரு செய்யுள் பாடக்கேட்டபோது, காளிதாசன் தங்குதடை யின்றிப் பாடிவிடுகின்றான். அச்செய்யுளை ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நிகழ்கின்ற உரையாடலின் உருவிலே அமைக்கின்றான். வழியிலே ஒரு சிறுமியைக் கண்ட ஆண்மகனொருவன், "சிறுமியே! உன் பெயரென்ன?" என்று வினவுகின்றான். "காஞ்சன மாலா" என்பது அவளளித்த விடை. பின்னர், "நீ யாருடைய மகள்?" எனக் கேட்கிறான். "நான் கனக லதையின் புதல்வி" என்கிறாள் அவள். "கையிலிருப் பதென்ன?" என்று மீண்டும் கேள்வியை அடுக்கு கின்றான். "ஏட்டுச்சுவடி" என்பதாகக் கூறுகிறாள். "அதில் எழுதப்பட்டிருப்பதென்ன?" என்று மீண்டும் தொடர்ந்து கேட்கிறான். உடனே ககர வரிசையின் நான்கு எழுத்துக்களையும் சிறுமி விடையாகக் கூறு கிறாள்.

இதோ பாட்டு:

"காத்வம் பாலே? காஞ்சனமாலா;
கஸ்யா புத்ரீ? கனகலதா யாஹ;
ஹஸ்தே கிம்தே? தாலீ பத்ரம்;
காவா ரேகா? க, க்க, க்ஹ, கஹ."

பிறருக்குக் கடிதாகத் தோன்றும் ஒரு முயற்சி, வல்லான் வாய்ப்பட்டு எளிமையும் எழிலும் கலந்ததாகத் தோன்றுகிறது.

இவ்வாறு, விரும்பிய பொருளைக் கொண்டு விரைவாகக் கவிபாடும் ஆற்றலுடையார் பலர், பழந் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த போதிலும், பிற்காலத் திலே தான் ஆசுகவியை ஒரு தனிக்கலையாகத் தமிழகம் வளர்க்கத் தொடங்கியது. தமிழ் இலக்கியத்துள் இடம்பெற்றுள்ள முதல் ஆசுகவியாக இறையனார் அருளியதாகக் கூறப்படும் குறுந்தொகையின் இரண் டாவது செய்யுளையே கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், அது தருமி என்னும் அந்தணனுக்குப் பொற்கிழி வாங்கிக்கொடுப்பதற்குச் "சிந்தாசமத்தியாக" இறையனாரால் பாடப்பட்ட தென்பது பண்டுதொட்டே பயின்றுவரும் வழக்கு. "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி நற்கனகக் கிழி தருமிக் கருளினேன் காண்'' என்பது சம்பந்தர் கூற்று.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே"

என்னும் அப்பாட்டு இலக்கியச் சுவை நிரம்பியதாகும்.

இறையனாரின் இப்பாட்டிலே குற்றங் கண்ட நக்கீரனாரும், ஆசுகவி பாடும் ஆற்றல் பெற்றவராயிருந் தாரென அறிகிறோம். சங்கத்துச் சான்றோர்களுடன் நக்கீரர் வைகிவரு நாளில், கொண்டான் என்போன் பட்டி மண்டபமடைந்து வடமொழியே சிறப்புடைய

தெனவும், தமிழ்மொழி சிறப்புடைய தன்றெனவும் இழித்துக் கூறினன். அதுகேட்ட நக்கீரர் அங்கதம் பாடி அவன் உயிரிழக்கும்படிச் செய்தார். அந்நிகழ்ச்சியைக் கண்ட ஏனையோர் அவனை உயிர்ப்பிக்குமாறு வேண்டுகின்றனர். உடனே நக்கீரர் அவன் பிழைக்கப் பாடுகின்ருர் :

" ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனு ராணையினுற்
செந்தமிழே தீர்க்கசுவாகா " — இதனைப் பாடி

முடித்ததும் செத்தவன் பிழைத்தான் என்பர்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியத்தில் ஆசுகவியின் இலக்கணத்திற்குப் பொருந்துகின்ற பல பாக்கள் இருப்பினும்,இடைக்காலத்திலேதான் இத்துறை வளம் பெறத் தொடங்கிற்று. புலவர்கள் பலர், ஆசுகவி பாடும் தமது ஆற்றலைச் சீட்டுக் கவிகள் வாயிலாக வெளியிட்டுள்ளனர். சிலர் தங்கள் பெயருடன் சேர்த்து, ஆசுகவி என்னும் அடையினைத் தாங்கியிருந்தனர். சேறைக் கவிராச பிள்ளை யென்பார், 'ஆசுகவி ராச சிங்க'மென அழைக்கப்பட்டார். பாண்டிய ராசன் இவரை யாரென்று கேட்டதற்கு இவர் கூறிய மறுமொழியிலே, " உள்ளுக்கென்னை யழைப்பித்து ஆசிலுரைக்கும் கவிதைகள் கேட்டென்பால், வரிசைகள், பரிசில்கள் நல்கி இரட்சித்திட வேணும் " என்று வேண்டுகின்ருர்.

ஆசுகவித் துறையிலே கவி காளமேகம் பெற்றிருந்த ஆற்றல் வியந்து போற்றுதற்குரியது. அதனுலன்ரே அவருடலம் சுடுகாட்டில் எரியும்போது,

''ஆசுகவி யாலகில உலகெங்கும் வீசு புகழ்க் காள மேகம்'' என்பதாக இரட்டையர் இனைந்து பாடியுள் ளனர். திருமலைராயன் பட்டினத்திற்குச் சென்று அவைக்களப் புலவன் அதிமதுர கவியும் அறுபத்து னான்கு தண்டிகைப் புலவர்களும் கண்டு வியக்குமாறு யமகண்டம் பாடுகின்றான் காளமேகம். அவ்வாறு பாடிய பாடல்களிலே ஆசுகவியின் வகைகள் அனைத் தும் விளங்கக் காண்கிறோம்.

பாடுவதற்குரிய பொருள் கொடுக்க, ஆசுகவி பாடு வது ஒருவகை. அதற்கிணங்கத் திருமாலின் பத்து அவதாரங்களையும் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடக் கேட்கின்றனர். பின்னர், மும்மூர்த்திகளின் பெயரும், கறியும், கருவியும், பூணும், ஊர்தியும், தங்குமிடங்களும் உணவும், ஒரு வெண்பாவிலடக்கிப் பாடக் கேட்கின்ற னர். காளமேகம் உடனே கவிதை மழை பொழிந்தார்.

''சிறுவ னளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழம் பூவே கறி''

என்பதாக ஒரு வெண்பாவினுள் இருபத்தியொரு பொருட்கள் அமையப் பாடுவது அரிதேயாகும்.

எழுத்தைக் குறித்துப் பாடச் சொல்லுதல், ஆசுகவி யிலே இன்னொரு வகை. ஒருவர், காளமேகத்திடம் சோ, கா, மா, ஏ, வா, தா என்னும் எழுத்துக்கள் தொடர்ந்து வரப் பாடச் சொல்கிறார். இன்னொருவர் ஐந்து 'டு' வரப் பாடவேண்டுமென்கிறார். வல்லின எழுத்துக்களாலும், இடையின எழுத்துக்களாலும். தனித்தனிப் பாடல்களை வேண்டுகின்றனர். ககர இன

எழுத்துக்கள் மட்டும் அமைந்துவரக் காளமேகம் பாடிய "காக்கைக் காகா கூகை, கூகைக் காகா காக்கை" என்று தொடங்கும் செய்யுளில் ககர இன எழுத்துக்கள் மட்டுமே அமைந்திருக்கக் காண்கிறோம்.

ஆசுகவியில் இன்னொருவகை ஈற்றடி கொடுத்துப் பாடச் சொல்லுதல். இவ்வழக்கே ஆசுகவி வகையில் மிகுதியாக அமைந்துள்ளதென்னலாம்.

'பொன்னு வரையிலே காய்பூ'

'தைம்மாசி பங்குனி மாதம்' என்பன போன்று விரும்பிய தொடர் ஈற்றிலே வரக் காளமேகம் பாடியுள்ளான்.

'குடத்திலே கங்கைய டங்கும்' என்னும் ஈற்றடியை ஏற்றுப் பாடிய பாட்டுக் காளமேகத்தின் பெருமைக்கு அருமையான எடுத்துக்காட்டு. கங்கையானது விண்ணுலகிலும் மண்ணுலகிலும் கயிலை மலையிலும் பாய்வதோடமையாமல் பெருகி வந்தபோது, மங்கையொரு பங்கராகிய ஈசனுர் அதைத் தமது சடா மகுடத்திலே—அதாவது, சடை முடியாகிய கிரீடத்துள்ளே—அடக்கிக்கொண்டார் என்பதாகச் சொல்லழகும் பொருளழகும் ததும்பப் பாடுகின்ருர்.

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்"

என்பது பாட்டு. அணி நயந் தோன்ற ஆசுகவி பாடுதல் இன்னொரு வகை. தொடர்பில்லாத இரு பொருட்களைக் கூறி சிலேடை நயந்தோன்றப் பாடும்படிக் கேட்பார்கள். ஆசுகவி பாடுவோன் ஒன்று சேராத

பொருட்களையும் தனது புலமைப் பசையால் ஒட்ட வைக்கவேண்டும். பாம்புக்கும் எள்ளுக்கும், துப்பாக் கிக்கும் ஓலைச் சுருளுக்கும், பூசணிக் காய்க்கும் பரம சிவனுக்கும், மதிக்கும் மலைக்கும், முகுந்தனுக்கும் முறத் துக்கும், மீனுக்கும் பேனுக்கும், கண்ணுடிக்கும் காவ லனுக்கும் என்றிவ்வாறு சிலேடை நயந் தோன்றக் காளமேகம் பாடியுள்ள பாக்கள் பல. வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை பாடும்போது,

"வாரிக்களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்"

என்னும் தொடர், இரு பொருளுக்கும் பொருந்தக் காண்கிறோம். வைக்கோலானது, வயலிலிருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும். பின்பு புரியாகத் திரிக்கப்பட்டு நெற் கோட்டையைச் சூழ்ந்திருக்கும். இறுதியில் பெரிய குவியலாகக் குவிக் கப்பட்டு மலைபோல உயர்ந்து விளங்கும். யானையோ, போர்க் களத்தில் சேனைகளை நிலத்தில் தாக்கிக் கொல் லும்; போர் முடிந்தபின் மன்னனின் கோட்டைக் குள்ளே புகும். சண்டை செய்வதில் சிறந்து பிற படைகளைவிட மேன்மையடையும்.

இவ்வாறு, பலவகைப்பட்ட ஆசுகவிகளில் ஒன் றிற்கு மேற்பட்ட விதிகள் அடங்கப் பாடுதல் ஆசுகவி யின் சிறப்பினை உயர்த்துவதாகும். காளமேகத்தின் ஒரு கவியானது பொருளையும் சொல்லையும் ஏற்றுப் பாடப்பட்டதாக அமைந்துள்ளது. இராசிகளின் பெயரும் முறையும் தொகையும் அடைமொழி யின்றி ஒரு வெண்பாவி லமைப்பதுடன், 'பகருங்கால்' என்று

தொடங்கி 'இராசி வளம்' என்று முடியப் பாடவேண்டு மெனக் கூறியதற்குக் காளமேகம் உடனே பாடி முடிக்கக் காண்கிறோம்.

பிறரால் கூறப்படும் சமத்திக்கொப்பப் பாடுவதே மிகவும் கடிதாயிருக்கும்போது, அதில் நகைச் சுவை, பொருள் நயம், ஓசை நயம் முதலியன பொருந்தப் பாடுதல் அரிதேயாகும். அவ்வாறு பாடுதல் புலவர் களின் பெருமையை விளக்கும். 'குரங்கென்று' தொடங்கி, 'இடம்' என்று முடிக்கக் கவிஞரைக் கேட்டபோது, கவிஞர் ஒரு ஓவியமே தீட்டி விடுகிறார். இயல்பாகவே குறும்புக் குணம் மிகுந்த குரங்கொன்று நெருப்பிலே வீழ்கிறது. உடனே பித்துப் பிடித்து விடுகிறது. இந்நிலையில் அதைத் தேள் கொட்டுகிறது. போதாக் குறைக்கு பாம்பொன்று கையிலே சுற்றிக் கொள்கிறது. காலினை நண்டு கௌவிப் பிடிக்கிறது. இதற்கப்பால் பேயும் பீடிக்கிறது. பின்னர் குரங்கு கள்ளைக் குடிக்கிறது. இறுதியில் பச்சை மிளகாயையும் கடிக்கிறது. இதோ பாட்டு:

"குரங்கனலில் வீழ்ந்து, வெறிகொண்டு,
தேள்கொட்டக்
கரஞ் செறியப் பாம்பு, அலவன் கௌவ—
விரைந்து பேய்
பற்றவே, கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்''

ஒன்று முதல் பதினெட்டு வரை ஒரு வெண்பாவில் அமைக்கச் சொன்னால், புலவனின் திறத்தைக் காட்டு வதற்கு இடமில்லாமற் போகிறது. ஒன்றிரண்டு மூன் றென்றே அடுக்கி முடிக்கவேண்டும். ஆனால் போதிய

இடம் கிடைக்கும்போது ஆசுகவியா யிருந்தால்கூட நயஞ் செறிந்து விளங்குகிறது.

“ சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா நின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார் ”

என்னும் ஆசுகவியில் சிவன், முருகன், விநாயகன், திருமால், சிவனடியார் எல்லோருக்கும் ஆறுதலை யமைக்கின்றார் ஆசிரியர். சங்கரனாகிய சிவனுக்கு ஆறுதலை; அதாவது ஆறாகிய கங்கை தலையிலிருக்கிறாள். சண்முகனாகிய முருகனின் தலைகளின் எண்ணிக்கையே ஆறு. ஐந்து கைகளையுடைய விநாயகனுக்கும் ஆறுதலை; அதாவது வழிகளிலெல்லாம் கோயில். சங்கைப் பிடித்திருக்கும் திருமாலுக்கும் ஆறுதலையில்—அதாவது இரு ஆறுகளுக்கிடையில், திருவரங்கத்தில்—இருப்பிடம் உண்டு. இறைவனடியைப் போற்றுவோருக்கும் ஆறுதலை, அதாவது மனத்துயர் ஆறுகிறது. இதே கருத்து சதாவதானி சேகுத் தம்பிப் பாவலரவர்களின் ஆசு கவியொன்றில் திட்பமும் நுட்பமும், ஓசை நயமும் செறிந்திலங்கக் காண்கிறோம்.

“ சிரமாறுடையான் செழுமாவடியைத்
திரமா நினைவார்; சிரமே பணிவார்;
பரமா தரவா பருகா ருருகார்;
வரமா தவமே மலிவார் பொலிவார். ”

இச் செய்யுளிலுள்ள சிரமாறுடையான் என்னும் தொடர், கங்கையாற்றினைச் சிரத்திலேயுடைய சிவனையும், ஆறு சிரங்களையுடைய முருகனையும், மாறுபட்ட சிரத்தினையுடைய விநாயகனையும், ஆற்றிலே சிரத்

தையுடைய திருமாலேயும், தலேயாய நெறியினேக் காட்டும் முழுமுதற் கடவுளேயும் குறிக்கும் நயம் சுவைத்து மகிழ்தற்குரியது,

ஔவையார், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், பொய்யாமொழிப் புலவர், அந்தகக்கவி வீரராகவர் போன்ற புலவர் மணிகளின் வாழ்க்கைக் குறிப்புக் களும், அவர்களின் பாடல் தொகுதிகளும் அவர்தம் ஆசுகவி யாற்றலேப் பறை சாற்றுகின்றன.

அரிகண்டம், கண்டசுத்தி, அவதானம் போன்ற துறைகளுக்கு ஆசுகவி யாற்றலே அடிப் படையெனக் கூறுதல் தவருகாது. அரிகண்டம் என்பது கழுத்திலே கத்தி மாட்டிக்கொண்டு பாடுவது. கண்ட சுத்தி யென்பது ஒருவர் சமிக்கை கொடுக்க, காணுத அச் செய்தியைத் தான் கண்டதாகப் புலவன் பாட்டி லமைத்துக் கூறுவது. அவதானம் என்பதோ வியத் தற்குரியதோர் ஒப்பற்ற கலே. சதாவதானி சேகுத் தம்பிப் பாவலரவர்கள் சென்னேயிலே அவ்தானம் செய்யும்போது அவர்களின் ஆசுகவிப் புலமையை நோக்கி அறிஞருலகம் வியந்தது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஈற்றடிகளிலே, "விராடனேயே பெண் ணெனலாமே" என்பதும் ஒன்று. விராடன் என் பவன் மச்சநாட்டதிபதி; உத்தரையின் தந்தை. அவனேப் பெண்ணுக்கச் சொல்கின்றனர் சோதனே யாளர். புடம்போட்ட புலமை வாய்க்கப்பெற்ற பாவ லரின் ஆற்றல், விராடனேப் பெண்ணுக்கிக் காட்டிற்று.

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்ஞய்-மண்ணில்
வராடனேயே தெய்வம் மன்னெனும் சொற்ற
விராடனேயே பெண்ணெனலாமே"-என்பது பாட்டு.

இங்கு பெண்ணென்ற சொல்லுக்கு இலக்கணம் கூறு கின்ருர் பாவலர். உண்ணும்போதும், உறங்கும் போதும், சிந்தனையின் போதுமாவது ஒருவன் அமைதி யாக இருக்கவேண்டும். அப்போது கூட வெகுளிக் கனல் தெறிக்க வாழ்கிருன் ஒருவன். அவனேக் கணவனுகக் கொள்கிருள் ஒருத்தி. அவள் அவனேயே தெய்வமென்றும் மன்னனென்றும் போற்ற வேண்டும். அவன் சொல்லேத் தட்டாமல்—தவிராமல்—வாழ வேண்டும். அவளேத் தான், 'பெண்' என்று சொல்ல லாம். அதாவது சொல், தவிராள், தனேயே, பெண் ணெனலாம். சொல்—தவிராள் — தனேயே என்பது புணர்ந்து 'சொற்ற விராடனேயே' என்ருயிற்று. விராடனும் பெண்ணுயினுன்.

இன்று, ஆசுகவிபாடும் புலவர்களின் எண்ணிக்கை சுருங்கிக்கொண்டே வருகிறது. ஆனுல் ஆசுகவி அப்படியே மறைந்துவிட்டதெனக் கூறமுடியாது. புதுமைக் கவிஞர் பாரதியார் இளமையிலேயே ஆசுகவி பாடும் ஆற்றலேப் பெற்றிருந்தார். அவரது புலமை யைக் கண்டு புழுங்கிய ஆசிரியர் காந்திமதிநாதன், மாணவர் பாரதியை அருகழைத்து "பாரதி சின்னப் பயல்" என்னும் தொடர் ஈற்றிலே வர செய்யுளியற்றச் சொன்னுர். அஞ்சா நெஞ்சமும், தன்மான உணர்வும் மிகுந்த பாரதியும், ஆசிரியருக்குத் தக்க முறையிலே சூடு கொடுத்தார். "காந்திமதி நாதனேப் பார் அதி சின் னப் பயல்" என்று செய்யுளே முடித்தார். இறுதித் தொடர், ஆசிரியர் கூறியதற்கிணங்க 'பாரதி சின்னப் பயல்' என்றே யமைந்தது. ஆனுல் மாணவர் பாரதி, ஆசிரியருக்குக் கற்பித்த பாடமும் அதிலே அடங்கியுள்ளது.

7. சீட்டுக் கவி

திருமுகம் தீட்டுவது ஒரு தனிக் கலை. இன்று இக்கலை நல்ல முறையில் வளர்ச்சி யடைந்துள்ளது. கடிதங்களைக் கருவியாகக் கொண்டு அகன்றிருப்போர் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகளை வெளியிடு கின்றோம். நண்பர்கள் அன்புடன் அளவளாவும் கடிதங்கள், காதலர்கள் கனிமொழி பேசும் கடிதங்கள், உள்ளத்தைத் தொடுகின்ற வள்ளல்களைப் பாராட்டி வரைகின்ற கடிதங்கள், பகைவரிடமிருந்து படை யெடுத்து வருகின்ற கையெழுத்தில்லாக் கடிதங்கள், வணிகக் கடிதங்கள், அலுவலகக் கடிதங்கள், என்பதாகக் கடித வகைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' 'திறந்த திருமுகம்' 'போடாத தபால்' 'சேராத அஞ்சல்' போன்றவை பத்திரிகைகள் வழி பல வாசகர்களின் கருத்துக்களைக் கவர்ந்து வருகின்றன. சிறந்த ஆசிரியர்கள் எழுதுகின்ற கடிதங்கள் சில வேளைகளில் எதிர்பாராத முறையில் இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே அமைந்து விடுகின்றன. தாமஸ் கார்லைல், வில்லியம் கூபர், பைரன், மெக்காலே, ஜான்ஸன் ஆகியோர் தங்கள் உற்றார் உறவினர்களுக்கு எழுதிய ஆங்கிலக் கடிதங்கள், இன்று மற்றார் கருத்துக்கும் விருந்தளிக்கின்றன. தாய் நாட்டின் தளையவிழ்க்கப் போராடிய நமது நாட்டின் நல்லமைச்சர் நேரு, சிறையிலிருந்துகொண்டு தமது புதல்விக் கெழுதிய கடிதங்கள், இன்று வரலாற்றுக்கே வனப்பூட்டுவதாக அமைந்துள்ளன. தமிழ் இலக்கியக் கடலில் செய்யு

ளுருவிலே அமைந்திருக்கும் கடிதங்களைத் தான் சீட்டுக் கவியென்று வழங்கி வருகிறோம்.

நந்தமிழ் நாட்டின் செந்தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பண்புடையனவாய்ப் பாற்கடல் போலப் பரந்து கிடக்கின்றன. மங்காத புகழ் படைத்த சங்க காலத்திலே வாழ்ந்த புலவர் பெருமக்களின் கருத்துக் களஞ்சிய மெனத்தகும் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு. நாலடி, நான்மணி தொடங்கிய விழுமிய கருவூலங்களாகிய கீழ்க் கணக்கு நூல்கள். நெஞ்சை யள்ளும் செஞ்சொல் லோவியங்களாகிய ஐம்பெருங் காப்பியங்கள். சிந்தையைக் கவரும் சிறு காப்பியங்கள். கம்பர், சேக்கிழார், வில்லி, கச்சியப்பர், உமறுப் புலவர், வீரமா முனிவர் ஆகியோர் அளித்துள்ள பெரு நூல் கள். பதினெண் சித்தர்களின் பைந்தமிழ்ப் பாடல்கள். சைவ நெறி தழைக்க நாயன்மார்கள் பாடிய தேவாரத் திருவாசகங்கள், வைணவம் துலங்க ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்கள். பிற்காலத்தி லெழுந்த பிரபந்த வகைகள், தல புராணங்கள். — இவைகளெல் லாம் தமிழிலக்கியப் பெருங் கடலிலே பாய்கின்ற பேராறுகளென்று கூறுதல் வேண்டும். இவைக ளன்றி ஆங்காங்கே வந்து கலக்கின்ற கிளையாறுகளை யும் நாம் ஒதுக்கி விடுதல் கூடாது. தங்களுக்குரிய சில சூழ்நிலைகளிலிருந்து கொண்டு, தக்க புலவர்கள் இயற்றுகின்ற தனிப் பாடல்கள், போட்டிகளின்போது புகழை நாட்டுவதற்காகப் புகல்கின்ற செய்யுட்கள், அன்பர்களின் வேண்டுகோளையொட்டிப் பாடுகின்ற பாக்கள், செய்யுளுருவிலே எழுதும் கடிதங்கள், பிறர் நூலுக்கு மதிப்புரையாக வழங்குகின்ற சாற்றுக் கவிகள், உள்ளத்தில் இடம்பெற்றவர்களின் மறைவுக்

காகமன முருகப் பாடுகின்ற சரம கவிகள் ஆகிய வற்றைத் தமிழிலக்கியத்தில் காணக்கிடக்கும் சில் லறைக் கவிகளாகக் கருதுகின்றோம்.

இவற்றுள் சீட்டுக்கவிகளில் நமது சிந்தனையைச் சிறிது திருப்புவோம். புலவர்கள், தங்களை அறிமுகம் செய்து கொள்ளுவதற்கும், வள்ளல்களிடமிருந்து தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கும், பிறரைப் பாராட்டுவதற்கும், செய்தி அறிவிப்பதற்கும் செய்யுளுருவிலே முடங்கல் வரைந்து வந்தனர் அவற் றைத்தான் சீட்டுக்கவியென்றும், ஓலைத் தூக்கென்றும், ஓலைப் பாசுர மென்றும் கூறிவருகின்றோம். சீட்டிலோ, ஓலையிலோ எழுதப்படுகின்ற செய்யுள் இப்பெயர் களைப் பெறுதல் பொருத்தந்தானே ! தற்புகழ்ச்சி குற்றமாகாத நான்கு இடங்களைக் குறிப்பிடப் புகுந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர், 'மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும்' என்னும் தொடரில் அரசனின் அவைக்கு எழுதுகின்ற சீட்டுக் கவியில் 'ஒரு புலவன் தன்னைப் புகழ்தல் தகும்' எனக் கூறுவதிலிருந்து, மன்னர்களின் அவைக்களத்தில் தங்களை அறிமுகம் செய்து கொள்வதற்காகப் புலவர் கள் சீட்டுக்கவி எழுதும் வழக்கத்தை மேற்கொண் டிருந்தனரென அறிய முடிகிறது. இச்சீட்டுக் கவிகள் தோன்றத்தொடங்கிய காலத்தின் தன்மையை நாம் முதன் முதலில் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பழந்தமிழ்க் கவிஞர்களின் பண்புகளெல்லாம் அருகிப் போய் ஏட்டளவிலே நின்று விட்டன. புலவர் களிடையே போட்டியும் பொறாமையும் பெருகிக் கிடந்தன பொது மக்கள் பொருட் சிறப்பிலே கருத்

தைச் செலுத்தாது சொல்லாரவாரத்திலே சொக்கிக் கிடந்தனர். சித்திர கவிகளும் சிலேடைகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன. கழுத்திலே கத்தி மாட்டிக் கொண்டு அரிகண்டம் பாடுவதிலும், கொதிக்கும் கொப்பரைக்கு மேலிருந்து கொண்டு யமகண்டம் பாடுவதிலும் புலவர்கள் முனைந்து நின்றனர். இக்காலத் திலேதான் சீட்டுக் கவிகளின் தோற்றத்தைக் காண்கிறோம்.

கி. பி. பதினைன்காம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கவி காளமேகத்தை அனைவருமறிவர். 'இம் மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும், அம் மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ' என்பதாகச் சங்க நாதஞ்செய்த சண்டமாருதம் இவர் தான். திருமலை ராயன் பட்டினத்திலே அரசவைக் கவிஞர் அதிமதுரக் கவிக்குத் தம்மை அறிமுகஞ்செய்து கொள்வதற்காக ஒரு சீட்டுக் கவி வரைந்தனுப்புகிறார் காளமேகம். ஐந்து நாழிகையிலே ஒரு தூதும், ஆறு நாழிகையிலே ஒரு சொற்சந்தமாலையும், ஏழு நாழிகையிலே ஒரு அந்தாதியும், பத்து நாழிகையிலே மடலும் கோவையும், ஒருநாளிலே ஒரு பரணியும், இரண்டு நாட்களிலே பாரகாவியங்களும் பகர்ந்து கொடி கட்டியதாகத் தமது ஆற்றலை, அச்சீட்டுக் கவியில் அறிவிப்பதுடன் அமையாது,

சீதஞ்செயுந் திங்கள் மரபினன் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன்முன்
சீறுமா றுகவே தாறுமா றுகள் சொல்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்

கல்லணையினெடு கொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேக நானே !'

என்பதாகக் கூறுவது கவிஞர் சவாரியிலே காளமேகங் காட்டுகின்ற ஆர்வத்தை மட்டுமன்றிச் சீட்டுக் கவி களின் தன்மையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இதற்குப் பின்னர் ஒவ்வொரு நூற்ருண்டிலும் வாழ்ந்த புலவர்கள் எழுதியுள்ள பலவகைப்பட்ட சீட்டுக் கவி களைப் பார்க்க முடிகிறது.

இன்று நாம் எழுதுகின்ற கடிதங்களில், முதலில் பெறுவோரை அழைக்கின்ற விளியும், பின்னர் அவர் அறிந்துகொள்ள வேண்டிய செய்தி விளக்கமும், இறு தியில் அனுப்புவோர் பெயரும் அமைந்திருக்கும். ஆனல் சீட்டுக் கவிகளில் இம்முறை மாறுபட்டி ருக்கும். தொடக்கத்தில் அனுப்புவோர் பெயரும், அதைத் தொடர்ந்து பெறுவோர் பெயரும், இறுதியில் செய்தியும் இடம் பெற்றிருக்கும். மேலும், முதல் இரு பகுதிகளும் மிக விரிவாகவும் செய்திப் பகுதி சுருக்க மாகவும் அமைந்திருக்கும். குட்டிப் புலவர்கள் கூட, தங்கள் பெயரை எழுதும்போது, தாரணியில் தனக்கு நிகர் யாருமில்லை என்று குறிக்கத் தவறுவதில்லை. அஷ்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் தம்மைப் பற்றித் தாமே கூறுகின்ற ஒரு பகுதியைக் கேளுங்கள்.

"கல்விச் சமுத்திரம், கமலாலயம், தமிழ்க்கடல் மடைதிறந்த வெள்ளம், கற்பனைப் பிறப்பிடம், கலை மகள் இருப்பிடம், கவிமாரி பொழியு மேகம், சொல் விற்பனம் விளையும் மதுரக் களஞ்சியம், தோன்று கற்பூர தீபம், சுகிர்தகுண அவதானி........... "

"நாவலருக்குள்ளொரு நடு நாயகம், புவியில் ராஜ ராஜர்க்கு மகுடம், சகல கலை ஞாபகம், பூவில் விலை மதியாத மாணிக்கம், மாற்றேங்கு தங்கம், நாற் கவி விலாசம், மெய்ப்புத்தமுது அடைத்த கும்பம், பிரபந்த மேகம், தமிழ்க் குஞ்சரம், கவி ராஜ சிங்கம், இந்துச் சமுத்திரம், தமிழ்ப் பொக்கிஷம், சோதிப் பிரகாசம்" என்றிவ்வாருக அடுக்கிச் செல்கிருர். தம்மை அறிமுகஞ் செய்கின்ற தருணத்தில் இவ்வாறு குதித்துக் கூத்தாடிய புலவர், தமது ஆசிரியரை நினைக்கும் போது அப்படியே அடங்கி யொடுங்கி விடுகிருர். தமது ஓலைத் தூக்கு ஒவ்வொன்றிலும் நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் தமது ஆசிரியரைப் பாராட்டுகின்ருர். 'சோமசுந்தரசுவாமிதாசன்', 'சோம சுந்தர குருவின் அருளொன்று மடிமை', 'சோமசுந்தர குரு கடாட்ச வீட்சண விலாசன்,' 'சோமசுந்தரகுரு சுவாமி அடிமைக்கு மடிமைக்கு மடிமை' என்று பணி வன்புடன் பலவிடங்களில் பகர்வது குறிப்பிடத் தக்கது. மாம்பழக்கவி சிங்க நாவலர், சேலம் ஜில்லா முத்தபுரி சமஸ்தானம் ஜமீன்தாரணியவர்களுக்குச் சீட்டுக் கவி வாயிலாகத் தம்மை அறிமுகம் செய்து கொள்கிருர்:

"தர்க்கமிடுவோர் பற்களைப் பொடியாய்த்
தகர்க்கின்ற வஜ்ராயுதம்,
சண்டாளரைப் பிளக்குங் கண்ட கோடாலி"

என்பதாக. மெல்லிய லாரிடத்தே இவ்வாறு வல்லமை யைக் காட்டும்போது, தம் பாலாருக்கு எவ்வாறுரைப் பார்க ளென்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

தங்களைப் பற்றியே பாவலர்கள் இவ்வாறு பகரும் போது, தாங்கள் நாடிச் செல்கின்ற காவலர்களுக்கு

எத்தகைய புகழ்மாலையைப் புனைவார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சென்ற நூற்ருண்டின் இறுதியில் வியாசர்பாடி யென்னுமிடத்தில் விநயக முதலியார் பெயர் பூண்ட வள்ளலொருவர் தோன்றினர். அவர் தகுதியான தமிழறிவும், மிகுதியான நல்லியல்புகளும் வாய்க்கப் பெற்றவர். தமிழ்ப் புலவர்களின் தகுதியறிந்து தக்கமுறையில் பரிசளித்துப் பாராட்டி இருக்கிருர். இராமனுதபுரம் சமஸ்தானப் புலவர்கள் இவரைப் புகழ்ந்து போற்றி யுள்ள சீட்டுக்கவிகள் பல. அழகிலே மாரனென்றும், வாய்மையிலே அரிச்சந்திரனென்றும், செல்வத்திலே குபேரனென்றும் புகழ்வதோடமையால் முதலியார் சென்னைமா நகரத்தில் வாழ்வதையும் பெருஞ் சிறப்பாகப் பலரும் கொள்வது குறிப்பிடத் தக்கதாகும்.

சீட்டுக்கவிகளின் மூன்ருவது பகுதிதான் செய்தி விளக்கம். சிலர் இப்பகுதியைச் சுருக்கமாக அமைத்து விடுகின்றனர். வேறுசிலர், வள்ளல்களுக்கு விடுக்கும் வேண்டுகோளை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பு மொழிகளால் உணர்த்துகின்றனர். அஷ்டாவ தானம் சரவணப் பெருமாட் கவிராயருக்குச் சென்னை செல்வதற்காகப் பொருள் தேவையுண்டாயிற்று. தமக்கு இருபது லட்சம் வராகன் அனுப்பி வைக்கும்படி முகம்மது தம்பி என்பாருக்குத் தமது கருத்தை வெளியிடுகிருர்.

" உவ்வொன்று, யவ்வொன்று
லவ்வொன்று டவ்வொன்று
சவ்வொன்று மவ்வொன்று
வவ்வொன்று, ரவ்வொன்று,

கவ்வொன்று, னவ்வொன்று,
வரவிடல் வேண்டுமே."

என்பது அவர் குறிப்பு.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பதினேழாம் நூற்ருண்டிலே வாழ்ந்த புலவர். சீட்டுக்கவி பாடுவதிலே சிறந்தவரென நிரஞ்சன கவிராயரால் புகழ்ந்து பாராட்டப் பட்டவர். புறக்கண்ணிழப்பினும் அகக்கண் பெற்று, 'ஏடாயிரங்கோடி எழுதாது, தன் மனத் தெழுதிப் படித்த விரகர். 'தமக்கு ஒரு குதிரை வேண்டு' மென்ற கருத்தை இவர் செழிய தரையான் என்பானுக்குத் தெரிவிக்கிருர்.

"பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொலாத கோணம்,
பறவாத கொக்கு, அனற் பண்ணுத கோடை,
வெம்படையிற் ருெடாத குந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாவொடு தொடுத்து
முடியாத சடிலம், சொன்ன சொற்
சொல்லாத
கிள்ளையொன்று எங்குந்துதிக்க
வரவிட வேண்டுமே"

இந்த பாட்டுக்காகவாவது பரிமாவொன்று பரிசளிக்க வேண்டியது தானே! இடைக் காலத்திலே மணிப் பிரவாள நடையைக் கையாள்வதிலே கவிராயர்கள் காட்டிய அளவற்ற ஆர்வம், அவர்கள் எழுதிய சீட்டுக் கவிகளிலும் எதிரொலித்து நிற்கிறது. அவர்கள் தங்களின் வடமொழித் திறமையைத் தமிழ்க் கவிகளிற் காட்டுவதைத் தனிச்சிறப்பாகக் கருதினுர்களென நினைப்பது தவருகாது. கவிராயரொருவரின் சீட்டுக் கவி காட்டும் மணிப் பிரவாள நடையை நோக்குவோம்.

" தனகனக வாகனவி ஞேதசர் வக்ஞான
சாம்ப்ராச்ய, சார்வபூமன்,
சற்புத்ர, சன்மார்க்க, சத்ப்ரபல, சற்சுகிர்த
சத்சிநேக, ப்ரதாபன்,
சகல குண சம்பன, சிரோ ரத்ன முக்ய புனி
தப்ரதான, சிரேஷ்டன்,
சுகார்திக சுஜாதிக சுதாகர சுயாமக
சுபாக சற்புருஷ ரத்னம்,
சுதந்தர சுமங்கல சுரஞ்சித சுமந்திர
சுயம்ப்ரகாச ப்ரதாபம்
சுபந்திர சுலட்சண சுகற்புத சுசற்சன
சுக ப்ரபல ரத்நாகரம். "

என்றெழுதும் போது வடமொழிச் சொற்களை ஒட்ட வைக்கும் பசையாகத் தமிழ் பயன் படுத்தப்பட்டிருப் பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சில சீட்டுக்கவிகளில் புலவர்களின் கற்பனை உள் ளத்தைக் காணமுடிகிறது. ஒருவர் தம்மை யொரு யானைக்கும், முத்தமிழை மும்மதத்திற்கும், எழுத்தா ணியைக் கொம்புக்கும், நன்னூல்களைக் கச்சுக்கும், ஆசிரியரைப் பாகனுக்கும் ஒப்பிட்டுக் காட்டுந்திறம் சுவைத்தின்புறத் தக்கது. சென்னைமா நகரின் சிறப் பைக் கூறப் புகுந்த ஒருவர், ஐந்து திணைகளிலு முண் டாகின்ற செல்வங்க ளனைத்தையும் ஓரிடத்துச் சேர்ப்ப தற்காகத் தான் நான்முகன் இம் மாநகரை ஆக்கியுள் ளானெனச் சொல்கிருர். சில இடங்களில் புலவர்கள் மேற்கொள்ளும் சந்தங்கள் சலிப்பைப் போக்க உதவு கின்றன.

" தமிழ்க்கடன் மடைப்புனல் திறக்குமதெனக்கனி
சருக்கரை பொரப்பகருவோன் வடக்கொடு குடக்கொடு

கிழக்கொடு திசைப்புற மணந்திடு புகழ்ப்ரதாபன்
வடித்திடு மிலக்கண விலக்கிய வகைக்கொரு
மலைக்குரு முனிக்கு நிகர்வான்"

என்று கூறும் போது ஓசையுடன் உள்ளமும் துள்ளு கிறதல்லவா? ஆண்பாற் புலவர்கள் மட்டுமின்றி, மாதர்கள்கூடச் சீட்டுக் கவி தீட்டி இருக்கின்றனர். திருக்கண்ணபுரத்துப் பெண்ணொருத்தி முனைய தரையனென்ற அரசனுக்கு வெண்பா வடிவில் வரைந்த சீட்டுக்கவியொன்றின் முற்பகுதி நயம்பட அமைந்துள்ளது.

"இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு
நின்றுவரி லதுவு நீயறிவை. "

ஒருவர் கடிதத்தால் பெற்ற மகிழ்ச்சியைக்கூடச் சீட்டுக் கவியிலே சொல்வதுண்டு, காரைக்கால் தனக்கோடி முதலியாரிடமிருந்து தான்பெற்ற கடிதத்தாலுண்டான மகிழ்ச்சியை வேதநாயகம்பிள்ளை கடிதம் வாயிலாக வெளியிடுகின்றார்.

"இத்தலம் போற்றும் தனக்கோடி பூப நின்கடிதம்
கைத்தலமேந்தி விழித்தலமொத்திக் கனசிரமாம்
அத்தலஞ்சூடி யகத்தலம்பூரித் தரசுரிமை
முத்தலம் பெற்றவர்போலே சுகக்கடன்
மூழ்கினனே"

வசன நடை வளம்பெறத் தொடங்கிய சென்ற நூற்றாண்டிலே எழுதப்பட்ட சீட்டுக் கவிகள் பழைய மரபு களிலிருந்து ஓரளவு மாறுபட்டிருக்கக் காண்கிறோம். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்றோர் உரை நடையிலே முடங்கலெழுதத் தொடங்குதற்கு முன்னர், கடிதத் தலைப்பிலே ஒரு செய்யுளமைக்கும்

வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அவர் மாணவர் உ. வே. சுவாமிநாதையரும் அவரைப் பின்பற்றியுள்ளார். ஐயரவர்கட்கும் வித்துவான் தியாகராசச் செட்டியாரவர்கட்கு மிடையே நடந்த கடிதப் போக்கு வரத்துகளிற் பல சுவையூறும் செய்யுட்கள் பிறந்திருக்கின்றன. நாஞ்சில் நாட்டிலேயுள்ள கோட்டாற்றில் வாழ்ந்த கணபதி ஆச்சாரி அவர்கட்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை யவர்கள் எழுதிய கவிக் கடிதமொன்று சீட்டுக் கவியின் அமைப்பிலும் நடையிலும் பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது

கடல்சூழ் புவிக்குக் கருதுநான் கெல்லையில்
இடம்பெறு தென்றிசைக் கெல்லையா யிருந்த

நுமது நாட்டுக் குமரிக் கோடிபோல்
நீவிரும் தமிழ்க்கோர் நிலைபெறும் எல்லையே

ஆவிரென்ப; ஆயினும் குமரிக்
கோடி கோடியே; நீயிரோ கோட்டமில் ஏகர்

முன்னோர் புகழும் மும்முடிச் சோழ
நல்லூர் என்னும் நும்மூர் மான

முத்தமிழ்க் குரிய மும்முடி நுமக்கே
ஒத்ததா மென்ப, ஆயினும் நும்மூர்

குடபால் செல்லும் கோட்டா றுடைத்து—நீரோ
குணபால் செல்லும் கோடா ஆற்றர்"

பாரதியின் சீட்டுக்கவிகளும், அவர்தம் ஏனைய எழுத்தோவியங்களைப் போலவே எளிய முறையில் அமைந்திருக்கின்றன. எட்டயபுரம் மன்னர்வெங்கடேசு ரெட்டப்ப பூபதிக்கு பாரதி வரைந்தனுப்பிய ஓலைத்தூக்கின் ஒரு பகுதியைக் காண்போம்:

"பாரி வாழ்ந்திருந்த சீர்த்திப் பழந்தமிழ் நாட்டின்
கண்ணே
ஆரியநீ இந்நாளில் அரசுவீற் றிருக்கின்றாயால்
காரியங் கருதி நின்னைக் கவிஞர்கள்
காணவேண்டில்
நேரிலப்போதே எய்தி வழிபட நினைக்கிலாயோ?"

நாஞ்சிலளித்த நாவலர் பெருமான் சதாவதானி சேகுத் தம்பிப் பாவலரவர்கள் ஒரு தமிழ்க் கடலாகத் திகழ்ந் தவர். அவர்தம் பாடல்களில் பழமையும் புதுமையும் பூத்துக் குலுங்கக் காணலாம். பாவலரவர்கள் சென்னை யிலே தங்கியிருந்தபோது, தமது நண்பர் பக்கியம் பண்டாரத்திற்கு வெண்பா வடிவில் கடிதம் வரை கிறார். அதிலிரு வெண்பாக்கள்:

"பாக்கியமே யோருருவாய்ப் பாரிடத்து வந்ததிருப்
பாக்கியமே நின்சமுகம் பல்கோடி—யாக்கியவம்
வந்தனமெ லாமேற்று வாழுமுன்சே மத்தினையு
வந்தனமெ லாமெழுது வாய்.
ஆகஞ் சுகமா வடுத்தவர்கள் சேமமா
மேகம் வழங்கியதா மேலுமிந்தப்–போகம்
விளையுமா வின்னுமழை வேண்டுமா செல்வம்
வளையுமா வூர்செழிக்கு மா?"

இதுபோன்ற பகுதிகளைப் படிக்கும்போது வெண்பாக் களின் இனிமையுடன், நண்பர்கள் நேருக்கு நேரி ருந்து உரையாடுவது போன்றதொரு இயல்பினையும் உணர்கின்றோம். கடிதங்கள் இவ்வாறிருக்க வேண்டு மென்றுதானே நாமும் விரும்புவோம்.

கவிஞர்கள் தங்கள் வாய்மொழியாக அமைக்கும் கடிதங்கள் மட்டுமின்றி, பிறர் கூற்றாகப் புலவர்கள்

அமைக்கின்ற கடிதங்களையும் இலக்கியங்களிற் காண்கின்றோம். அவற்றுள்ஒன்று இளங்கோவடிகளின் சிலம்புச் செல்வத்தில் இடம் பெற்றுள்ளது. வெண்ணிறமும் நறு மணமும் கொண்ட தாழையின் மடலை ஏடாகவும், செம்பஞ்சுக் குழம்பே மையாகவும், நறுமணங் கமழும் பூவரும்பின் முனையே கோலாகவுங் கொண்டு பிரிந்து சென்ற காதலன் கோவலனுக்கு மாதவி வரைந்துள்ளதாக அமைந்துள்ள கடிதம் பெருஞ்சுவை பயப்பதாகும். இன்றைய கவிஞர்கள் பலர் தங்கள் கருத்துக்களை விளக்கக் கடிதமுறையினைக் கையாளக் காண்கிறோம். அவைகள் பெருஞ்சுவை பயப்பினும் சீட்டுக் கவிகளின் வரிசையில் இடம்பெற மாட்டா. ஏனெனில் கவிதையுருவில் தங்கள் கருத்துக்களை நேரடியாக ஒருவருக்குக் கூறுவதுதானே சீட்டுக் கவியின் நோக்கம்!

8. இலக்கியத்தில் நகைச்சுவை

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

என்பதாகக் கூறிச் சென்ருர், வாழ்க்கை இலக்கியம் வழங்கிய வள்ளுவப் பெருந்தகை. வாயினுல் உணவு வகைகளை மட்டும் சுவைக்கத் தெரிந்த மக்களைப் பற்றி உலகுக்குக் கவலையில்லை. செவியினுல் கேள்விப் பொருட்களைச் சுவைக்கத் தெரிந்தவர்களைத்தான் உலகம் விரும்புகிறது. அத்தகைய சுவைகளுள் ஒன்று நகை. இன்பமும் துன்பமும் கலந்துள்ள மனித வாழ்விலே துன்பமே பெரும் பகுதியெனக் கூறுவது குற்றமாகாது. அத்துன்பமானது குறுக்கிடும் போது, அதைக் கண்டு மருட்சி கொள்ளாமல், 'எதையும் தாங்க இதயமுண்டு' என்னும் எண்ணத்துடன், அதைத் தூளாக்குவதில் இன்பங்காணும் மனிதன் உயர்வடைகிருன். "இடுக்கண் வருங்கால் நகுக!" என்று கூறி இத்துறையில் நமக்கு வழி காட்டுகின்ருர் வள்ளுவர்.

இத்தகைய நகைச் சுவையைக் குறித்து நல்லாராய்ச்சிகள் நடத்திய உளநூலறிஞர்கள் பலருளர். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், தாமஸ் ஹாப்ஸ் போன்ருேர் அவர்களுள் குறிப்பிடத் தக்கோர். உடம்பில் குருதியோட்டம் கூடுவதற்கும், மூளையில் புத்துணர்ச்சி புகுவதற்கும் நகைச்சுவை நற்றுணை புரிகிறது. நாள் தோறும் நமது வாழ்விலே நாம் காணும் பல காட்சிகளும், செவி மடுக்கும் செய்திகளும், நிகழ்ச்சிகளும் நம்மை யறியாமலேயே நம்மை நகைக்கச் செய்துவிடு

கின்றன. வாழைப் பழத் தோலில் வழுக்கி வீழ்கின்ற கனவான், கீச்சுக்குரலிற் பேசும் பேருருவினர், பேசுவதற்காக மேடையிலேறிவிட்டு நடனமாடுகின்ற சொற்பொழிவாளன், விசாரணை நடத்தும்போது தூங்கி விழுகின்ற நீதிபதி—ஆகியோரின் நிலை கவலைக்கிடமானலும் நமது சிரிப்புக்கிடமாகின்றது. உளறுவாயனாக இருக்கும் ஒருவனின் பெயர் 'நாவுக்கரசு' என்று அறியும்போதும், ஓயாமல் நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒருவனின் பெயர் 'ஆரோக்கியசாமி' என்பதைக் கேள்விப்படும்போதும், அவற்றிலுள்ள பொருந்தாத் தன்மையைக் கண்டு நாம் நகைக்கிறோம். மூக்குக் கண்ணாடி முகத்திலேயிருக்க அதனை ஊரெல்லாம் தேடி யலைகின்ற முதியவர், கரும்பலகை துடைக்கும் துணியால் முகவியர்வை துடைக்கின்ற ஆசிரியர், புத்தகத்திற்குப் பதிலாக புனைபொருட் பையைத் தூக்கி வருகின்ற மாணவி, அலுவலகத்திற்குச் செல்லும் அவசரத்தில் சட்டையை மாற்றிப்போடுகின்ற பணியாள், வாழைப் பழத்தை உரித்துத் தோலை வாயிலிடுகின்ற விருந்தாளி, ஆறு நேர மருந்தை ஒரே நேரத்தில் குடிக்கின்ற நோயாளி, ஆகியோரின் மறதியைக் காண்போர் வயிறு குலுங்கச் சிரிப்பதைப் பார்க்கிறோம்.

இத்தகைய நகைச்சுவைகள் நீண்டநேரம் தங்காமல், தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை. ஆனல் அவை இலக்கியத்தில் இடம்பெறும்போது நமக்கு மாருத மகிழ்ச்சியை என்றென்றும் அள்ளிச் சொரிகின்றன. நகைச் சுவையின் சிறப்பையும் பயனையும் நன்குணர்ந்த தமிழர்கள், மிகப் பழங்காலந்தொட்டே தங்கள் வாழ்விலும் இலக்கியத்திலும் இச்சுவைக்கு நல்லதோரிடம் நல்கி வருகின்றனர். கூத்துக்களில்

வருகின்ற கோமாளிகளும், அரசர்களின் அவைக்களங் களில் இடம்பெற்றிருந்த "விதூடகர்களும்" நகைச் சுவையை வளர்ப்பதற்காகவே அமர்த்தப்பட்டவர் களாவர்.

நாட்டு மக்களின் உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்ற நாட்டுப் பாடல்களில் இந்நகைச் சுவை விஞ்சி நிற்கக் காண்கிறோம். அதற்கொரு எடுத்துக் காட்டு :

" முள்ளு முனையிலே மூணுகுளம் வெட்டி
ரெண்டு குளம் பாழு ; ஒண்ணுலெ
தண்ணியே யில்லே.
தண்ணி யில்லாக் குளத்துக்கு
மண்ணுவெட்ட மூணுபேரு;
ரெண்டு பேரு நொண்டி; ஒருத்தன் கையே யில்லே.
கையில்லாத குசவன் செய்த பானை மூணு பானை;
ரெண்டு பானை பச்செ; ஒண்ணு வேகவே இல்லே.
வேகாத பானைக்கு போட்டரிசி மூணரிசி;
ரெண்டரிசி நறுக்கு; ஒண்ணு வேகவே இல்லே.
வேகாத சோத்துக்கு விருந்துண்ண மூணுபேரு.
ரெண்டு பேருபட்னி; ஒருத்தன் உண்ணவே இல்லே.
உண்ணாத கொத்தன் கட்டினது மூணு கோயில்;
ரெண்டு கோயில் பாழு; ஒண்ணு சாமியே இல்லே."

இன்னொரு பாட்டு ஓயாது வேலை செய்கின்ற ஒரு பாட்டியையும், வீண் பொழுது போக்கும் சிறுமியை யும் காட்டுகிறது.

"ஆட்டி ஆட்டி மிளகரைக்க பாட்டி வந்தாளாம்,
ஆட்டினதை எடுத்துப் போடக் குட்டி வந்தாளாம்;
நீட்டி நீட்டி வேலை செய்யப் பாட்டி வந்தாளாம்,
நிண்ணு நிண்ணு சிரிச்சுப் பேசக் குட்டி வந்தாளாம்;
கேணித் தண்ணி இறச்சு ஏந்தப் பாட்டி வந்தாளாம்,
கிழக்கு மேற்கு பாத்து நிக்கக் குட்டி வந்தாளாம்;
சாணி தட்டி கழனிவைக்கப் பாட்டி வந்தாளாம்,
தயிர்ப் பாலை கொட்டித் திங்கக் குட்டி வந்தாளாம்;
சுள்ளி பொறுக்கக் காடு சுத்தப் பாட்டி வந்தாளாம்,
சூடுதண்ணி போட்டுக் குளிக்கக் குட்டி வந்தாளாம்;
வெள்ளை ஆப்பம் சுட்டுவிக்கப் பாட்டி வந்தாளாம்,
வித்த காசில் பூவு வாங்கக் குட்டி வந்தாளாம்."

பிறரைக் கேலி செய்வதற்காக எழுந்த நாட்டுப் பாடல்களில் நகைச் சுவையே அடிப்படையாக அமைந்திருக்கக் காண்கிறோம். ஒரு வளையற்காரனைக் கேலி செய்கின்ற ஒரு பாடல்.

"நண்டுவளை மண்ணெடுத்து
நாகரிக வளையல் செய்து
பொண்டுகளைக் கைபிடிக்கப்
பொறந்தா ரய்யா வளையற்காரர்"

காதல் கனிய உரையாடும் தருணங்களிலும் இந் நகைச் சுவைக்கு நல்லிடம் அளிக்கப்படுகிறது. பாமர மக்களின் நகைச்சுவை யுணர்வு அவர்கள் வாழையடி வாழையாக வழங்கி வருகின்ற . பழமொழிகளி லும், உவமைகளிலும் நன்கு வெளிப்படுகிறது.

'சைனன்கை சீலைப் பேனைப் போல'
'திகம்பர சாமிக்கு வண்ணான் உறவு ஏன் ?'
'வழுக்கைத் தலையனிடம் சீப்பு கேட்பதைப்போல'

என்பன அவற்றுள் சில.

நாட்டுப் பாடல்களிலும் பழமொழிகளிலும் நகைச் சுவையைக் காண்பது எளிதாகவிருப்பினும் அறிவுரை யாற்றுகின்ற அறநூல்களிலே அதற்கு இடமளிப்பது கடிதுதான். ஆனால் திருக்குறளில் பல இடங்களில் வான்புகழ் கொண்ட வள்ளுவனார் இச்சுவையைப் பொருத்தமாக அமைத்துக் காட்டுகிறார். கயவர் களாகிய கீழ் மக்களின் இயல்பைக் கூறவந்த பொய்யிற் புலவர்,

"தேவரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழு கலான்"

எனக் கூறுகிறார். முதன் முதலாகக் கயவர்கள் தேவர்களை யொத்தவர்களென்று சொல்லி அவர்களை ஒரு மலையுச்சியிலே கொண்டு நிறுத்துகிறார். பின்னால் அதற்குரிய காரணத்தைக் காட்டுகிறார். தேவர்கள் தாங்கள் எண்ணிய செயலை நிறைவேற்றத் தவற மாட்டார்கள். கீழ்மக்களும் அதுபோலவே தாம் செய்ய விருக்கும் கருமத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பாராமல், கீழான செயல் புரிந்து தாழ்வடைவர். இவ்வாறு மலைமுகட்டி லேற்றிய கயவர்கள் குப்புறத் தள்ளப் படுகிறார்கள். உலகம் சிரிக்கிறது!

சங்கச் செய்யுட்களிலே நகைச்சுவை வெளிப்படும் இடங்கள் பற்பல. கற்றோரேத்தும் கலித்தொகையில் கபிலர் காட்டுகின்ற ஒரு காட்சியை மட்டும் நாம் காண்போம். தலைவி, தன் தோழிக்குக் கூறுகிறாள்: 'சுடர்த் தொடியே! கேட்பாயாக! முன்னாள் நாம் மணல் வீடுகட்டி மகிழ்ந்தாடுகின்ற காலத்து, அதனைக் காலால் சிதைத்து நம்மைத் துன்புறுத்துவானே அவன், ஒரு நாள் நம் வீட்டிற்கு வந்தான். தெருவாயிலிலே நின்று

கொண்டு தாகத்திற்குத் தண்ணீர் கேட்டான். அவனுக்கு நீரூட்டுவதற்காக அன்னையும் என்னை அனுப்பினாள். நான் நீரூட்டச் சென்றதும் அவன் என் முன் கையைப் பற்றி இழுத்தான். உடனே நான் 'அம்மா' வென்றலறிவிட்டேன். அன்னை ஓடி வந்தாள். ஆனால் நான் இவன் நீருண்ணும் போது விக்கினான் என்பதாகக் கூறினேன். அன்னை அவன் விக்காமலிருக்கத் தடவிக் கொடுத்தாள். அவனோ கடைக்கண்ணால் என்னைக் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டம் செய்தான். என்று கூறி முடிக்கிறாள் தலைவி.

செந்தமிழ்க் காப்பியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் நகைச்சுவை பொருத்தமான இடங்களிலே புகுத்திக் காட்டப்படுகிறது. மணிமேகலையும் சுதமதியும் மலர் கொய்வதற்காக மலர் வனம் புகும்போது, வீதியிலே பல காட்சிகளைக் கண்டு செல்கின்றனர். அவற்றுள் ஒன்று, உண்ணா நோன்பி யொருவனுக்கும் களிமகனொருவனுக்கு மிடையே நடைபெறுகின்ற உரையாடல். அருகப்பள்ளியில் வாழ்கின்ற உண்ணா நோன்பி, காணாத உயிர்களுக்கும், கையற்றேங்கி, மண்ணா மேனியனாய் நாணமும் உடையும் நீத்து நடந்து வருகிறான். அவனைக் கள்ளுண்பதற்காக இரந்து வேண்டுகின்ற களிமகன் கூற்று நம்மைச் சிரிக்க வைக்கிறது.

"வந்தீரடிகள் நும்மலரடி தொழுதேன்;
எந்த மடிகள் எம்முரை கேண்மோ
வழுக்குடை யாக்கையிற் புகுந்த நும்முயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா

திம்மையும் மறுமையும் இறுதியிலின்பமும்
தன்வயிற் றருஉம்; என்தலை மகனுரைத்தது.
கொலையுமுண்டோ கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின் மெய்தவத் தீரே"

என்பதாகக் களிமகன் களிததும்பக் கூறுகிறான்.

கற்பின் கொழுந்தாகிய கண்ணகியும் அவள் காவலன் கோவலனும், மாதவத்தாட்டி கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கிச் செல்லும் காட்சியைக் காட்டுகிறார், பாவடிகள் தேன்வடியப் பாடிய இளங்கோவடிகள். நான்மறையாள ரொருவன் வழியிலே எதிர்ப்படுகிறான். திருமால் குன்றத்தில் பெருமால், கெடுக்கும் பிலங்களாகிய சரவணம், பலகாரணியம், இட்ட சித்தி ஆகியவற்றின் அற்புதங்களைக் கூறுகின்றான். அவனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கவுந்தியடிகள், இறுதியாக,

"நலம்புரி கொள்கை நான் மறையாள !
பிலம்புக வேண்டும் பெற்றி யீங்கில்லை ;
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்!
காமுறு தெய்வம் கண்டடி தொழ நீ போ
யாங்களும் நீணெறிப் படர்குதும்"

என்று கூறும்போது இளங்கோவடிகளின் நகைச் சுவையுள்ளத்தை நயந்து போற்றுகின்றோம்.

சீவக சிந்தாமணியில் கேமசரியாரை மணந்த சீவகன் விரைவிலே பிரிந்து செல்கிறான். வழியிலே வழிப்போக்கனொருவனைக் காண்கிறான். இருவருக்குமிடையே நடை பெறுகின்ற உரையாடல் நகைச்சுவை

யுடன் நல்ல கருத்துக்களேயும் விளக்குகின்றது. நான்கு மனேவிகளின் வயிற்றில் ஒரு புதல்வன் பிறந்தானெனக் கேட்டதும் நாம் வியப்படைகிருேம். தானம், சீலம், தவம், அறிஞர் சிறப்பு ஆகியவை அம்மனேவியர் என அறியும்போது சிரிக்கிருேம். இது திருத்தக்க தேவர் வெளிப்படுத்துகின்ற நகைச்சுவை.

இது போலக் களிதமிழ்க் கம்பன் ஒரு உரையாடலே அமைத்துள்ளான். மிதிலேச் செல்வியைத் தேடித் தனக்குமுன் வந்த இராமதூதனே நோக்கி இராவணன், "வாலி நலமா" என வினவுகின்ருன். வானர வீரன் வாலியின் வாலிஞல் பிணேக்கப்பட்டு அரக்கர்கோன் அடைந்த அவமானத்தை அனுமன் நன்கறிவான். ஆகவே அவன், "அஞ்சவேண்டாம், அரக்கர் தலேவ! வாலியும் இறந்தான். அவனது வாலும் அழிந்து விட்டது. ஆனுல் சூரியகுலத் தோன்றலாகிய வாலியின் அழிவுக்குக் காரணமானது இராமனின் ஒரு கணேயே என்பதை மட்டும் மறந்து விடாதே" என்பதாக மறுமொழி கூறுகின்ருன்.

"அஞ்சலே! அரக்கர்பார் விட்டந் தரமடைந் தானன்றே;
வெஞ்சின வாலி மீளான்; வாலும்போய் விளிந்த
தன்றே."

என்று கம்பன் காட்டுகின்ற தொடர் சுவை பயப்பதாகும்.

பிற்காலத் தெழுந்த பிரபந்தங்களிலும் நகைச் சுவையை மிகுதியாகக் காண்கின்ருேம். பிரபந்த வகைகளி லொன்று பரணி; ஆயிரம் யானே அமரிடை வென்ற மானவனுக்கு வகுக்கப்படுவது. அப் பரணிகளிற் சிறந்ததொன்று கலிங்கத்துப் பரணி.

அதனுள் செயங்கொண்டார் பேய்களின் உருவத்தை யும், அவை பல் துலக்கிக் குளிக்கின்ற காட்சியையும் காட்டுகின்ருர். பாம்புகளேப்போன்ற மயிர்களும், பாசி படிந்த மூக்குகளும், ஆந்தைகளுலவும் செவிகளும், மண் வெட்டிப் பற்களும், விண் முட்டும் தலேகளும் பேய் களுக்கு அணி செய்கின்றன. அப்பேய்கள் கூழருந்து வதற்காக ஆயத்தமாகின்றன. யானேக் கொம்பால் பல் விளக்கி, விலா எலும்பால் நாக்கு வழித்து, அம்பு களால் நகம் வெட்டி, மூளேயைத் தேய்த்து, இரத்த மடுவில் நீராடி, கொழுப்பாடை அணிந்து வருவது, பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தபோதிலும் நகைச் சுவை மிகுந்ததாகும்.

கி. பி. பதினைன்காம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கவி காளமேகத்தை அனேவரு மறிவர். ‘நாங்கள் கவிராசர்கள்’ என்பதாகச் செருக்குடன் வந்த புலவர்களே நோக்கி, ‘கவி’ யென்பதற்கு ‘மந்தி’ என்னும் சிலேடைப் பொருளேக் கொண்டு,

“ வாலெங்கே? நீண்டெழுந்த வல்லுகி ரெங்கே? நாலு
காலெங்கே ? ஊன்வடிந்த கண்ணெங்கே?– சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால் ”

என்று கேட்டு அவர்களின் துடுக்கடக்கினுர் அவர். காளமேகத்தின் பாட்டுகள் பல, நகைச் சுவைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. முருகன், குறமகளாகிய வள்ளியை மணஞ்செய்து கொண்ட தாலேற்பட்டத் தொல்லேகளேக் கூறுகிருர், காளமேகம். சிவபெருமான் நஞ்சுண்டான்; உமையம் மை தவஞ்செய்தாள்; திருமால் மண் தின்ருன்; பிரம்மன்

நான்முகனுனன்; வானவர்கள் கண்ணிமைக்காமல் விழித்திருக்கின்றனர். இது அவர் கற்பனை. காஞ்சிபுரத்து வரதராசப் பெருமானின் கருடோற்சவத்தைக் கண்டார் காளமேகம். கற்பனை யுதித்தது.

“ பெருமாளும் நல்ல பெருமாள்; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்—பெருமாள்
இருந்த இடத்தில் சும்மா இராமையினுல் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதைப் பார்! ”

காளமேகம் பாடிய விகடராமன் குதிரை மிகப் பிரசித்தி பெற்றது. முன்னிருந்து மூன்று பேர் கடிவாளத்தைப் பிடித்திழுக்க, பின்னிருந்து இரண்டு பேர் தள்ள, மாதமொன்றுக்குக் காதவழி செல்வது அக்குதிரைக்கே தனிப்பெருமை. காளமேகத்திற்கு முன்னர் வாழ்ந்த கம்பன், ‘நாராயணன்’ என்னும் சொல்லை, ‘நராயணன்’ என்பதாகக் கையாண்டு விட்டான். இவ்வாறு நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக மாற்றியதைக் குத்திக் கூறுகின்றார் காளமேகம். ‘ கம்பன் நராயணனென்றதால், நானும் ‘வார்’ என்பதற்கு ‘வர்’ என்றும், ‘வாள்’ என்பதற்கு ‘வள்’ என்றும், ‘நார்’ என்பதற்கு ‘ நர் ’ என்றும் சொல்வேன் எனப் பாடுகின்றார்.

தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி யடைந்துள்ள இன்று, நகைச்சுவை மிகவும் போற்றி வளர்க்கப் படுகிறது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் நாடகமாகிய, ‘மனோன்மணீயத்தின்’ உரையாடல்கள் இத் துறையில் நயஞ் செறிந்து விளங்குகின்றன. திக்குவாயனொருவன் நள்ளிரவு நேரத்தில் ஏதோ பேசுவதற்குத் தொடங்கி “ கொக் கொக் கொக் ” என்

கிருன். உடனே பக்கத்தில் நிற்பவன் “ கூவலே விடியு முன் ” என்று கூறுந் திறன் மூன்று சொற்களில் அமைந்துள்ள ஆழ்ந்த நகைச் சுவையை அழகாகக் காட்டுகிறது.

இக்காலக் கவிஞர்கள், தாங்கள் கையாளு கின்ற கற்பனைகளிலும் உவமைகளிலும் நகைச் சுவையை அழகுற அமைத்துக் காட்டுகிருர்கள். கவிஞர் பாரதிதாசன் ஒரு மயிலேப்பார்க்கிருர். அழகுப் பொருட்களைக் காணும் போது கவிஞர்கள் ஆரணங்கு களை நினைப்பது இயல்புதானே! ஆனல் மாதர்களின் கழுத்துபோல் மயில்களின் கழுத்து குட்டையானதல்ல. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. பெண்களுக்குக் கழுத்து நீண்டிருந்தால் அண்டை வீட்டு அறையிலே நடப்பதை ஆர்வத்தோடு பார்ப்பார்களாம். மயில் அப்படிப் பார்க்காதாம்.

“அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை யன்னை இப்பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்; உனக்கோ
கறையொன் றில்லா கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள் ”

இன்னேரிடத்திலே கவிஞர் ஓர் குரங்கைப் பார்க்கிருர். ஆல மரத்திலிருந்து தொங்கிய ஒரு பாம்பை விழு தென நினைத்துப் பற்றியது மந்தி ; பாம்பென உணர்ந்ததும் விளக்கைத் தொட்ட குழந்தையைப் போல வெடுக்கெனக் குதித்தது. மருண்டவன் கண் ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றுவது போலப் பின்னர் விழுதுகளும் வேர்களுமெல்லாம் அக்

குரங்குக்குப் பாம்பாகப் படுகின்றன. அதனால் தலை கால் தெரியாமல் தாவிச் சென்ற மந்தி, மர உச்சியிலே சென்று மன அமைதி பெற எண்ணியது. ஆனால் திரும்பிப் பார்த்தது ; தனது வாலைக் கண்டது. அதுவும் பாம்போவென நினைத்துத் திடுக்கிட்டது. ஐயோ! பாவம் !

நாஞ்சில் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் “மருமக்கள் வழி மான்மியம்” தமிழ் இலக்கியத்தில் அண்மையில் எழுந்த ஒரு நகைச் சுவைக் களஞ்சியம். பஞ்சகல்யாணிப் பிள்ளை ஐந்து மனைவியர்களை மணந்து வாழ்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழில்

“தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி;
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி;
அடுக்களை சமையல் ஆக்க ஒருத்தி;
அண்டையில் அகலா திருக்க ஒருத்தி.”

இத்தனை பேர்க்கும் அடிமையாய் இன்னொருத்தி ஐவருள் ஒருத்தியை அண்மையிலே அமர்த்தியிருப்பதற்குத் தகுந்தக் காரணமும் கூறுகிறார். அவள் பொன்னொளிர் மேனியளாய் இருப்பதனால் பஞ்சகல்யாணிப் பிள்ளைக்கு ஒரு அச்சம்! தட்டான் தங்கமென்று நினைத்து அவளைத் தராசில் வைத்து எடைபோட்டு விடுவானோ என்பதுதான் அச்சத்திற்குக் காரணம்.

“தங்கப் பெண்ணே தாராவே
தட்டான் கண்டால் பொன்னென்பான்
தராசில் வைத்து நிறு என்பான்;
எங்கும் போகாமல் இங்கு இரு”

என்று கட்டளேயிடுகிருர். இக் கதையினுள் மருமகனுக வருகின்றவன், பள்ளியில் பயில்கின்ற முறை, நகைப் பூட்டுகின்றது. படிக்கச் சென்றவன் எல்லாம் பணயம் வைக்கிருன்.

ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்,
போளிக் காகப் புத்தகம் பணயம் ;
சீடைக் காக சிலேட்டுப் பணயம்,
முறுக்குக் காக மோதிரம் பணயம்,
காப்பிக் காக கடுக்கன் பணயம்,
கூத்துக் காகக் குடையும் பணயம் ''

இப்படிப் படித்து எங்கே முன்னேற்ற மடையப் போகிருன் ?

இவ்வாருக பழங்காலத்திலிருந்து இன்றைய மறுமலர்ச்சிக் காலம் வரையிலே, தமிழ் மக்கள் தங்கள் வாழ்விலும் இலக்கியத்திலும் இச் சுவையைப் புகுத்தி வறண்ட வாழ்க்கையில் வனப்பைக் கண்டனர். அதைக் கண்டறிந்து நாமும் சிரித்து வாழ்வோம் ; சிந்தை மகிழ்வோம். சிரிக்கத் தெரிந்தோர் வாழத் தெரிந்தோர்.

9. வெளிநாட்டிலக்கியங்களில் இந்தியப் பண்பாடு.

மனிதகுல வரலாறு மாண்பேறும் பல நாகரிகங்களால் வனப்பும் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது. பாபிலோனிய, மெசப்பொட்டோமிய, சுமேரிய, எகிப்திய, கிரேக்க, உரோம நாகரிகங்களெனப் பலவற்றை உலகவரலாறு ஒன்றன்பின் ஒன்ருக வரிசைப்படுத்திக் காட்டுகின்றது. வாழ்ந்து வீழ்ந்த இந்நாடுகளின் வரிசையிலே, பாரத நாடு பெற்றுள்ள பழம் பெருமையும், இன்று விடுதலைபெற்று வீறுடன் எழுகின்ற காட்சியும், உலகமக்களின் கருத்தைக் கவர்வனவாக அமைந்துள்ளன.

வடதிசைக்கண் வான்ரேய் இமயம்; தென்திசைக்கண் கன்னிக்குமரி; இருபுறமும் கவரிவீசும் கடல்கள்; வற்ருத பேராறுகள்; வளங் கொழிக்கும் மாமலைகள்; இனியபொழில்கள்; நெடிய வயல்கள்; குறைபோக்கும் கனி கிழங்குகள்; நிறைவளிக்கும் கன்னலும் செந்நெல்லும்; இத்தகைய வளங்களால் உறுபசியும் ஓவாப் பிணியும் சேராது சிறந்தோங்கிய பாரதப் பெருநாடு, பெருமைக்குரிய பண்பாடொன்றைக் கண்ணெனக் காத்து, கனிவுடன் வளர்த்துள்ளது. வன்மையான நிலத்தை, நீர் பாய்ச்சி மென்மையாக்கிப் பண்படுத்தி விதை விதைத்தால் வளப்பமான பயிர்கள் தோன்றுவதைப் போல, மக்களினத்தாரிடையேயும் பண்பாடு தோன்றுகிறது. விலங்கியல்பை வீசி யெறிகின்ற மனிதகுலம், நல்லொழுக்க நீர் பாய்ச்சி மனநிலத்தைப் பண்படுத்தும் போது, நாகரிகம் முகிழ்க்கின்றது. பல்

லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து பாரத நாட்டிலே தோன்றி வளர்ந்த பெருமக்களால் பண்படுத்தப் பட்டுப் பின்னவர்களின் உதிரங்களிலே ஊறிச்சுரந்து ஊற்றெடுத்து நிற்பதைத்தான், பாரதப் பண்பாடெனப் பகர்கின்றோம். உள் நாட்டிலே இப்பண்பாடு விளைத்த வியத்தகு நிகழ்ச்சிகள்பல. மதத்தாலும், இனத்தாலும், நிறத்தாலும், மொழியாலும் வேற்றுமை மிகுந்த மக்களை யெல்லாம் இப்பண்பாடு பிணைத் தெடுத்தது. நாட்டின் வளத்தால் கவரப்பட்டு நாநீரூற இந்நாட்டை அடிமை கொள்வதற்காக அடியெடுத்து வைத்த ஆரியர்களையும், சாகர்களையும், ஊணர்களையும், மங்கோலியர்களையும் அன்புறத் தழுவியணைத்து இந்நாட்டின் இனிய புதல் வர்களாகப் புகழூட்டிய பெருமை இப்பண்பாடு விளைத்த பயனேதான்.

இவ்வாறு வளர்ந்த இப்பண்பாடு உள் நாட்டில் மட்டுமின்றி இந்நாட்டுடன் தொடர்பு கொண்ட வெளி நாடுகளிலெல்லாம், அரிய நினைவுச் சின்னங்களை அமைத்துள்ளது. பண்டை நாள்தொட்டே வணிகத்திற் காகப் பாரதநாட்டை அணுகிச் சென்றமக்கள் பற்பலர். மிகப் பழங்காலத்தில் கிரேக்கர்களும் உரோமர்களும் எகிப்தியர்களும் அராபியர்களும் சீனர்களும் வணிகர் களாக வந்து சென்றனர். பிற்காலத்தில் போர்த்து கீசியர், ஒல்லாந்தியர், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர் கள் ஆகியோர் வணிகர்களாக வந்து ஆட்சியைக் கைப் பற்றினர். இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள்,பல்லா யிரம் ஆண்டுகட்கு முன்னரே, மேற்றிசையில் எகிப்து, பாபிலோன், சால்டியா முதலிய நாடுகளுக்கும் கீழ்த் திசையில் பர்மா, மலாயா, சாவகம், சுமத்ரா, சீயம் போன்ற நாடுகளுக்கும் வணிகர்களாகச் சென்று வந் தனர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சாலமன் தீர்க்கதரிசியின் காலத்தில் இந்தியத் துறைமுகங்களிலிருந்து தந்தமும், தங்கமும், மந்திகளும், மயிற்றோகைகளும் மெசப்பொட்டோமியாவிற்கு ஏற்றுமதி செய்யப் பட்ட செய்தியை விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் காண்கின்றோம். மேலைக் கடற் கரையிலிருந்து சென்ற தேக்கும், மிளகும், கீழைக் கடற்கரையின் முத்தும், பவழமும் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் பாபிலோன் நகரத்தில் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப் பட்டன. மலையாள நாட்டுத் தேக்கு மரங்கள் எகிப்தின் பட்டைக் கோபுரங்களுக்குப் (Pyramids) பயன்பட்டன. அகஸ்டஸ் உரோமப் பேரரசை ஆண்ட காலத்தில், உரோமா புரிச் செல்வியர்கள், உறையூர்ச் சேணியர்களின் கைத்திறஞ் செறிந்த பாம்புரிபோன்ற மெல்லாடைகளையும், தமிழ்க் கம்மியர்களின் வினைத்திறம் நிறைந்த அணிகளையும், பாண்டி நாட்டு முத்துக்களையும் பெறுவதற்காக அளவில்லாத பொன்னைவாரி வழங்கினர். ஆரணங்குகளின் ஆர்வத்தைக் கண்டு அஞ்சிய அரசியலார், நாட்டுப் பொருள் நிலையைக் காத்தற்குச் சட்டமியற்றினர். மலையாள நாட்டு விரைப் பொருட்களும், மிளகும், நீலமும் சோழநாட்டுக் கண்ணுடிப் பொருட்களும் சீன நாட்டுக்குச் சென்றன. உள் நாட்டிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் வந்து காவிரிப்பூம் பட்டினத்தின் கடைத் தெருக்களிலே குவிந்து கிடந்த பொருட்களைக் கடியாலூர் உருத்திரங் கண்ணனர் பட்டினப் பாலையில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

“ நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணக் கடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

என்பது புலவர் வாக்கு.

இவ்வாறு இந்திய நாட்டிலிருந்து வெளிச் சென்றவர்களும், வெளி நாடுகளிலிருந்து இங்கு வந்தவர்களும், பாரதப் பண்பாட்டின் தூதர்களாக விளங்கியவரெனக் கூறுதல் பொருந்தும். இத்தகைய கூட்டுறவால் அனைத்துலகும் பாரதப் பண்பாட்டைக் குறித்து ஓரளவு அறிந்திருந்தது. ஸுலைமான், அபூசையிது, இப்னுகுர்த்தபா, அல்மசூதி, அல்பெருனி, ரஷீதுத்தீன், அப்துல்வாஸப் போன்ற அராபிய வணிகர்களின் நூல்களும் தங்–குவோ–சி–பு–, பிங்–சௌ–கோ–மன், சுங்சி, செ–கோ–பெய், தாவோ–யி–சிலியோ போன்ற நூல்களும், முறையே அரப் நாட்டிலும் சீனநாட்டிலும் பாரதப் பண்பாட்டின் நறுமணம் பரவுவதற்குக் காரணங்களாக அமைந்தன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாரதநாடு வந்து சென்ற இத்தாலி நாட்டு மார்க்கப் போலோ, முகம்மத் துக்லக்கின் ஆட்சியின் போது வந்த இப்னுபதூதா ஆகியோரின் பயண நூல்களும் இந்தியாவைக் குறித்து வெளிநாட்டார் அறிவதற்குப் பெரிதும் துணை புரிந்தன. இவை மட்டுமன்றி, பிற்காலத்தில், தென்னாப்பிரிக்கா, கிழக்காப்பிரிக்கா, மாரிசியஸ், இலங்கை, பர்மா, மலாயா, இந்தோ

னேஷியா, இந்தோசீனு, சீயம், பிஜி போன்ற இடங்களில் இந்தியர்கள் குடியேறத் தொடங்கியதும் அதற்கு நல்லதொரு வாய்ப்பாயிற்று.

சீயம் நாட்டிலே பாரத மக்கள் மிகப் பழங்காலத்திலேயே குடியேறினர். சமஸ்கிருதம் அங்கு ஒரு காலத்தில் அவைக்கள மொழியாக இருந்ததெனக் கூறப்படுகிறது. ஹூனன் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்த இந்தோ சீனு, கி. பி. நான்காம் நூற்றுண்டில் இந்தியாவின் வழியாகப் புத்துணர்ச்சி பெற்றது. ஒரு போது அங்கு அரசு செலுத்திய மன்னனொருவன் அரசு துறந்து இந்தியா வந்தடைந்தான். எட்டாம் நூற்றுண்டில் அந் நாட்டை ஆண்ட பாண்டுரங்கப் பரம்பரையினர் இந்திய ஆட்சி முறையையே மேற்கொண்டிருந்தனர். மலாயா நாட்டிலோ, தமிழர்கள் பழங்காலத்திலிருந்தே குடியேறத் தொடங்கினர். மலாயா என்ற சொல்லே மலயம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாக அமைந்திருக்க வேண்டுமென அறிஞர் கருதுவர். அதுபோன்றே இலங்கையைக் குறிக்கும் சிங்களம் என்ற சொல் 'சீ', 'ஈழம்' என்னும் வடமொழி தமிழ்ச் சொற்களின் திரிபாக அமைந்திருக்க வழியுண்டு. இந்நாடுகளின் மொழிகளிலும் இலக்கியங்களிலும் இந்தியப் பண்பாட்டின் சின்னங்கள் மிகுதியாகக் காணப்பட்ட போதிலும், இந்தியாவுடன் முற்காலத்தில் வணிகம் செய்தோர்களுள் தலை சிறந்தோர்களாகிய அராபியர், பிற்காலத்தில் வணிகம் செய்தோர்களுள் தலை சிறந்தோராகிய ஆங்கிலேயர் ஆகியோரின் மொழியிலும் எண்ணங்களிலும் இலக்கியங்களிலும் பாரதப் பண்பாடு எவ்வாறு வெளிப்படுகிறதென சுருங்கக் காண்போம்.

மிகப் பழங் காலத்தில் மேலைக் கடற்கரையில் அமைந்திருந்த சால், கல்யான், சுபரா. (Chaul, Kalyan, Supara) என்னுமிடங்களில், அராபியக் குடியேற்றங்கள் அமைந்திருந்ததாக, பஜ்லுல்லா லுத்புல்லா பரீதி என்பார் பகர்கின்றார். மலையாளக் கரையில் அராபியர்களின் குடியேற்றங்களிருந்ததைப் பிளினி (Pliny) என்பாரும் குறிப்பிட்டுள்ளார். இந்தியா என்னும் பெயரே அராபியர்களின் மனங்களுக்கு ஒருவகை மகிழ்ச்சியை ஊட்டியது. ஆழ்ந்த அறிவுடைமையையும் உயர்ந்த பண்பாட்டையும் குறிக்கும் ஒரு சொல்லாக அவர்கள் காதுக்கு அது இன்பத் தேன் பாய்ச்சியது. ஆகவேதான் அந்நாட்டு ஆரணங்குகளுக்கு 'ஹிந்தா' என்னும், பெயர் சூட்டினர். 'ஹிந்த் பிந்த் அல்ஹாரிதில் கிந்தி' என்பது போன்று எத்தனையோ பெயர்களை அரப் நாட்டு வரலாற்றிலே பார்க்கின்றோம். மாதர்கள் மட்டும் அப் பெயரைச் சூட்டிக்கொள்வதைப் பொருத ஆண்கள், அப் பெயருக்காகப் போட்டியிட்டனர். பெருமானார் முகம்மது நபியவர்களின் தோழரொருவர், ஹிந்த் அபீஹாரித் அத்தமீமி என்னும் பெயரைத் தாங்கியிருந்தார்.

அதுமட்டுமன்றி, ஹிந்த் என்ற சொல் கூர்மையைக் குறிப்பதாகக் கொண்டு, கூர்மையான வாளை 'அல்ஹிந்தி' என வழங்கினர். விரைப் பொருளாகப் பயன்படுத்தும் ஒரு செடிக்கு 'ஹிந்த்' எனப் பெயர் சூட்டினர். இந்திய நாட்டில் அராபியர்கள் கண்ட புளியம்பழம் அவர்களுக்கு வியப்பை யூட்டியது. அவர்கள் நாட்டு பேரீச்சம்பழம் போல அது காட்சியளித்ததால் அதை, தமருல் ஹிந்த் (இந்திய நாட்டுப் பேரீச்

சம் பழம்) என வழங்கினர். அதுவே பின்னர் ஆங் கிலத்தில் 'டாமரின்' (tamarind) எனத் திரிந்தது.

நபிகள் நாதர் அவர்கள் வருகைக்குப் பின்னுல், இரு நாடுகளுக்கு மிடையே யுள்ள கூட்டுறவு மிகவும் வலிவடையத் தொடங்கியது. கலீபாக்களின் ஆட்சிக் காலத்தில் இலக்கியம், மருத்துவம், கணிதம், வான நூல், தத்துவ ஞானம், ஒழுக்கமுறை முதலிய துறை களிலெல்லாம் இந்தியச் சின்னங்களைப் பார்க்கிறேம். அராபிய எண்கள் (Arabic Numerals) என்னும் பெயருடன் இன்றைய உலகத்தார் கையாளும் எண் கள், முதன் முதலில் இந்தியாவிலிருந்து அரப் நாட் டிற்குச் சென்றன. அப்பாஸிய கலீபாவாகிய அல்மன் சூர் அவர்களின் அவைக்களத்திற்குச் சிந்திலிருந்து சென்ற அல்ஹிந்தி என்பார் எழுதிய வானநூல் ஆராய்ச்சி அரபியில் மொழி பெயர்க்கப்பட்டுப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பாரசீகமொழியில் மொழிபெயர்க் கப்பட்டிருந்த பஞ்சதந்திரக் கதைகளை,அப்துல் லாபின் முகப்பா என்பார் அரபியில் ஆக்கினர். அம் மொழி பெயர்ப்பு இன்று உலகப் புகழ்பெற்றுள்ளது. அப்பா ஸீயர்களின் புகழ்பெற்ற கவிஞராகிய அல்லஹிசி என்பார் பஞ்ச தந்திரக் கதைகளைப் பதினன்காயிரம் பாக்களிலமைத்துப் பாடினர். அத்துடன் இஸ்லா மியக் கொள்கைகள் பலவற்றை விளக்கிச் செய்யு ளமைத்திருக்கிறர். அவர்தம் செய்யுட்களை ஆராய்ந் தோர், அவர் இந்திய யாப்பு முறைகளை அடியொற் றியே அவ்வாறு செய்திருக்க வேண்டுமெனக் கருது கின்றனர். கலீபா ஹாரூன் அல்ரஷீத் அவர்களுக்கு இந்திய மருத்துவ முறையில் உறுதியான நம்பிக்கை யிருந்ததால், இந்தியாவிலிருந்து பல மருத்துவர்களை

யும் தத்துவ ஞானிகளையும் தமது அவைக்களத்திற்கு அழைத்தார். அவர்களுள் அரசரின் பேரன்பிற்குரிய பெரு மருத்துவர் ஒருவர் இருந்தார். அரபி மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறித்து இப்னு நாதிம் என்பார் விளக்[illegible]மாக [illegible]ரைந்துள்ளார். இந்திய நாட்டு இலக்கியச் [illegible]களையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அரபியர்களுக்குப் படம் பிடித்துக் காட்டிய பெருமையில் பெரும் பகுதி அல்பெரூனி என்பாருக்கே உரியது. அவர் இந்தியாவிற்கு வந்து இந்திய மொழிகளைக் கற்று, இந்தியர்களுடனே வாழ்ந்து பல நுண்ணிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார். இத்தகைய கூட்டுறவால் அரபி அகராதியிலேயே பல இந்தியச் சொற்கள் இடம் பெற்றன. சந்தனம், ஸந்தல் (Sandal) எனப்பட்டது. கர்ப்பூரம், காபூர் (Kafur) எனப்பட்டது. கிராம்பு, கரன்பூல் (Karanful)என்றும்,தாம்பூலம், தன்பல் (Tanbul) என்றும், இஞ்சி, ஜன்ஜபீல் (Zanjabil) என்றும், தேங்காய், (நாளிகேரம்) நார்ஜீல் (Narjil) என்றும், குறிக்கப்பட்டதுடன் மஸ்க், பில்பீல், ஷாஸ், (musk, filfil, shas) போன்ற பல சொற்கள் அரபி அகராதியில் இடம் பெற்று இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டன. வைகறையைக் குறிக்கும் (ஸுபஹ்) என்ற அரபிச் சொல் கூட இந்தியாவிலிருந்து சென்றிருக்கலாமென எகிப்திய அறிஞர் ஸையிதான் (Zaydan) என்பார் கருதுகின்றார்.

இது போன்றே, பிற்காலத்தில் இந்தியாவுடன் தொடர்பு கொண்ட ஆங்கிலேயர்களின் மொழியிலும் இலக்கியத்திலும் இந்தியச் சின்னங்களைப் பார்க்கின்

றேம். பதினாறும் நூற்றாண்டிற்குப் பின்பு ஆங்கிலத்தில் இடம். பெற்ற இந்தியச் சொற்கள் ஒன்றிரண்டல்ல. உணவுக்கு ஆதாரமாக அமைந்த ரைஸ் (Rice) என்ற சொல்லே இங்கிருந்து சென்றதுதான். தமிழ் அரிசி கிரேக்கர்களின் ஒருஸா (oruza) ஆகி, இத்தாலியர் களின் ரிஸோ (Riso) ஆகி, பிரஞ்சில் ரிஸ் (Ris) ஆகி இறுதியில் ஆங்கில ரைஸ் (Rice) ஆக உருப் பெற்றதோ? உருமாறியதோ? பழந்தமிழ் அடைக்காய் அரக்கனட் (Arecanut) ஆயிற்று. வெற்றிலை, பீட்டல் (Betal) ஆயிற்று. பலாப் பழத்தைக் குறிக்கும் மலை யாளச் சொல்லாகிய சக்கை, ஜாக் (jack) ஆயிற்று. பெருச்சாளியைக் குறிக்கும் தெலுங்குச் சொல்லாகிய பந்திக் கொக்க, பண்டிக்கூட் (Pandicoot) ஆயிற்று. மூங்கிலைக் குறிக்கும் கன்னடச் சொல்லாகிய பம்பு, 'பேம்பு' (Bamboo) ஆயிற்று. இன்னும், சுண்ணம் (Chunam), கொப்ரா(Copra), கறி (Curry), மேங்கோ (Mango), பேண்டி (Bandy) பந்தால் (Pandal), கூலி (Cooli), கேஷ் (Cash), டீக் (Teak), கட்டமரான் (Catamaran), முளகுடன்னி (Mulagutauni) என்பன போன்ற நூற்றுக் கணக்கான சொற்களைப் பார்க்கின்றோம்.

இவ்வாறு இந்தியச் சொற்களைக் கையாள்வதோடு மட்டுமின்றி, இந்திய அறிஞர்களின் கருத்துக்களை யும் ஆங்கில ஆசிரியர்கள் இலக்கியங்களிலே கையா ளக் காண்கிறோம். இரபேபின் இஸ்ரோ (Rabebin-Isro) என்னும் தலைப்பினைத் தாங்கியுள்ள கவிதை யில் கவிஞர் பிரௌனிங், இறைவனின் படைப்புத் தொழிலைக் குயவனுக்கும், மண்பாண்டத்திற்கும் ஒப் பிடுதல் பாரதச் சிந்தனையின் எதிரொலியே யென்

பதில் தவறென்றுமில்லை. இறைவனைக் குயவனுக்கும் உயிர்களைப் பாண்டங்களுக்கும் ஒப்பிடும் இயல்பை இந்நாட்டு மொழிகளனைத்திலும் பார்க்கின்றோம். அடுத்தபடியாக, சர் எட்வின் ஆர்னல்ட் (Sir Edwin Arnold) என்பார் புத்தர் பெருமானின் வரலாற்றை ஆசியச் சுடர், (Light of Asia) என்னும் நூலிலும், ஜயதேவர் எழுதிய கீத கோவிந்தத்தை 'பாட்டுகளின் பாட்டு' (Song of Songs) என்னும் நூலிலும் ஆக்கியமைத்துள்ளார். எலியட் (T. S. Eliot) என்பாரோ, விஷ்ணு புராணத்தின் மேற்கோள்கள் பலவற்றைத் தமது (Waste land) என்னும் நூலில் பயன்படுத்தி "ஓம் தத் ஸத்! சாந்தி சாந்தி சாந்தி!" என்னும் சொற்களோடு அதனை முடிப்பது குறிப்பிடத்தக்கது. சோமர்செட் மோஹம் (Somerset Mougham) என்பார், The Razors Edge என்னும் தமது நூலில் இந்தியத் தத்துவ ஞானத்தை மேனாட்டாருக்குப் புகட்ட முற்படுகின்ற நிலையைப் பார்க்கின்றோம். தமிழ் நெஞ்சமாகிய திருக்குறள் ஆங்கிலத்திலும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ்ப் பண்பாடாகிய இந்தியப் பண்பாட்டை வையகமெல்லாம் வாரி இறைக்கக் காண்கிறோம்.

10. நாட்டுப் பாடல்களில் வரலாறு

"கீச்சுக்கீச்சு தம்பலம் கீயாகீயா தம்பலம்
மாச்சுமாச்சு தம்பலம் மாயாமாயா தம்பலம்"

என்றுசொல்லி மணல் தரையிலே மகிழ்ந்தாடும் குழந்தைகளிலிருந்து முதியவர்கள் ஈருகப் பாடிப் பரவசமடையும் நாட்டுப் பாடல்கள் பலதிறப்பட்டவை; பல் சுவை பயப்பவை. இயற்கையின் இன்பக்காட்சிகளேயும் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளேயும் பருகியதன் பயனுக உள்ளத்தூறுகின்ற கருத்துகளேச் செஞ்சொல்லோவியங்களாக வடித்தெடுக்கின்றனர், செந்நாப்புலவர்கள். அவர்கள் அவ்வாறளிக்கின்ற அருஞ்செல்வங்களேத் துய்த்துக் களிக்கும் ஆற்றலே எல்லோரும் எளிதிலே பெற்றுவிட வியலாது. மொழிப் பயிற்சியும், அழகுணர்ச்சியும் ஒழுங்கே கைவரப்பெற்ற மக்கள் தாம் உயர்ந்த நிலேயிலுள்ள இலக்கியங்களே உய்த்துணர்ந்து பாராட்ட முடியும். ஆனுல் அழகுணர்ச்சியென்பது கற்றறிந்த கவிஞர்களுக்கு மட்டுமுரிய தனி உடைமையல்ல. படித்தறியாத பாமர மக்களுக்கும் கண்ணும் காதுமுண்டு; உள்ளமும் வாயுமுண்டு. ஆகவே அவர்களும் தாங்கள் கண்ணுரக் கண்ட காட்சிகளேயும், காதாரக் கேட்ட செய்திகளேயும், மனமாரத் துய்த்து வாயாரப் பாடி வந்திருக்கிருர்கள். அவர்களுக்குத் தெரிந்த சொற்களேக் கையாண்டு, அவர்களுக்குரிய முறையிலே இன்பத்தையும் துன்பத்தையும் வெளியிட்டு வந்திருக்கிருர்கள்.

பரந்த கடலிலே படகு விடுவதற்கும், வயலுக்கு நீர்பாய்ச்சி வளங் காண்பதற்கும், கும்மியடிப்பதற்கும், குரவையாடுவதற்கும், குழந்தைகளேத் தாலாட்டுவதற்

கும், அக்குழந்தைகள் சாய்ந்தாடுவதற்கும் சப்பாணி கொட்டுவதற்கும், காதல் கனிய உரையாடுவதற்கும், சாதலின் போது ஒப்பாரி வைப்பதற்கும், மண்டைக் கனமிறங்கக் கிண்டல் செய்வதற்கும், மக்கள் பயன் படுத்திய பாடல்கள் நாடெங்கும் பரந்து கிடக்கின்றன. பெரும் பாலும், பாடியோர் பெயர் தெரியாமல், ஏட் டிலே தீட்டப் பெருது எழுதாக் கிளவிகளாக, நாட்டு மக்களின் உள்ளங்களிலே உறைந்துள்ள இத்த கையப் பாடல்களைத்தான் நாட்டுப் பாடல்கள் என்றும் நாடோடிப் பாடல்கள் என்றும் வழங்கி வருகிருேம்.

இவற்றுள் சரித்திரக் கதைகளைக் கூறும் நாட்டுப் பாடல்கள் ஒரு தனி இனமாக அமைந்துள்ளன. மனப் பாடம் செய்துகொள்ள முடியாத அளவுக்கு நீண் டிருக்கின்ற காரணத்தால் புராணக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும் கூறும் நாட்டுப் பாடல்கள் ஏட் டிலே தீட்டப் பட்டிருக்கின்றன. அல்லியரசாணி மாலை, புலந்திரன் களவுமாலை, காத்தவ ராயன் கதை, நல்ல தங்காள் கதை, பவளக்கொடி முதலியவற்றைப் புராணக் கதைகளைக் கூறும் நாட்டுப் பாடல்களாகக் கருதலாம். சரித்திரக் கதைகளைக் கூறும் நாட்டுப்பாடல் களுள் மிகச் சிலவே இன்று உரியமுறையில் பதிப் பித்து வெளியிடப் பட்டுள்ளன. தேசிங்குராசன் கதை, ராமப்பையன் அம்மானை, இரவிக் குட்டிப் பிள்ளைப் போர், ஆகியவற்றை ஆராய்வது வழியாக நாம் இவ் வகை நாட்டுப் பாடல்களின் இயல்புகளை அறியலாம். செஞ்சி மன்னன் ஜெயசிங்கு, சேதுக் கரை வன்னி, வஞ்சித் தளபதி இரவி, பாஞ்சாலங் குறிச்சியின் வீர பாண்டியக் கட்டபொம்மன் ஆகிய நான்கு மாவீரர் களின் வீழ்ச்சி, முறையே இந்நான்கு பாட்டுக்களிலும்

காட்டப்படுகின்றது. இவை நான்கும் ஆங்கிலேயர்கள் நமது நாட்டில் அடியெடுத்து வைக்கத் தொடங்கியபின் நிகழ்ந்த நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகளாகும். வீரத்தைப் போற்றிய தமிழகம் வீர மரணமடைந்த தீரர்களைப் பாட்டுருவிலே கண்டு பாராட்டுவது பொருத்தந் தானே!

தென்னாற்காடு மாவட்டத்தில அமைந்துள்ள செஞ்சியின் வரலாற்றுச் சின்னங்கள், அரசினரால் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குதான் தேசிங்குராசன் ஆட்சி செலுத்தினான். நாட்டு வளத்தைப் பாட்டே காட்டுகிறது.

“செந்நெல் கதிர் பருத்து செழித்து வளர்கிறதும்,
கன்னல் கொழுத்து காட்டை மறப்பதுவும்,
வன்புலியும் பசுவும் மருவியே வாழ்கிறதும்,
தென்புடனே யானை செழித்துத் திரிகிறதும்,
காடை கவுதாரி காட்டுப்புரு கூவுறதும்,
பேடை மயில்கூடிப் பிரிய மடைகிறதும்,
புன்னை பலாச்சோலை பொருந்தி நிறைந்திடலும்,
சந்தனச் சோலைகளும் சாதிமல்லி பூத்திடலும்,
மந்தாரை கொங்கு மல்லிகைப் பூச் சாலைகளும்,
தாமரைப் பொய்கைகளும் தடாகமுள்ள ஏரிகளும்,
வாமமுறும் கான்யாறும் வாய்ப்புகளுமென்ன
சொல்வோம்”

இத்தகைய வளமார் நாட்டை தரணிசிங்கு ஆண்டு வரும்போது, டில்லி பாதுஷாவுக்குக் கிடைத்த பாரசாரிக் குதிரையை அடக்குவதற்கு அவனுக்கு அழைப்பு வருகிறது. கருவுற்றிருந்த மனைவி ரமாபாயைப் பிரிந்து செல்கிறான் தரணி சிங்கு. குதிரையை

அடக்க முடியாமற்போகவே சிறையில் சிக்கிவிடுகிருன். செஞ்சியில் ரமாபாய் தேசிங்கைக் கருவுயிர்த்து வளர்த்துவருகிருள். இஸ்லாமிய இளவல் மகபத்கான் என்பான் தேசிங்கின் ஆருயிர் நண்பனுக அமைகிருன். தந்தையின் நிலேயைச் செவியுற்ற சிறுவன் தேசிங்கு, நண்பனுடன் டில்லிக்குச் சென்று பரிமாவை யடக்கிப் பரிசுகள் பெற்றுத் தந்தையை மீட்டுத் திரும்புகின்ருன். அதற்குப் பின், ஆற்காட்டு நவாப் சைதுல்லா, இறை பெருத காரணத்தால் தோன்ற மல்லனேத் தூதனுப்பி பாளேயக்காரர்களுடன் படை திரட்டி வருகின்ருன். தேசிங்கு ராசனும் போருக்கு ஆயத்தமாகின்ருன். மன்னன் நிலேயறிந்த மகபத்கான் மணப்பந்தலி லிருந்து ஓடோடி வந்து, நண்பனுக்காக வீரப்போர் புரிந்து மடிகின்ருன். ஆருயிர் நண்பனேயிழந்த தேசிங்கும் எதிர்ப்படைகளேக் கருவறுத்து உயிரிழக் கின்ருன். கணவனின் வீரமரணத்தை யறிந்த வீர பத்தினியும் நெருப்பிலே குதித்து உயிரை மாய்க்கின் ருள். இதுதான் கதைச் சுருக்கம்.

இக்கதை இன்றும் பாமர மக்களின் பாரகாவிய மாகப் பரிணமிக்கின்றது. நாட்டுப்புற மக்களின் தமிழ்ச் செவிக்குப் பொருந்திய முறையிலே பிறமொழிச் சொற்களெல்லாம் மாறிவிடுகின்றன. 'ராஜா ஜெய சிங்,' தேசிங்கு ராசனுகக் காட்சி தருகிருன், 'மகபத் கான்' மோவுத்துக்காரனுக மாறிவிடுகின்ருன். வழக் கிற் புகுந்த பிறமொழிச் சொற்கள் பல, இதனுள் காணக்கிடக்கின்றன, ஜல்தி, பல்டி, கமான், மோர்ஜா, ஜார்பார், சமேதாரு, ஷராப், ருேஷக்காரன், டாறு டாருய், என்பன அவற்றுள் சில. பாமர மக்களின் மனத்

தைக் கவர்வதில் ஆற்றல் மிகுந்த இரட்டைக் கிளவி கள், பல விடங்களில் கையாளப்பட்டுள்ளன.

" திமிதிமி திமிதிமி திமிதிமியென்று
சேனே நடந்திடவே; "
" கனகன கனகன கனகனவென்று
கத்திகள் மின்னுது; "
" தடதட தடதட தடதடவென்று
தமுறு முழங்குது பார்; "

இவை போன்ற தொடர்கள் படிப்போர் உணர்ச்சி களைக் கிளறுவன போல் அமைந்துள்ளன. ஊரறிந்த பல உவமைகளும் தொடர்களும் எதுகை நயங்களும் கருதிய பயனை விளைத்து நிற்கின்றன.

" கொள்ளு குத்தின உலக்கைப்போல முன்னே
நின்ருனும் "
" எள்ளுப் போட்டால் எள்ளு விழாது
நவாபு பாளயத்தில் "
" கதறிப் பதறிச் சிதறியோட கரிகளை வாட்டுகிறேன் "

இன்னுஞ்சில தொடர்கள் பலமுறை பயின்று வருகின்ற காரணத்தால் கதையைக் கேட்டு முடித்த பின்னரும் நமது காதுகளிலே எதிரொலித்து நிற்கின்றன,

" அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான்
ராசா தேசிங்கு "
" அண்ணு வாடா தம்பி வாடா மோவுத்துக்காரா நீ "
" லகானை யிழுத்து சிமிட்டாக் கொடுத்தான்
ராசா தேசிங்கு "

இவற்றை யெல்லாம் எளிதிலே மறந்து விட முடி யாது. ஒரு தொடரிலே கூறிமுடிக்கத் தக்க நிகழ்ச்சி

களைப் பல் தொடர்களால் விளக்குவது வழியாக கேட் போர் உள்ளத்திலே ஒரு ஓவியமே எழக் காண்கிறோம். டில்லியிலே பாரசாரியைக் கண்டு மன்னர்களெல்லாம் அஞ்சினர்களென்பது பல தொடர்களால் விளக்கப் பட்டுள்ளது.

"குதிரை கனைத்த சத்தத்தினலே
தொப்பென்னு விழுந்தார்கள்;
அண்டம் இடித்து விழுந்தாற் போலே
அலறிவிழுந்தார்கள்;
கோடை யிடித்து விழுந்தாற் போலே
குப்புற விழுந்தார்கள்.
முன்னே யிருந்த ராசதுரைகள்
மிரண்டு விழுந்தார்கள்.
பின்னே யிருந்த ராசதுரைகள்
பிரண்டு விழுந்தார்கள்."

கூறவேண்டிய செய்தியை அப்படியே உள்ளதை உள்ளபடிக் கூறிவிடாமல், அதற்கு கையும் காலும் வைத்து அழகுபடுத்தி மிகைப்படக் கூறுவது மக் களியல்பு. அத்தன்மையையும் இக்கதையில் காண லாம். தேசிங்கு பிறந்ததையும் பின்னர் நண்பனுடன் வளர்ந்ததையும் கூறும் பகுதி அதற்கோர் எடுத்துக் காட்டு.

"குழந்தை பிறந்த ஏழாம் மாதம் குலுங்கி
விழுந்தானும்;
தொட்டிலெ விட்டுக் கீழே இறங்கித் துள்ளி
விழுந்தானும்;
தங்கத் தொட்டிலெ எட்டி யுதைத்துத் தரையில்
விழுந்தானும்;

பத்தாம் மாதம் தவழ்ந்து நடந்தான் பருவம்
அறியவேதான் ;"

....

" காடுமலைகள் செடிகளெல்லாம்
கலக்க வடித்தாராம்
புலிகள் கரடி சிங்கத்தைக் கண்டால்
புகுந்து வெட்டுவாராம்
சங்கரா பரணிக்கரையிலெ வந்து
தாண்டிக் குதிப்பாராம்
குதிரையெ விட்டுக் கீழேயிறங்கி
குஸ்திகள் செய்வாராம்
மண்டிகள் போட்டு மலைகளைத்தூக்கி
வாரியடிப்பாராம்
மலைகளையோங்கி குத்தினாரானால் மருந்து
புகை கௌவ்வும்
செடிகளை யோங்கிக் குத்தினாரானால்
சிதைந்து முறிந்துபோகும். "

இவ்வாறு இக்கதையினுள் வீரச்சுவையே விஞ்சி நிற்கிறதென்னலாம். டில்லி சென்று பாரசாரியை யடக்குவதில் தேசிங்கின்வீரம் உச்சநிலை யடைகிறது. பூசை முகத்திருந்த தன்னையணுகி, நவாபுக்கு அடிபணியக் கூறும் சிற்றப்ப ராசனை நோக்கி, தேசிங்கு ஆத்திரங் கொள்கிறான்.

" என்ன பேச்சு பேசினீரையா சிற்றப்ப ராசாவே !
அறுபது வயது சென்றது உமக்கு அறிவு
கொஞ்சமில்லை. "

இவ்வாறு பேசிய அவனது வீரத்தின் எழுச்சி அவனது அருமைக்கடவுள் அரங்கநாதரைக்கூட விட்டு வைக்க வில்லை. வீரர்கள் முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டார்களல்லவா ? ஆகவே அரங்கநாதரிடம் விடை பெறச்சென்ற தேசிங்கு, கண்ட மாலை கருகுதல், கண்ணீர் கசிதல், திருவிளக்கவிதல் போன்ற தீச் சகுனங்களைக் கண்டு ஆத்திரமடைந்து பேசுகின்றான்:

“உனக்கென்ன கேடு வந்தது சாமிரங்க நாதரே
நானல்ல பயப்பட வேண்டும் ரங்க நாதரே
நீர் சொன்னால் பயப்படுவேனோ ரங்க நாதரே
நீ சாகவுமாட்டாய் பிறக்கவுமாட்டாய் ரங்க நாதரே
ஒரே ஜனனம் எடுத்தீரையா ரங்கநாதரே.”

தேசிங்குராசன் கதையின் உயிர்நிலை, ‘தேசிங்கு மகபத்கான் நட்பு’ என்று குறிப்பிடுவது குற்றமாகாது. வழுதாவூரிலே புதுமணக்கோலத்துடன் வீற்றிருந்த வீரன் மகபத்கான், தாலிகட்டும் தருணத்தில் அன்பருக்கு ஆபத்தென்பதை யறிந்து, பட்டா உருவிக்கை யிற் பிடித்து, தாய் தடுத்தாலும் விடேனென ஓடிவந்து நவாபின் படையைக் கருவறுத்துக் களத்திலே மடிந்ததும், தோழன் இறந்த துயர்தாளாத ஜயசிங்கு,

“என்னுடன் வளர்ந்த தம்பி தானும்
இறந்து போய் விட்டான்
எந்தன் பலமும் பாதி போச்சுது”

என்பதாகக்கூறி வீரப்போர் புரிந்து, வாளில் வீழ்ந்து உயிர் துறந்ததும், நட்பின் உயர்வையும் நாட்டுப் பண்பையும் நன்கெடுத்துக் காட்டுகின்றன. இவ்விரு தோழர்களின் வீர மரணமும், அரசியார் அனலிற்

பாய்ந்து உயிரை மாய்த்ததும், அப்பத்தினிப் பெண்ணின் நினைவுக்காக, நவாப் சைதுல்லா ஆற்காட்டிற் கண்மையிலே இராணிப்பேட்டை யென்னும் நகரம் நிறுவியதும், மக்கள் மனங்களிற் பதிந்து விட்டன. ஆற்காட்டு நவாபுக்கு இறை செலுத்துவோராக இக்கதையினுள் கூறப்படும், சேத்துப்பட்டு தாவுத்துக்காரன், திருவண்ணாமலை சுபங்கிதுரை, கள்ளக்குறிச்சி கான்சாகிப், மதுரைச்சீமை மலையாளத்தான், அரியலூர் பெரியதுரை, திமிரிக்கோட்டை சேக்கு முகம்மது, ஆகியோரின் பெயர்கள் வரலாற்றிற்குத் துணைபுரிவன.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையம்பதியிலிருந்து ஆட்சி செலுத்திய, திருமலைநாயக்கரின் தளபதி இராமப்பையனின் வெற்றியையும், சேதுக்கரை சிங்கம் வன்னியின் வீழ்ச்சியையும் விளக்கிக் காட்டுவது தான் இராமப்பையன் அம்மானை. தளவாய் சேதுபதி என்னும் பெயருடன் சேதுக்கரைப் பகுதிகளை யாண்ட இரண்டாம் சடைக்கத் தேவனை யடக்கிப் பிடிப்பதற்காக மன்னனின் ஆணையினையும், அங்கயற் கண்ணம்மையின் அருளையும், அண்ணன் வயித்திஐயனின் உடன்பாட்டையும் பெற்றுப் படையெடுத்துச் செல்கின்றான் இராமப்பையன்;

“சேதுக்கரை தனிலே சென்றவர்கள்மீண்டதில்லை
வாளுக்கிரையிட்ட மன்னன் வலுக்காறன் ;
துப்பாக்கி மெத்த உண்டாம் தோரா மறவனுக்கு;
தன்னரசு நாடும் தனிக்கோட்டை யாளுவனும்;
மதுரைப் படையென்றால் மதியான் மறவனுந்தான்.”

இவ்விதமாக எச்சரிக்கை செய்து அனுப்புகின்றான், மன்னன் திருமலைநாயக்கன். ‘சடைக்கனைக் கட்டிக்

கொடு வருவேன்' எனச் சூளுரைத்துச் செல்கின்ருன் தளபதி. சின்ன ராவுத்தர் பாளையம், வண்டியூர்க் கோட்டை, திருப்புவனம், மானமதுரை வழியாக மதுரைப் படை வானர வீர மதுரை யடைகின்றது. படையெடுப்பைச் செவி மடுத்த சடைக்கன் கூறும் வஞ்சினம் குறிப்பிடத்தக்கது. இராமப்பையனை,

'கண்ணைப் பிடுங்கிக் காட்டிலே யோட்டாட்டால்
ஏன் பெயர்தான் சடைக்கன் எடுத்ததுவும்
ஆயுதமோ ?
பின்குடுமி தன்னில் பேருலகு தான்றியத்
தேங்காயைக் கட்டிச் சிதற அடியாட்டால்
என்பெயர் சடைக்கன் எடுத்ததுவும் ஆயுதமோ ?"

சடைக்கத்தேவன் மருகன் வன்னியென்பான், வீரவுரை பகர்ந்து, நாடு கலக்கியென்னும் பரிமீதிவர்ந்து, பல ஊர்களைக் கடந்து, பலகோட்டைகளுக்கும் படைகளை வகுத்தனுப்பி, அரியாண்டிபுரக் கோட்டையின் வெளியிலும், போகலூர் கோட்டையின் வெளியிலும் போர் புரிந்து வெற்றி பெற்றுப் படைவீரர்களுக்குப் பரிசளித்துச் சடைக்கனிடம் செல்கின்ருன். பின்னர் பாம்பாற்றங்கரையில் வந்த மதுரைப் படையுடன் போர் செய்த சடைக்கன் காயமுற்று, மருகனுடன் இராமேசுவரத்தீவை அடைகிருன்,

இதற்கிடையே இராமப்பையன் வடபாற் சென்று முகிலரை வென்று திரும்புகின்ருன். பின்னர் போகலூர்க் கோட்டையை முற்றுகையிட்டு, சடைக்கனைச் சார்ந்த அழகனையும் குமாரனையும் மிகக் கொடிய முறையில் கொல்கின்ருன். இதற்கிடையே இராமேசுவரத் தீவையடைவதற்கு அணை கட்டப்படு

கின்றது. அரசர் முதலியோர் கல் சுமக்க அணை கட்டு வதைக் காட்டும் பகுதி நகைச்சுவை பயப்பதாகும். பரங்கியருடன் ஒப்பந்தம் செய்து மூன்று நாள் கடும் போர் நிகழ்கிறது. மூன்று நாட்களும் வன்னியே வெற்றிபெறுகின்றான். திடீரென வன்னிக்கு அம்மை நோய் காண்கிறது. நான்காம் நாள் பாம்பன் துறை வாடியில் நடந்த போரில், நோய் வாய்ப்பட்டிருந்த வன்னி வீரத்துடன் போராற்றித் திரும்பி, மெத்தையில் சாய்ந்திறக்கின்றான். மறைந்த மாவீரனின் வேண்டு கோட்படி இராமப்பையனுக்குத் தூதனுப்பிப் பணிந்து விடுகின்றான் சடைக்கன். வெற்றிச் செருக்கிலே திளைத்த இராமப்பையன், முன்னாள் வஞ்சினத்தை நினைவூட்டி சடைக்கனை எள்ளி நகையாடி, மதுரைக் கழைத்துச் செல்கிறான். மதுரையில் திருமலை நாயக் கருக்கு முன்னர்,

"என் மருகன் வன்னி இருந்தானே யாமாகில்
தேவரீர் பாதம் தெரிசிக்க மாட்டேன்"

என்று கூறிய சடைக்கன், சிறையில் தள்ளப்படு கின்றான். இராமப்பையனுக்குக் 'கனகாபிஷேகம்', செய்யப்படுகின்றது. சிறையிலிருந்த சடைக்கனைப் பிணித்திருந்த விலங்கு ஒரு நாள் தெறித்து விடவே அது மாயனருளால் நிகழ்ந்ததெனக் கருதி நாயக்கர் அவனை விடுவித்துச் சிறப்புகள் செய்து அரசுங் கொடுத்து அனுப்பி வைக்கின்றார்.

இக்கதைத் தலைவனாக அமைந்த இராமப்பையன் வஞ்சி நாடு சென்று இரவிக்குட்டிப் பிள்ளையை வென்ற செய்தி 'இரவிக்குட்டிப் பிள்ளைப்போர்' என் னும் நாட்டு பாடலுள் இடம் பெற்றுள்ளது. தமிழகத்

தின் தென் பகுதியிலிருப்போர் போற்றி வளர்க்கும் வில்லுப்பாட்டுக் கலைக்கு இக்கதை இன்றும் தனி மதிப்பளித்து வருகிறது. சம்சாரித்தல், ஒருங்ஙி, முறவிளி, முஷியாமல், கல்ப்பன, ஸம்மானம், செறுக்கன் போன்ற பல மலையாளச் சொற்கள் இக்கதையில் அமைந்திருப்பது காரணமாகவும், சில இடங்களில் மலையாளச் சொற்றொடர் அமைப்புகள் வருவது காரணமாகவும் மலையாளிகளும் இதற்கு உரிமை பாராட்டுவதுண்டு. இரவி போருக்குச் செல்வதைத் தடுக்கும் அன்னையின் உரை உருக்கமானதாக அமைந்துள்ளது.

'என் மகனே பொன்னுரவி இன்று படை
போக வேண்டாம்
கன்மவினை பொல்லாது கனவுகண்ட
சொப்பனங்கேள்
வாதுக்கல் நீராழி வரம்பிடிந்து விழவுங் கண்டேன்
தாதுற்ற பூங்குழலாள் தலைவிரித்து நின்றிடவும்
மோதித்தலை சாய்த்துமுறவிளி கொண்டிடவும்
சாதித்த வாணுதலாள் தக்ககுரல் ஆலோலம்"

இவ்வாறு அன்னையும் மனைவியும் தடுத்துரைத்தமொழிகளுக்கு மறுமொழி யுரைத்து விட்டு, தீச்சகுனங்களையும் பொருட்படுத்தாது, பருத்தி விளைப்போரில் எதிரிப் படைகளைக் கருவறுத்து உயிர் துறக்கின்றான் இரவி. கொய்து வரப்பட்ட இரவியின் தலையைக் காளி நாயர் கைவழி வஞ்சி மன்னனுக்கு அனுப்புகின்றான் இராமப் பையன். இரவியின் உடல் வஞ்சி மன்னனால் பல்வகைச் சிறப்புகளுடன் மறைவு செய்யப்படுகின்றது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடரி மயிரைப் பிடித்தாட்டி வீர மரணமடைந்த தீரர்களின் வரிசையிலமைந்து, பாண்டி மண்டலத்தின் ஒரு பகுதியாகிய பாஞ்சாலங்குறிச்சியின் ஆட்சிக்கு மாட்சி யூட்டிய கட்டபொம்மன் ஊமைத்துரை ஆகியோரின் விடுதலைப் போர் வரலாற்றை விளக்கமுறக் கூறுவது, கட்டபொம்மன் கதை. நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த பாஞ்சாலங் குறிச்சியும், எட்டயபுரமும் நெடுங்காலம் ஒற்றுமையுடன் வாழ்ந்த இருபாளையங்கள். கி.பி. 1792-ம் ஆண்டு ஆங்கிலேயரின் 'சர்வே செட்டில்மெண்டு' என்னும் நில அளவைத் திட்டத்தின் பெயரால், பாஞ்சாலங் குறிச்சிக்குச் சொந்தமான அருங்குளம், சுப்பலாபுரம் என்னும் இரு ஊர்களும் எட்டயபுரத்தில் சேர்க்கப் பட்டன. இதன் விளைவாக இருபாளையங்களுக்குமிடையே பகை வளர்ந்தது. ஆங்கிலேயரின் முடிவுக் கெதிராகப் பாஞ்சைப் பதியினர் புரட்சி செய்தனர். எட்டப்ப மன்னன் இச்செய்தியை ஆங்கிலேயருக்கு எட்டச்செய்தான். ஆங்கிலக் கம்பெனியார் ஆணைப்படி இராமநாதபுர கலெக்டர் ஜாக்ஸன், ஆங்கிலேயர்களின் பாசறையாக விளங்கிய பாளையங்கோட்டை சென்று பாளையக்காரர்களைக் கூட்டி ஆலோசனை நடத்தினன். பின்னர், இராமநாதபுரத்தில் தன்னை வந்து காண்பதற் காகக் கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினன்.

கட்டபொம்மன், தன் படைகளுடன் புறப்பட்டு, இராமநாதபுரமடைந்து, படைகளை வெளியே விட்டுத் தம்பி ஊமைத்துரையுடனும் அமைச்சர் தானுபதிப் பிள்ளையுடனும் உள்ளே சென்ருன். வரி செலுத்தாமலிருந்ததையும், எட்டயபுரத்தைக் கொள்ளையிட்டதையுங் கூறி ஜாக்ஸன் குற்றஞ்சாட்டவே, கட்டபொம்

மன் அதனை மறுத்து வீர உரையாற்றினன். உடனே மூவரும்கைது செய்யப்பட்டனர். வெளியிலிருந்த வீரன் பாதர்வெள்ளை, செய்தி யறிந்து உள் நுழைந்து கட்டபொம்மனையும் ஊமைத்துரையையும் தந்திரமாக விடுவித்தான். உள்ளே சிக்கிய தானுபதிப் பிள்ளையும் விசாரணைக்குப் பின் விடுதலையானுர். ஜாக்ஸனுக்குப் பின் லூஷிங்டன் கலெக்டரானுன். ஒரு சிறு அமைதி நிலவிற்று. மீண்டும் குற்றச்சாட்டுகள், கலெக்டர் லூஷிங்டனைப் பேட்டி காண மறுத்ததற்கும் பாண்டித் தேவனைக் கொலை செய்ததற்கும் காரணம் வினவி வந்தான், பிரிகேட்துரை. கட்டபொம்மன் விசாரணைக்காகப் பாளையங்கோட்டை செல்ல மறுக்கவே, பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கிக் கட்டபொம்மனைக் கைது செய்ய ஆங்கிலேயர் மேஜர் ஸ்மட்ஸ் என்பான் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினர். உடனேயே சரணடைய வேண்டுமென்றும், மறுத்தால் போர் மூளுமென்றும் வெள்ளையர் கூறினர். கட்டபொம்மனின் தூதுவன் சுந்தரலிங்கம் வெள்ளையர் பாற்சென்று பாஞ்சை மண்ணில் பரங்கிப் படைகள் அடியெடுத்து வைத்ததே அடாதெனக் கூறினுன். சுட்டுக்கொல்லப்பட்டான்; போர் மூண்டது; புதுமணம் புகுந்த மணமகன் பாதர்வெள்ளை, பாஞ்சையின் நிலை கேட்டுப் படுகளங் காண ஓடோடி வந்தான்; வீரப் போருடற்றினுன். காலன் துரையைக் காலனுக்கிரையாக்கித் திரும்பும்போது, செத்தவன்போற் படுத்திருந்த ஒருவன் குறிவைத்துச்சுட இறந்து விட்டான். மறுநாளும் வெள்ளையருக்கீடான படையின்றியும், பாஞ்சை மக்கள் நாட்டுப்பற்று நாடி முறுக்கேற்ற, வியத்தகு போர் விளைத்தனர். கட்டிய கோட்டை இடிந்தும்

கட்டபொம்மன் மனந்தளராமல் போரிட்டான். ஊமைத்துரையும் நெற்றியில் ஆழமான வெட்டுக்காயத்துடன் திரும்பினான். கருப்பன் என்பான் வெள்ளையரை எதிர்க்கக் காட்டிய வீரம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும்.

" சரிந்த குடலைவ யிற்றுக்குள் வைத்து
சல்லாச் சோமனை மேலேசுற்றி
வரிந்து வரிந்து மாருப்புக் கட்டி
மண்டி போட்டெழுந்து துடைதட்டி
விரைந்து விரைந்து கும்பினிப் படையை
விரட்டி யடித்துச் சாய்க்கிறான்
குதிரை யேறி யெதிரே வருவோரைக்
குத்தியே குப்புற மலத்துவான் "

இந்நெருக்கடியான நிலையைக் கண்டார் தானாபதிப்பிள்ளை. 'சிட்டுப்பறக்காத பாஞ்சால நாட்டில் சீரழிவு மெத்த ஆச்சுதென்றார்.' 'பொன்வாடை வீசிய பாஞ்சால நாட்டில் பிணவாடை வீசுதென வுரைத்தார்.' கோட்டைக்குள்ளிருந்து போரிடுவதைக் காட்டிலும், கோட்டையை விட்டு வெளியேறி, வீரர்களைத் திரட்டிப் போரிடுவதே நலமெனக்கூறி திட்டமும் தீட்டிக் கொடுத்தார். மன்னர் குடும்பத்தினர் மையிருளில் கோட்டை விட்டு வெளியேறினர். ஆறாத்துயர் சுமந்து நாகலாதபுரமடைந்தார். செய்தி யறிந்த வெள்ளையர் படை அங்குற்றுத் தானாபதிப் பிள்ளையின் தலையினை வெட்டி, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை வாயிலிலே வைத்தனர். திருக்களம்பூர்க் காட்டிலே கைது செய்யப்பட்ட கட்டபொம்மன் கயத்தாற்றில் பானர்மேன் தலைமையில் விசாரணை செய்யப்பட்டான். சிறைப்பட்ட சிங்கம் சீறிக் கொதித்தது; தூக்கிலிடப்பட்டது.

“ கட்டைப் புளிய மரந்தனி லேதுரை
கட்டபொம் மேந்திரனைத் தூக்கினராம்;
மொட்டான பாஞ்சைத் துரைவீர பாண்டியக்
கட்டபொம் மன்உயிர் போக்கினராம்.''

ஊமைத்துரையைச் சிறைப் படுத்திப் பாளையங் கோட்டைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் உற்றார் செய்த புரட்சியினால் ஊமைத்துரை விரைவில் விடுதலை யாயினான். பாஞ்சைப்பதி யடைந்து பாழடைந்த கோட்டையை,

‘ வரகு வைக்கோல் தான்சேர்த் துஅதில்
மண்போட்டுச் செம்மித் தான்மிதித்து
திறமுடன் கம்மங் கொம்மைகளைப்போட்டுச்
செப்பமிட்டு மதில் ஒப்ப மிட்டு
பஞ்சுப் பொதிகளை ஊடேவைத் துக்கம்பங்
கஞ்சிப் பசைகளைத் தான்கொடுத்து
அஞ்சிப் புவியோர்கள் கொண்டாட ’

ஆற்றல் சான்றதாக்கிய ஊமைத்துரை, மீண்டும் போர் முரசங்கொட்டினான். சிவகங்கை சின்ன மருது, பெரிய மருது ஆகியோருடன் சேர்ந்து கொண்டான். இறுதியில் சிறை செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு போகப்பட்டு தூக்கிலிடப்பட்டான்.

இதுதான் பாஞ்சைப்பதி வீரர்கள், நாட்டு வாஞ்சையால் நடத்திக்காட்டிய வீரப்போர் வரலாற்றின் சுருக்கம். காதைச் சுடுகின்ற இக்கதையைக் கேட்டு முடித்த பின்னரும், விடுதலை யுணர்வுடன் பொங்கி எழுந்த அவ்வீரர்களின் உரைகள் நமது செவிகளில் எதிரொலித்து நிற்கின்றன.

“ வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன்கொடுப்பேன்
சீனிச்சம் பாநெல்லு ஏன்கொடுப் பேன்அந்தச்
சீரக்ச் சம்பா நெல் ஏன்கொடுப்பேன்
என்னைப்போல் வெள்ளாண்மை இட்டானோதுரை
இங்கி லீசுவெள்ளைக் காரனுந்தான்
மன்னவன் கும்பினி வந்தாக் கால்கத்தி
வாள்முனை யில்கிஸ்திப் பணமென்றான்.”

வரிகேட்டு வந்த வெள்ளையனின் கடிதங்கண்டு புலி போல் சீறியெழுந்த ஊமைத்துரையின் வாயிலிருந்து உணர்ச்சியில் தோய்ந்தெழுந்த இத்தகைய உரைகளை நாம் எப்படி மறக்க முடியும்?

இதைப்போன்ற வரலாறுகளைக்கூறும் பாடல்கள் பல பனையோலைகளில் எழுதப்பட்டுச் செல்லுக்கிரை யாகி அழிந்து விட்டன. எஞ்சியிருக்கின்றவற்றை யேனும் தேடிப்பிடித்துச் சீரிய முறையிற் பதிப்பித்து வெளியிடுவோர் நாட்டுக்கும் மொழிக்கும் நற்பணி யாற்றிய பெருமையைப் பெறுவர்.

11. புதுப்புனல்

"ஆசைக்கொ ரளவில்லை" எனத் தொடங்கி அரிய உண்மைகளை விளக்கிய தாயுமான அடிகளின் பாவடிகளைத் தமிழகம் நன்கறியும். அழியாத ஆசை, ஆருத ஆர்வம், மாருத வேட்கை, மாயாத விருப்பம் – இவை மனித இயல்பின் அடிப்படை. இவ்வடிப்படையில் மனித உள்ளம் புதுமையை நாடுகின்றது. இந்நாட்டத்தின் விளைவாக வாழ்வின் துறைகளனைத்திலும் வியத்தகு மாற்றத்தைக் காண்கிருேம். இயற்கைச் செல்வங்களில் எத்தகைய மாற்றமும் இல்லையென்பது உண்மையே. அனலும் புனலும், கல்லும் புல்லும், அல்லும் பகலும், புள்ளும் புழுவும், மாவும் மரமும், செடியும் கொடியும், கதிரும் மதியும், வானும் கடலும் எத்தகைய மாற்றமுமின்றி, முன்னுளிருந்தபடியே இந்நாளும் இருந்து வருகின்றன, இவ்வியற்கைப் பொருட்களின் நுட்பத்தை ஆராயும் மனிதனும், அதே கையும் காலும், கண்ணும் காதும், வாயும் வயிறும் பெற்று வாழ்ந்து வருகிருன். ஆனல் அவனது சிந்தனையின் ஆற்றலும், உழைப்பின் உயர்வும் மாநிலத்தையே மாற்றி வருகின்றன.

மனித முயற்சியின் உயர்ச்சியானது பாலை வனத்தைப் பசுஞ்சோலையாக்கியுள்ளது; காடுகளை நாடாக்கியுள்ளது; மலைகுடைந்து வழி கண்டு, நிலங்குடைந்து நிதி கண்டுள்ளது; விண்ணை முட்டும் இல்லங்களையும், கண்ணைக் கவரும் சாலைகளையும் சமைத்துள்ளது; உணவிலே புதுமை! ஊர்தியிலே புதுமை! உடையிலே

புதுமை! நடையிலே புதுமை! அணியிலே புதுமை! அனைத்திலும் புதுமை! மாணவருலகின் புதுமை மனங்கொள்ளத் தக்கது. கதிரோன் எழுமுன் கண் விழித்துக், கடன் முடித்து நீராடி, ஏடெடுத்துக் கணக் காயரை யடைந்து, எழுத்தாணியால் பனையோலையில் எழுதிப் படித்துக், குறிப்பறிந்தொழுகிக் கேட்டவை நினைத்துப் பாடம் போற்றி, இருவென இருந்து, எழு வென எழுந்து, செல்லெனச்சென்று பயின்றுவந்தனர், பண்டைநாள் மாணவர். இன்றோ, பகலவன் அஞ்சப் பஞ்சணை விட்டெழுந்து, தேநீரருந்தி, அனைத்துக் கடன்களையும்அறையினுள் முடித்து, கருத்துக்கிசைந்த கண்கவர் நூலைக் கையினி லெடுத்து, ஊர்திகளிற் சென்று கல்லூரியடைந்து, மணியோசையியக்கப் புகை வண்டித் தொடர்போல் அணிபெற வகுப்பினுள் நுழைந்து, உரிமை வேட்கை மீதுற உலாவித் திரும்பு கின்றனர். இவ்வாறே, ஆடலிலும், பாடலிலும், மின் னியல், பொறியியல், அணுவியல், அறிவியல், மருத்து வம் போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் காட்டு கின்ற புதுமை வேட்கை வியத்தகு பயன்களை விளைத் துள்ளது.

இலக்கிய வரலாற்றில் இப்புதுமை வேட்கை விளைத் துள்ள அரும்பணியானது சிந்தையைக் கவர்வதொன் றும். இலக்கிய வளர்ச்சிக்கு இவ்வேட்கையே அடிப் படை யெனக் குறிப்பிடுதல் குற்றமாகாது. தமிழ் இலக்கியத்தில் நீண்ட கால வரலாறும், அவ்வரலாறு காட்டும் பல்வேறு இயல்புகளும் இவ்வுண்மைக்கு அரண் செய்வன. மிகப் பழங்காலத்திலேயே, பண்டைத் தமிழர் வாழ்வின் ஓவியமெனத் திகழும் தொல்காப்பி

யம், அரியதோர் இலக்கிய இலக்கணமாக எழுந்தது. அதற்குப் பின்னர், வாழ்வின்பல்துறைகளுக்கும் வழி காட்டிப் பொலிவூட்டும் வளமார் இலக்கண இலக்கிய மாகத் திருக்குறள் திகழ்ந்தது. வீரத்தையும் காதலையும் விழுமியதாகப் போற்றிய சங்க கால வித்தகர்கள், எட்டுத் தொகையையும் பத்துப்பாட்டையும் எழில் பொழி யத் தந்தனர். துளங்காப் புலமை இளங்கோவடிகள் போன்ருர், அரும் புகழ் பெருங் காப்பியங்கள் அளித் தனர். அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும் அருண்மொழி வாசகரும் அன்பு சொட்டப் பாடிச் சைவ நெறியைப் பரப்பினர். பத்தியில் மூழ்கிய ஆழ்வார்கள், தேசுலாவும் பாசுரங்கள் பொழிந்து வைணவத்தை வளர்த்தனர். கம்பனைப் போன்ற கவிவலார் என்று முள தென்றமிழின் எழிலினைப் பெருக்கினர். மெய்ப் பொருள் காண விழைந்த சித்தர்கள் சிந்தைக்கு விருந் தளித்தனர். பல்சமயக் கருத்துக்கள் பரவியிருந்த தமி ழகத்தில் தாயுமான அடிகள் போன்ருேர் சமரச கீதம் எழுப்பினர். உமறுப்புலவரின் சீருவும், வீரமா முனி வரின் தேம்பாவணியும், முறையே அரபு நாட்டிலே தோன்றிய நபிகள் பெருமான் அவர்களையும், யூதேய நாட்டு இயேசுநாதர் அவர்களையும் தமிழகத்திற்கு அறி முகம் செய்து வைத்தன. இவை மட்டுமின்றி, ஆனை யாயிரம் அமரிடை வென்ற மானவர் மீது பாடப்பட்ட பரணிகள், ஏழு பருவத்துப் பெண்களும் காதல் கூர உலா வரும் எழிலார் தலைவன்மீது பாடப்படும் உலாக் கள். பிஞ்சுமனக் குழவிகளின் நெஞ்சுயர்வறிந்து பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகக் கண்டு போற் றும் பிள்ளைத் தமிழ்கள், பதினெண் உறுப்புகள் அமையக் கூறும் கலம்பகங்கள் கட்டளைக் கலித்

துறையில் அகப்பொருள் கூறும் கோவைகள், பண்ணை வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் பள்ளுகள், மலைவளம் கூறி மனதைக் கவரும் குறவஞ்சிகள், —என் றிவ்வாறாக எத்தனையோ இலக்கிய வகைகள் பைந் தமிழ்ச் சோலையின் பசுமையைக் கூட்டுகின்றன. இந் நிலைக்குரிய அடிப்படைக் காரணத்தை ஆராய்வோர் புதுமை வேட்கையின் பயனை எளிதில் உணர்வர். முன்னோர் கையாண்ட முறைகளிலிருந்து ஒரு மாற்றத்தை விழைந்த பின்னோர் நெஞ்சமே, இப்பல் சுவைச் செல்வங்களைப் பயந்துள்ளது. இப்புதுமை புகாமலிருப்பின், தேன்சுவை இலக்கியம் தேங்கிக் கிடந்து தெவிட்டிப் போயிருக்கும்.

ஒரே பொருள் குறித்துப் பெருங் காவியங்கள் வரைய முற்பட்டோருக்கும் இவ்வேட்கையே உணர்ச்சி யூட்டியிருக்கிறது. சங்க காலத்தில் பெருந்தேவனா ரொருவர் பாரதம் பாடியதாக அறிகிறோம். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த பெருந்தேவனா ரொரு வர் வெண்பாயமைப்பில் பாரதத்தைப் பண்பாகப் பாடி னார். வில்லியார் அதனை விருத்தப்பாவால் விளக்கினார். நல்லாப் பிள்ளையும் அரங்கநாதக் கவிராயரும் அத் துறைக்கே அணிசெய்தனர். பாரத வசனம், பாரத நாடகம், பாரத கீர்த்தனம், அம்மானை, பாரத விலாசம், பாரத தாற்பரிய சங்கிரகம், போன்ற பல நூல்கள் எழுந்தன. எனினும், பாரதியின் பாஞ்சாலி சபதத்தைப் படிக்கும்போது இலக்கியச் சுவையின் உயர்வினை உணர்கிறோம். பாரதியின் சிந்துநடை நமது சிந்தை யைக் கவர்கிறது. அவனது கற்பனையின் புதுமை நம்மைக் களிகொள்ளச் செய்கிறது. அவனது உவ

மையின் உயர்வு நமக்கு வியப்பூட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தின் வளர்ச்சியில் புதுமை கண்ட பயன் இது.

ஒரே எண்ணத்தை வெளியிட விரும்பிய புலவர்கள் பலரும் இவ்வேட்கை மீதுர இலக்கியச் சுவையை இனிது பெருக்கியுள்ளனர். எடுத்துக் காட்டாகத் தமிழகத்தின் எல்லையைக் குறிக்க, வந்த புலவர்களைக் காண்போம். அவ்வெல்லையைக் குறிக்க அவர்கள் கையாளும் சொல்லை ஆராயும்போது, அவர்கள் வாழ்ந்த காலத்தின் இயல்பையும் அவர்தம் தனிப்பட்ட பண்பையும், அனைத்திற்கும் மேலாக அவர்களின் புதுமை வேட்கையையும் அறிந்து மகிழ்கின்றோம். பழம்பெரு நூலாம் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் வழங்க வந்த பனம்பாரனுர்,

"வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனக் குறித்தார். உள்ளதை உள்ளவாறே கூறும் பழங்காலத் தன்மை நவிற்சியி னியல்பினை இத்தொடருள் காண்கிறோம். சித்திரச் சிலப்பதிகாரம் தந்த செஞ்சொல் லோவியரோ,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்பதாகக் கனிவுடன் கூறிக் கற்பனையிலே அடியெடுத்து வைத்தார். பின்னர், இக்கற்பனையானது செழிப்புற வளர்ந்து பாரதியின் பாவடியில் பூத்துப் பொலிவதைப் பார்க்கிறோம்.

"நீலத் திரைக்கட லோரத்திலே–நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை–வட
மாலவன் குன்றம் இவற்றிடையே–புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு"

பாட்டுத்திறத்தால் வையத்தைப் பாலித்திட விரும்பிய பாரதி, காவியத்தில் தீட்டும் ஓவியமாக இப்பகுதி அமைந்துவிடுகிறது. பாரதத்தின் தென்பால் பரந்து விரிந்து கிடக்கும் நீலக் கடலைக் காட்டி, அக்கடலலைகள் கவரி விச இடையருது நெடுந்தவமியற்றும் குமரியைக் காட்டி, வட திசையின் மாலவன் மலையைக் காட்டி, இவற்றிடையே புகழ் செறிந்து கிடக்கும் புனிதத் திரு நாட்டைக் காட்டித் தன்னைப் பாட்டுக் கொரு புலவனுகக் காட்டுகின்ருன் பாரதி. இத்தகைய தாய்த் தமிழகத்தின் சேய்கள் வாழும் நாடுகள் பற்பல. அவற் றுள் தாமரை மொட்டுப்போல் தாயின் அடியைத் தொட்டுக் கிடக்கும் இலங்கையையும் இணைக்க விரும்புகின்ற இன்றைய கவிஞனின் கற்பனை கனி வடைந்து கவிதையாகப் பொங்கி யெழுகின்றது.

"பங்கயத்துக் குமரிமுனைப் பாதம் சேர்த்தாள்
பசும்பொன்முடி வேங்கடத்தைப் புனைந்தங் கார்த்தாள்
பொங்கிவரும் காவிரியை இடையில் கோத்தாள்
புறமூன்றும் கடற் கன்னி பணியப் பார்த்தாள்
மங்கலம்சேர் மேலைமலைச் செங்கோ லுற்ருள்
மலர் மொட்டுலங்கையெனும் மகளைப் பெற்ருள்...."

என்பதாகத் தமிழ்க்குமரியின் அடியையும், முடியையும், இடையையும், செங்கோலையும், முப்புறங்களும் கவரி வீசுவதுபோல் விளங்கும் கடலையும் கவின்பெறக் காட்டுவதுடன் இலங்கையையும் புதல்வியாகப் புனைந்துரைக்கக் காண்கிருேம்.

இது போன்றே ஒரே உவமையைக் கையாண்ட புலவர்கள் பலரும் புதுப் புது வடிவங்களையும் புதுப்

புதுச் சொற்களையும் கையாண்டு சுவையைப் பெருக்கி யுள்ளனர். மாதர்தம் மொழியையும் விழியையும், நடையையும் தோற்றத்தையும், தேன், மீன், மான், மயில் போன்றவற்றுடன் ஒப்பிட்டுக் கூறுதல் பழைமையான வழக்கெனினும், அதே கருத்தைப் புதுச் சொற்களில் புதுமுறையில் கூறும்போது கவர்ச்சி ஏற்படக் காண்கிறோம்.

''மானைப் பழித்த விழியுடையாள்-ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்-இவள்
தெய்வமோ எனத்தகும்திருவுடையாள்.''

என்றார் கவிமணி.

''மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக்கில்லை
மீன்விழி உடையா ளென்றால்
மீனிலே கருமை யில்லை
கூன்பிறை நெற்றி யென்றால்
குறைமுகம் இருண்டு போகும்''

என்று தொடங்கிச் செல்வது நாமக்கல் கவிஞரின் கற்பனை. ''தாமரை முகம்'' என்னும் கற்பனை கவிஞர்களின் உள்ளங்களிலே ஊறிப்போன தொன்று. எனினும், இன்று,

''தாமரை பூத்த குளத்தினிலே–முகத்
தாமரை தோன்ற மூழ்கிடுவாள்''

எனக் கவிஞர் பாடும்போது புதுமையின் பொலிவைப் பார்க்கிறோம்.

இவ்வாறு ஒரே பொருளைப் புதிய பல முறைகளிலும், புதிய பல சொற்களிலும் அமைத்துக் காட்

டுவதுடன், நெடு நாட்களாக நிலைத்து வருகின்ற ஒரு கருத்தை அப்படியே மறுத்துரைக்கின்ற புதுமையையும் பார்க்கின்றோம். மனிதனின் சிந்தனைச் சிறப்பினால் கணந்தோறும் மாறுபட்டுவரும் மாநிலத்தில், கருத்து களில் புதுமை புகுவதும் இயல்பேயாகும். இன்றைய புதுக் கருத்துகள் நாளையும் இவ்வாறிருக்குமோ வென் பதும் ஐயத்திற்குரியதே. ஒவ்வொரு காலத்திலும் இடம் பெறுகின்ற புதுக் கருத்துகள் இலக்கியத்திலும் இடம்பெறக் காண்கிறோம். "மன்ன னுயிர்த்தே மலர் தலை யுலகம்" என்பதாகப் புறநானூறு உயிரெனப் புகழ்ந்துரைக்கின்ற மன்னன், இடைக் காலத்தே, உடம்பெனக் கருதப்பட்டான். இன்றோ, "எல்லோ ரும் இந்நாட்டு மன்னர்" என்னும் அளவுக்கு, அக் கருத்தும் மாறுபட்டுள்ளது. அன்று ஆத்தி சூடியில், "மீதுண் விரும்பேல்" என்பதாக ஔவையார் கூறிய அறவுரை, இன்று புதிய ஆத்தி சூடியில், "ஊண் மிக விரும்பு" என்பதாக அமைந்துள்ளது.

சொற்களின் அமைப்புகளிலும், அணிகளிலும், கருத்துகளிலும், கற்பனைகளிலும் புதுமை புகுவதை இலக்கிய இலக்கண ஆசிரியர்கள் எதிர்பார்த்துள் ளனர். அவ்வாறு புதுமை புகுவதற்கு வழியும் வகுத் துள்ளனர்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையினானே"- என்பது நன்னூல். காலத்தின் சுழற்சியினால் ஞாலத்திலுண்டாகும் மாற்றங்களை யுணர்ந்தே பவணந்தியார் இவ்வாறு பகர்ந்துள்ளனர். ஆனால், "புதுமை! புதுமை!! என்

னும் ஆரவாரத்தில் மயங்கிப்போய்ப் பழமை யெனக் கேட்டதும் படமெடுத்தாடுவது விரும்பத் தக்கதல்ல. பாருலகின் பெருவாழ்வுக்குரிய நிலையான அடிப்படைகளை-உயிர்நாடி போன்ற உண்மைகளை-பண்டையோர் யாத்த கண்டை நிகர் இலக்கியங்களில் கண்டு மகிழ்கிறோம். அத்தகைய கருத்துகள், என்றும் எத்தகைய மாற்றமும் அடையப்போவதில்லை. "என் தாய் முதிர்ச்சி யுற்றுவிட்டாள்; எனக்கு இளந்தாய் வேண்டும்" என்றியம்புவோரை எங்கும் காணமுடியாது. ஒரு நாட்டின் பெருமைக்கு அந்நாட்டின் பழமையும் ஓரேதுவாகும். இக்கருத்தினை யுள்ளடக்கியே கொற்றவன்குடி உமாபதி சிவனார்,

"தொன்மையவா மெனுமெவையும் நன்றாகா
இன்று தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா"

எனக் கூறிப் போந்தார்.

இன்று இலக்கியத்துத் தோன்றியுள்ள புதுமைகளுள் தலையாயதாகக் குறிப்பிடத் தகுந்தது, இலக்கிய நடையின் எளிமையேயாகும். ஆட்சியினை மேற்கொண்ட அரசர்களும், ஆதரித்துக் காப்பதற்குரிய பெருநிலக்கிழார்களும், புலமை நலம் பெருகி நின்ற பெரும் புலவர்களும் படித்துணர்ந்து பாராட்டுதற்காகவேபெரும்பாலானஇலக்கியங்கள்வெளிவரலாயின. எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களின் இலக்கியச் சுவையனைத்தும், வாய்மொழியாக வழங்கப்பட்டுவந்த நாட்டுப் பாடல்களிலே தோய்ந்து கிடந்தன. மன்னராட்சி மாறி, குடியாட்சி யோங்கி, மூலை முடுக்குகளெல்லாம் அறிவுச் சுடர் பரவி வரும் இக்காலத்தில், எழுதப் படிக்கத்தெரிந்த எல்லோருமே இலக்கியத்தில் ஈடுபாடு

கொண்டுள்ளனர். உரைநடை யாயினும், செய்யு ளாயினும் எல்லோரும் படித்துணரப் பயன்படவேண்டு மென்ற ஆர்வம் மேலோங்கியுள்ளது. ஓடி விளையாடும் பாப்பா முதற்கொண்டு ஆடி அடங்கிய பாட்டா வரையி லே, இலக்கியத்தில் ஆர்வம் காட்டக் காண்கிறோம். அறிவியற் கலைஞர்கள், பொருளியல் வல்லுநர்கள், அரசியல் அறிஞர்கள், மெய்ப் பொருள் மேதைகள், சீர்திருத்த சிற்பிகள் போன்றோரெல்லாம்தத்தம்கருத்து களை இலக்கியச் சுவை ததும்ப எழுதவும் பேசவும் காண் கின்றோம். செய்தித் தாளுலகில் சிறுவர் பகுதி, தொழி லாளர் பகுதி, தத்துவப் பகுதி போன்றதெதுவாயினும் இலக்கிய நயம்பட அமைவதைப் பார்க்கிறோம்.

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு—அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி" - இதுபோன்று இன்று குழந்தைகள் பாடிப் பரவசமடைதற் கேதுவான பாடல்கள் பல தோன்றி வருகின்றன. மொழிப் பற்றற் றோர் விழிப்புற்றுணரவும், நாட்டுணர்விழந்தோர் நாடி முறுக்கடையவும், சமூக வாழ்வினுள் நுழைந்து விட்ட கண்மூடிப் பழக்கங்களை மண் மூடிப் புதைக்கவும்,வாழ் வின் பொலிவுக்கு வழிவகைகளைக் காட்டவும் எளிய நடையில் எழிலார் நூல்கள் நாள்தோறும் வெளிவரக் காண்கிறோம். கட்டுரைகள், கதைகள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள் அனைத்திலும் இத்தகைய புது நடையும் பெரும்பயன் விளைத்துவரப்பார்க்கிறோம்.

தெறுகதிர்ச் சுடரோன் நடுநின்று காய, நெடுநில மனைத்தும் நீர் வற்றி வறண்டு, உயிரின மனைத்தும் கதிகலங்கும் வேளையில், குடி மக்களெல்லாம் வான் நோக்கி வாழ்வதியல்பு. அந்தநேரத்தில், மின்னி

மேகம் பரவி, இடியிடித்து மழை பொழிந்து, ஆற்றிலே நீர் திரண்டு, புதுப் புனலாகப் புரண்டு வருகின்ற காட்சியைக் காணும் உழவர்களின் உள்ள மகிழ்வுக்கு அளவே இல்லை. இது போன்றே இலக்கிய உலகிலும், வளங்குறைந்து வறட்சி ஏற்படுவதுண்டு. அத்தருணத்தில், புதுமை யெனும் புதுப்புனல் பாய்ந்து, செழுமையும் கொழுமையும் சேர்த்து வளமும் வனப்பும்ஊட்டுகிறது. இத்தகைய புதுப்புனலே இலக்கிய வளர்ச்சியின் உயிர்நாடி யெனக் கொள்ளுதல் வேண்டும். புதுமை வளர இலக்கியம் வளரும். இலக்கியம் வளரத் தமிழ் மொழி வளரும். தமிழ் மொழி வளரத் தமிழகம் வளரும். தமிழகம் வளரத் தாரணி வளரும்.

———

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	6	உழவன்,	உழவன்.
,,	24	பொருத்ததே	பொறுத்ததே
,,	25	ஔவைபாட்டி	ஔவைப்பாட்டி
3	6	குறியதாகிறது.	குரியதாகிறது
,,	23	நாகரீகத்தை	நாகரிகத்தை
,,	24	தெள்ளுதமிழ்	தெள்ளுதமிழ்க்
7	15	மலையா	மலாயா
8	12	தமிழகம்.	தமிழகம்,
,,	26	சாத்தனார்.	சாத்தனார்,
9	2	புத்தபிரான்	புத்தர்பிரான்
10	9	விட்டால்'	விட்டால்,
13	2	வெளிவருகிறது.	வெளிவருகிறது.'
15	6	வள்ளல்.	வள்ளல்,
19	3	பாரதி	பாரதியின்
,,	21	இறைவனைத்	நந்தலாலாவைத்
21	5	இலகுகின்ற	இளகுகின்ற
31	17	புருடோத்தவன்மன்	புருடோத்தமன்
32	7	சாமி !	சாமீ !
59	29	கஹ.	க்கஹ.
93	17	இன்னொருத்தி	இன்னொருத்தி.
122	15	வருகின்றன,	வருகின்றன.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
123	15	மீதுற	மீதூற
,,	17	பொரியியல்	பொறியியல்
,,	25	இலக்கியத்தில்	இலக்கியத்தின்
124	26	உலாக்கள்.	உலாக்கள்,
125	18	வெண்பாயமைப்பில்	வெண்பாவமைப்பில்
126	5	மீதுர	மீதூற
,,	6	குறிக்க,வந்த	குறிக்கவந்த
127	5	கவரி விச	கவரி வீச
129	15	மீதுண்	மீதூண்
130	13	நூலேனு	நூலெனு